Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 20.

எல்லாவித மின்சார வேலைகளுக்கும்
எங்களைக் கலந்து ஆலோசியுங்கள்

சிலோன் எலக்ரிக்கல்ஸ்

180, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

# ஈழநாடு

சுதந்திர வார இதழ்

மலர் 1. யாழ்ப்பாணம், விளம்பி, மாசி 9-ஆம் நாள். (21-2-59) இதழ் 3.

# இலங்கையில் நடப்பது ஜனநாயகமா?

## அடுத்தது தேர்தலா? சர்வாதிகார ஆட்சியா?

### பலதுறைகளிலும் வகுப்புவாத நடவடிக்கைகள்!

— நமது அரசியல் நிருபர் —

**பண்டா—பிலிப், என். எம். இவர்களிடையே ஓர் அரசியல் சமரசம் ஏற்படுத்த இலங்கையின் 'சாணக்கியர்' (சேர். ஒலிவர்) முயன்றுவருவதாக ஒரு பலத்த வதந்தி இருந்துவருகிறது.**

"வருகிற மார்ச்சு மாதத்தில் எம். ஈ. பி. கட்சியின் வருடாந்த மாநாடு நடைபெறுகையில், அக்கட்சியிலுள்ள வலதுசாரிகள் பிளவுபட்டுப் பிரிந்தார்களாயின், அதனல் ஏற்படும் நஷ்டத்தை, எல். எஸ். எஸ். பி. பலத்தைக்கொண்டும் டாக்டர் என். எம். அவர்களின் செல்வாக்கையும் கொண்டும் ஈடு செய்துவிட முடியுமா? பண்டாவின் தலைமையிலே அரசியல் தேரைத் தொடர்ந்து ஓட்ட முடியுமா? என்பதே அந்த 'சாணக்கியரின்' எண்ணம் என்று கருத்துப்பட 'ஒப்சேர்வர்' பத்திரிகையில் அரசியல் விமர்சகர் எழுதுகின்றார்.

இந்த வதந்தி முற்றிலும் ஆதாரமற்றதா? அல்லது இதிலேதும் உண்மையுண்டா?

சென்ற வாரம் சனப்பிரதிநிதிகள்சபையில் "ஆள் தூக்கி"ப் படலத்தையும் அதை ஒட்டிய அமளிகளையும் கண்டவர்கள், பண்டாவும், என். எம். அவர்களும் இனி அரசியல் சத்துருக்கள் ஆகிவிடுவார் என்றே அஞ்சும்படியாகவிருந்தது.

ஏற்கெனவே செய்திருந்த ஏற்பாட்டின்படி எதிர்க்கட்சித் தலைவரின் தொகுதியான ருவான்வலையிலே கிராமாபிவிருத்தி விழாவுக்குப் பண்டா செல்லுவாரா? அப்படிச் சென்றாலும் என். எம். அவருடன் பேசி விருந்து உண்பாரா? என்று பல பல சந்தேகங்கள் எழுந்தன.

ஆனல் இவ்விரு தலைவர்களும் அவ்விழாவில் கலந்து கொண்டது மட்டுமன்றி இருவரும் நட்புடன் தழுவிக் கொண்டு, சேர்ந்து விருந்து உண்டு அளவளாவினர். இதையெல்லாம் காணும்போது, இப்போது இரு தலைவர்களுக்கும் வாய்ச்சண்டைகள் எவ்வளவு நடந்தாலும் இருவரும் அவசியம் ஏற்படின் தங்களது வேற்றுமைகளை மறந்து ஒருகூட்டு அரசியல் ஏற்பாட்டைச் செய்து ஒத்துழைப்பது சாத்தியமே என்று தோன்றுகின்றது. மேலும் பொருளாதாரக் கொள்கைகளைப் பற்றியவரையில் டாக்டர் என். எம். அவர்களுக்கும் முதலமைச்சருக்கும் அமைச்சர் பிலிப்பின் கட்சிக்கும் அதிக வேற்றுமைகள் கிடையாதென்பதும் குறிப்பிடத் தக்கது. ஆனல் இது ஏற்படுவதற்குப் பலத்த எதிர்ப்புகள் இருக்கும்.

இது எப்படியாயினும், ஆள் தூக்கிப் படலம் முடிந்த இரண்டு நாட்களுக்குள்ளாக முதலமைச்சரும், எதிர்க்கட்சித் தலைவரும் மனதிற் கசப்பு எதுவும் இன்றி, ஒருவரையொருவர் தழுவிக்கொண்டு, கிராமாபிவிருத்தி விழாவில் கலந்து கொண்டு விருந்துண்ட செயல் நல்ல முன் மாதிரியாகும். இதற்காக அவ்விரு தலைவர்களையும் பாராட்டவேண்டும்.

**உண்மை ஜனநாயகமா?**

ருவான்வலை கிராமாபிவிருத்திச் சங்க விழாவில் முதலமைச்சர் பேசுகையில் ஜனநாயகத்தில் உள்ள சில குறைகளைக் கூறினர். சென்றமுறை அவர் இந்தியா சென்றிருந்தபொழுது

(9ஆம் பக்கம் பார்க்க)

## வேலை நிறுத்தம் ஏற்படுமா?

### "இரு தலைக் கொள்ளி எறும்புகள்"

— நமது கொழும்பு நிருபர் —

பாதுகாப்புத் திருத்த மசோதாவை எதிர்த்து வேலை நிறுத்தம் நடந்தால் அதில் நீங்கள் சேருவீர்களா என்று கொழும்புக் காரியாலயம் ஒன்றில் வேலைபார்க்கும் ஒரு தமிழ் உத்தியோகத்தரைக் கேட்டேன். "இதில் சேர்ந்தாலும் சங்கடம், சேராவிட்டாலும் சங்கடம்" என்றும் இருதலைக் கொள்ளி எறும்புபோல் தங்கள் நிலை இருப்பதாகக் கூறினர்.

வேலைநிறுத்தத்திற் சேர்ந்தால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று நிதி அமைச்சர் ஒருபக்கம் எச்சரிக்கை செய்துள்ளார். வேலை நிறுத்தத்திற் சேரும் தமிழ் உத்தியோகத்தரைமட்டும் நீக்குவதென்று வகுப்புவாதமுறையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு, அரசாங்கத்தில் உள்ள தமிழ்பேசும்உத்தியோகத்தரின் எண்ணிக்கையைக் குறைக்க இச்சந்தர்ப்பத்தைச் சில வகுப்புவாதிகள் பயன்படுத்துவதும் சாத்தியம்.

இதற்கு மாருக வேலை நிறுத்தத்திற் சேராமல், காரியாலயத்துக்குச்சென்ருலோ, காடையர்களின் தாக்குதல்களுக்கு உள்ளாக வேண்டியிருக்கும். இதிலிருந்து தங்களைப் பாதுகாக்கும் சக்தி அரசாங்கத்துக்கு உண்டு என்ற நம்பிக்கை அவர்களுக்கு இல்லை.


இதற்கிடையிலே வேலைநிறுத்தம்பற்றித் தொழிற் சங்கங்களுக்கிடையில் வேற்றுமைகள் ஏற்பட்டுள்ளன. 12 யூனியன்கள், எந்த நடவடிக்கையிலும் ஒத்துழைக்கத்தயார் என்று அறிவித்துள்ளது. இரு யூனியன்கள் அரசாங்கத்தை ஆதரித்து நிற்பதாக உறுதி கூறியுள்ளனவாம்.

தொழிற்சங்கக் கூட்டு மாநாடும் அவசரமாகக் கூடி, பொது வேலைநிறுத்தம் வந்து, முதலாளிகள் கடும் நடவடிக்கை எடுத்தால், மெதுவாக வேலைசெய்வது முதலிய போட்டி நடவடிக்கைகளைப் பற்றி விவாதித்துள்ளதாகத் தெரிகிறது.

பொது வேலைநிறுத்தம் வரலாம் என்ற செய்தி வெளியானதுமே, பொதுமக்களுக்கு அதிக கவலை. மண்ணெண்ணெய் முதலிய அவசிய தேவைகளை வாங்கிவைக்க அவசர அவசரமாக முற்பட்டனர்.

வருகிற திங்கட்கிழமை பல தொழிற்சங்கங்களும், வேலை நிறுத்தம்பற்றி முடிவான தீர்மானம் செய்யும். இச்சமயம் நீடித்த வேலைநிறுத்தம் செய்வது உசிதமல்லவென்றும் தங்கள் கௌரவத்தைக் காத்துக் கொள்ளவும் ஆட்சேபத்தைக் காரியபூர்வமாகத்தெரிவிக்கவும் ஒருநாள் அடையாளவேலைநிறுத்தம்மட்டும் செய்யத் தீர்மானிக்கலாமென்றும் நம்பப்படுகிறது.

ஒரு ரூபாவுக்கு மிகுதியான மைல்கள்




பிரிட்ஜ்ஸ்டோன் டையர்கள் மோட்டார்த் தேவைகள் எல்லாவற்றையும் திருப்தி செய்யும் வண்ணம் உற்பத்தியாக்கப்பட்டிருக்கின்றன.

ஏக விகியோகஸ்தர்கள்:

ஓட்டோஸ் லிமிடெட்

யாழ்ப்பாணம்

போன்: 496 தந்தி: "ஓட்டோஸ்"

## "அடுத்த புரட்சியின்போது அவருக்கு வயிற்றுவலி வந்துவிடும்"

### டட்லி பற்றி சேர் ஜோன் பரிகாசம்

— நமது கொழும்பு நிருபர் —

கொழும்பு

சிலமாதங்களாக லண்டன் பரிஸ் முதலிய இடங்களில் இருந்துவிட்டு இலங்கைப் பார்லிமென்டிலும் அரசியலிலும் கலந்து கொள்ளச் சென்ற வாரம் கொழும்பு திரும்பினர் சேர் ஜோன் கொத்தலாவலை. அவர் உடல்நலமின்றி இப்போது ஆஸ்பத்திரியிற் சிகிச்சைபெற்று வருகிருர்.

அவர் முதலமைச்சராக இருக்கையில் அவரைச் சுற்றியிருந்த கூட்டம் எவ்வளவு! இப்போது ஒரு சில நெருங்கிய நண்பர்களைத் தவிர அவரிடம் வருபவர் மிகமிகக் குறைவு. என்னே அரசியல் வாழ்வு!

"1961-ம் ஆண்டிலே பொதுத் தேர்தல் நடைபெருவிடில் அரசாங்கத்தை எதிர்த்துப் புரட்சி செய்யப் போவதாக டட்லி சேனநாயக்க கூறியிருக்கிருரே, அது பற்றித் தங்கள் கருத்தென்ன?" என்று ஒரு பத்திரிகைக்காரர் அவரை அணுகிக் கேட்டாராம்.

அதற்குச் சேர் ஜோன் அளித்த பதில்: "என்ன, மற்ரெரு புரட்சியா? 1956-ம் ஆண்டு பண்டாவை முதலமைச்சராக்கி விடுவதற்காக, டட்லி ஒரு புரட்சி செய்தார். இப்போது பண்டாவை வீழ்த்த மற்ரெரு புரட்சியை நடத்த விரும்புகிருர்! ஆனல் புரட்சி செய்யவேண்டிய சமயம் வரும் போது அவருக்கு மற்ரெரு வயிற்றுவலி வந்துவிடும்" எனப் பரிகாசம் செய்தார்.

**தமிழுக்கு இடம்**

சென்ற புதன்கிழமையன்று சுதந்திர மண்டபத்தில் மகா தேசாதிபதி ஆரம்பித்து வைத்த வித்தியோதயா சர்வகலாசாலையில் தமிழும் கற்பிக்க ஏற்பாடுகள் நடந்து வருவதாக அறிகிறேன்.

அங்கு சிங்களம், பாளி, சமஸ்கிருதம், இந்தி முதலிய பல மொழிகள் கற்பிக்கப் பேராசிரியர்களை நியமித்துள்ளனர். சமஸ்கிருதம், இந்தி இவற்றைப் போதிக்க இந்தியாவிலிருந்து. இருவரை நியமித்திருப்பதாயும் அங்கு தமிழ் கற்பிக்கத்தக்கவரை நியமிக்க முயற்சிகள் நடப்பதாகவும் தெரிகிறது.

பௌத்த பிக்குகளாற் பழைய குருகுல முறையில் நடைபெறவிருக்கும் இச் சர்வகலாசாலையில் தமிழுக்கும் இடம் அளிப்பது வரவேற்கத்தக்க நல்ல அறிகுறியாகும். தமிழ் படிக்கப் பல பிக்குகள் ஆவலுடன் இருக்கின்றனர்.

"நாம் அனைவரும் பெருமை கொள்ளும்படியான ஒரு நல்ல சர்வகலாசாலையாக இந்தத்தாபனம் வளரும்படி எல்லா முயற்சிகளும் செய்யப் பணிவுடன் வேண்டுகிறேன்" என்று சேர் ஒலிவர் இவ்விழாவிற் பேசுகையில் கேட்டுக்கொண்டார்.

இந்நாட்டிலே தமிழ்மொழிக்குக் கண்ணியமான இடம் கிடைக்கும்படியும், மொழி

(16ஆம் பக்கம் பார்க்க)

**விற்பனைக்கு**

Z 4994 (Morris Eight) மொறிஸ் எயிற் கார் விநோதன்ஸ் அன் கோ, யாழ்ப்பாணம்.

திறமான இரும்புப் பெட்டிகள் வேண்டுமா? எவர் சில்வர் மாளிகை, **241**, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

**எவர்** சில்வர் பாத்திரங்களுக்கு எவர் சில்வர் மாளிகை, 241, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

வேலைப்பாடுகள் அமைந்த திறமான இரும்புக் கேற்றுகள் வேண்டுமா? எவர் சில்வர் மாளிகை, **241**, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

**வான்** EL நம்பர் Station Wagon த. பெ. இல.49.

**உ**த்தரவாதமுள்ள நகைகளுக்கு, து. கிருஷ்ணசாமி அன் பிறதர், 55, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

**கு**றித்த தவணையில் விரும்பிய டிசைனில் ஆடர் நகைகள் செய்வதற்கு, **து**. கிருஷ்ணசாமி அன் பிறதர், **55**, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

**புதிய** டிசைன் நெக்கிலஸ் முதலியன வேண்டுமானல், து. கிருஷ்ணசாமி அன் பிறதர், 55, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

**தேவை**

**யாழ்ப்பாணம்** மாநகரசபை எல்லைக்குள் சிறு வீடு வாடகைக்கு தேவை த. பெ.இல. 49

**சிறந்த** போட்டோக்களுக்கு பாரத் ஸ்ரூடியோ கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## ஈழநாடு வரிவிளம்பரம்

★ திருமண அறிவிப்பு
★ நன்றி தெரிவித்தல்
★ விற்பனவு
★ கொள்வனவு

ஆகியவற்றை
இப்பகுதியில் விளம்பரம் செய்துகொள்ளலாம்.

**ஒருமுறை விளம்பரம் செய்வதற்கு முதல் 20 சொற்களுக்கு ரூ. 3-50. மேற்கொண்டு ஒவ்வொரு சொல்லுக்கும் சதம் 15.**

மற்றும் வியாபார விளம்பர விகிதங்களுக்கும் ஒப்பந்த நிபந்தனைகளுக்கும் எழுதுக.

**ஈழநாடு வரிவிளம்பரப் பகுதி,**
தபாற் பெட்டி எண் 49,
**யாழ்ப்பாணம்.**

## 35 வருடகாலமாக நடந்து வரும் விஷகடி வைத்தியசாலை

தற்போது முன்னிருந்த இடத்தைவிட்டு
அதற்கருகாமையில் உள்ள

**குருக்கள் மடம்**

என்ற விலாசத்திற்கு மாற்றப்பட்டிருக்கிற
தென்பதை பரோபகார சிந்தையுடன்
தெரிவிக்கின்ருேம்.

## திரு. நா. அருணசலதேசிகர்

“அருணகிரி”

**மாதகல்**

## தேவை

இலங்கையில் எல்லா மாகாணங்களிலும் ‘ஈழநாடு’ விற்பனை செய்வதற்கு விற்பனையாளர் தேவை.

கீழ்க்காணும் விலாசத்திற்கு விண்ணப்பம் செய்யவும்.

ஈழநாடு விநியோக மனேஜர்,
**ஈழநாடு**
தபாற் பெட்டி எண் 49,
யாழ்ப்பாணம்.

**ப**ண்டித நேருவின் வாரிசு யார்? சிலவருட காலமாக இக் கேள்வி கேட்கப்படுகின்றது. தென்கிழக்கு ஆசியாவில் உள்ள பல நாடுகள் கடந்த பதினொருவருட காலத்துள் பொறுப்பாட்சி ஈட்டியிருக்கின்றன. இவைகளுள் பாரதத்தைத் தவிர்ந்த ஏனைய நாடுகளின் அரசாங்கங்களிற் பல மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. சில நாடுகளில் சனநாயக முறை மாறி இராணுவ சர்வாதிகார ஆட்சிமுறை நிலவுகின்றது. மற்றைய நாடுகளில் அன்றிருந்த அமைச்சரவை இன்று காணேம். பாரத நாட்டிலும் பல வகுப்புவாதப் பூசல்கள், கட்சி வேறுபாடுகள், கிளர்ச்சிகள், குரோதங்கள் இடம்பெற்று இருக்கின்றன. ஆயின் அவற்றையெல்லாம் வெற்றிகரமாகச் சமாளித்து அன்றிலிருந்து இன்றுவரை முதலமைச்சராய் ஆட்சி நடத்தி வருகின்ருர் நேருஜி அவர்கள். ஓர் உபகண்டத்தின் தலைமைப் பதவியை வகித்தற்கேற்ற சிறந்த அரசியல் தந்திரி அவர். பண்டித நேருவை எவ்வெவர் எவ்விதம் தூற்றியபோதிலும் அவரில் காணப்படும் அரசியல் தந்திரத்தைமட்டும் போற்ருதார் இல்லை.

அவரது அரசியல் தந்திரம் பலதடவைகளிற் சுடர்விட்டுப் பிரகாசித்துள்ளது. காங்கிரஸ் கட்சியினரும், அமைச்சர் அவையினரும் அரசியலில் ஊக்கம் இன்றி ஒற்றுமை குறைந்தோராய் தம்முள் பிணக்கிட்டுக் கட்சிக் கொள்கைகள் வலியிழந்து காங்கிரஸ் ஆட்சிக்குச் சமாதிகட்ட நேரம் வந்துவிட்டதென எதிரிகள் கொக்கரித்த போது இதோ முதலமைச்சர் பதவியைத் துறக்கின்றேன் என அணுக்குண்டொன்றைத் தூக்கிப்போட்டு இந்த அவனியையே ஒரு கலக்குக் கலக்கினர் நேரு. பயன்? காங்கிரசினரும், அமைச்சரவையினரும் விழிப்புற்று, தம்முள் ஒற்றுமையுற்ருேராய் இந்த நிலையில் நேருவைத்தவிரப் பதவியை வகிக்கக்கூடியவர் வேறு எவருமில்லை எனவுணர்ந்து, அவரின் காலடியில் வீழ்ந்து, நாம் எமது நிலையை உணர்ந்து கொண்டோம், பதவியைவிட்டு விலகவேண்டாம் எனக் கேட்டுக் கொண்டனர்.

இவ்வித சிறந்த அரசியல் தந்திரியின் பின்னர் நாட்டின் தலைமைப்பதவியை வகிக்கக் கூடியவர் யார்? பண்டித நேருவையே இவ்வினு பலதடவைகளில் கேட்கப்பட்ட போதிலும் அவர் இதற்கான விடையைத் தட்டிக்கழித்தே வந்திருக்கின்ருர். திருவாளர்கள் கிருஸ்ணமேனன், மொராஜ்ஜி தேசாய், ஜெயபிரகாஷ் நாராயணன், டி. டி. கிருஷ்ணமாச்சாரி முதலியோரின் பெயர்கள் அவ்வப்போது நேருவின் வாரிசு என ஒலித்தன. ஆயின்

<u>ஆசிரியருக்குக் கடிதங்கள்</u>

## பண்டித நேருவின் வாரிசு இந்திரா காந்தியின் ஆற்றல்

இவர்களைப் பண்டித நேரு விரும்பாத காரணத்திலோ, அன்றி ஒருசில குறைகள் இவர்களிடம் காணப்படினும் மக்கள் அனைவரினதும் அன்புக்கு இவர்கள் பாத்திரமாகாத காரணத்திஞலோ நாளடைவில் இவர்கள் பெயர்கள் மங்கிப் போய்விட்டன. அப்படியாயின் பண்டித நேருவின் பின் பாரத நாட்டின் தலைவன் யார்?

இன்று இவ்வினுவுக்கு அகில இந்திய காங்கிரஸ் விடையளித்திருக்கின்றது. ஆம் இன்றைய இந்தியாவின் ஆட்சியை நடாத்திவரும் அகில இந்திய காங்கிரசின் தலைவியாகஏகமனதாகத் தெரிந்தெடுக்கப் பட்டிருக்கும் திருமதி இந்திரா காந்தியே நேருவின் வாரிசாவார். காங்கிரஸ் தலைமைப் பதவி வெறும் பொம்மலாட்டம். ஆகவே அதனை அனுபவம் வாய்ந்தோர் ஆசிக்கவில்லையெனக் கூறப்படலாம். ஆயின் காங்கிரஸ் மகாசபை பொறுப்பு வாய்ந்ததோர் தாபனம். ஊழல்கள் பல இருப்பினும் திறமையாகத் தொழிற்படும் ஓர் அரசியற் கட்சி. 40 கோடி மக்கள் வாழும் இந்தியாவெங்கும் பரவியுள்ள ஒரேயொரு மாபெரும் அரசியற் கட்சியான காங்கிரசின் தலைமைப் பதவியை நடாத்தி அனுபவம் பெறுபவருக்குத்தான் இந்திய நாட்டின் தலைமைப் பதவியை வகிப்பது எளிதாகத் தோன்றும்.

இந்திராகாந்தி அவர்களிடம் இந்தியாவின் அரசியல் தலைவராவதற்கான அம்சங்களனைத்தும் அடங்கியுள்ளன. அவர் ஒரு முற்போக்குவாதி. நன்கு கற்றவர். முதலமைச்சரான தந்தையின் காரியதரிசியாகச் செயலாற்றி வருபவர். ஆகவே, ஆளுந் திறனே அல்லது அரசியலறிவோ இல்லையெனக் கூற முடியுமா? பாரத நாட்டின் இன்றைய கொள்கை வெளி நாட்டினருடன் உறவுபூணுதலேயன்றிப் பகைமை பாராட்டுதல் அல்ல. தமது தந்தையுடன் உலகின் முக்கிய நாடுகளனைத்தையும் தரிசித்த காரணத்தினுல் அந்நாடுகளின் தலைவர்களையும் அவர்தம் கொள்கைகளையும் நன்கு பரிச்சயம் செய்துகொண்டவர் அவர். ஆகவே வெளி நாட்டுக் கொள்கைபற்றி அவர் தயங்கப்போவதில்லை. தவிர பண்டிட் நேரு முற்கோபம் உள்ளவர். தன்னிடமுள்ள கோபத்தைச் சாந்தியாக்க வைக்கும் திறமைசாலியான இந்திராவை இக்காரணத்தினுலேயே தம் காரியதரிசியாக வைத்துக் கொண்டுள்ளார். ஆற்றல்மிக்க பலரிருக்க இந்திரா காங்கிரஸ் மகாசபைத் தலைவராகத் தெரியப்பட்டதானது, விரைவிலே பாரதநாட்டின் முதலாவது பெண் முதலமைச்சர் என்ற பெருமையும் அவருக்குத் தேடிக் கொடுப்பதற்கே வழிகாட்டியாயுள்ளது என்பது அரசியல் வாதிகளின் கருத்தாகும்.

சாமுவேல் பெனடிக்ற்
பண்டத்தரிப்பு

## மரவரி முறை ஹரிசனங்களுக்கு ஒரு கொடை

மரவரிமுறை ஹரிசனங்களுக்குக் கிடைத்த பெருங்கொடையாகுமெனப் பூநகரிப் பகுதிக் காரியாதிகாரி திரு. ச. ஸ்ரீநிவாசன் அவர்கள் கிராம அதிகாரிகளுக்கும் கிராமத் தொண்டர்களுக்குமாகப் பூநகரியில் ஏற்படுத்தப்பட்ட ஒரு கூட்டத்திற் பேசும்போது குறிப்பிட்டார். குடியால் ஏற்படும் தீமைகளுக்குப் பரிகாரம் பூரண மதுவிலக்கேயாகும். ஆனல் இலங்கையில் இது இப்போது நடைபெறக்கூடிய காரியமல்ல. ஹரிசனங்களுக்கு வேறு தொழில் துறைகளில் ஈடுபட ஏற்ற வாய்ப்புக் கிடைக்கும் வரை மரவரியிருந்தேயாக வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

அப்பகுதியில் இரு நெசவுச் சாலைகள் அமைப்பதெனவும், 1000 ஏக்கர் மேய்ச்சல் நிலம் ஒதுக்கப்பட வேண்டுமெனவும் கூட்டத்திலே தீர்மானிக்கப் பட்டது.

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கும், பூநகரிக்குமிடையேயுள்ள அணையை நீட்டிப் பிரயாண வசதிக்கேற்றவாறு அதனை அமைக்கவேண்டுமெனக் கிராமத் தொண்டர்கள் கூட்டத்தில் வற்புறுத்தினர்.

## கூட்டுப் பிரார்த்தனை

உசன் கந்தசுவாமிகோவிலில் சென்ற வெள்ளிக்கிழமை நடைபெற்ற கூட்டுப் பிரார்த்தனையின்போது யாழ்ப்பாணம் கச்சேரி உத்தியோகத்தராகிய பிரம்மஸ்ரீ எஸ். ஈஸ்வர சர்மா அவர்கள் “இன்பமே சூழ” என்ற பொருள்பற்றிப் பேசும்போது “சைவமதத்தினரெனப் படுவோர், வெளிவேஷத்திற்கு மாத்திரம் விபூதியணிந்திருந்தாற் போதாது. உண்மையான சைவனெனில் மதுவையும் புலாலையும் ஒழிக்க வேண்டும்” என்று கூறினர்.

## நாங்கள் கோருவது மனித உரிமைகளே

**இ**லங்கை சுதந்திரம் பெற்றுப் பன்னிரண்டு ஆண்டுகள் ஆகின்றன. ஆனல் அச்சுதந்திரம் எல்லாமக்களுக்கும் கிடைத்திருப்பதாக இன்றைய இலங்கை காட்சியளிக்கவில்லை. முக்கியமாகத் தமிழ்பேசும்மக்களைப் பொறுத்தமட்டில்சுதந்திரம் இல்பொருளாகவே இருக்கிறது. தமிழ் மக்களும் தம்மைத் தாமே ஆளுகின்ற பண்பினை அடைய வேண்டும். இத்தனை ஆண்டுகளுக்குப் பின்னும் ஒற்றையாட்சி முறையின்கீழ் இதுநிறைவுருது படிப்படியாகக் குறைவுற்றது எல்லோரும் கண்ட உண்மையாகும். இந்நிலைமை மாறுதலடைதல் வேண்டும். சிங்கள மக்களைப் பொறுத்தமட்டிலும்உண்மைச் சுதந்திரப் பண்பு இன்றும் நிலைக்கவில்லை. சுதந்திரமென்பது, யதேச்சாதிகாரமாகச் சட்டமியற்றவும், சட்ட அமைவினை மீறிப் பரிபாலனமுறையில் நடத்தவும் கிடைத்த வாய்ப்பன்று. ஒரு நாட்டு மக்கள் பிறநாட்டு மக்களால் ஏற்படக்கூடிய தடையோ கட்டுப்பாடோ இன்றித் தங்களுக்குள்ளும் பிரிவோ கலகமோ இன்றித் தங்கள் அரசியல் சமுதாயத்தை பண்புடன் நிர்ணயித்துத் தாமே நடத்துவது சுதந்திரமாகும். ஒரு நாட்டு மக்கள் உண்மையான சுதந்திரப் பண்புடன் அரசியல் நடத்தினுல் அவர்களிடை அடிப்படை மனித உரிமைகளற்றவராய் எவரும் இருக்கமாட்டார். ஆனல் இன்று இலங்கையில் ஒரு இனம் உரிமையற்றதாய், குடியியலற்றதாய், மொழியுரிமையற்றதாய், பொருளாதாரச் சமவாய்ப்பு அற்றதாய் உயிர், உடல், உடைமைப்பாதுகாப்பே இல்லாததாய்ய் இருப்பது பரிதாபநிலையாகும்.

தமிழினத்தின் உரிமைக்குரல் வகுப்புவாதமல்ல. தமிழன் சுதந்திரத்தின் அடிப்படை அம்சத்தையே, மனிதனுடைய அடிப்படை உரிமைகளையே கேட்கிருன்; மற்றவர்களுக்கு இல்லாத எதனையும் தமிழன் கேட்கவில்லை.

பொருளாதாரம், சமூக முன்னேற்றம், கலாச்சாரம் இவை எல்லாம் அரசியற் சுதந்திரம் பெற்ற மக்களுக்கே கைகூடும். ஆகவே, அரசியற் சுதந்திரம், அடிப்படை உரிமை, தேசிய ஒற்றுமை இவையே இன்று இந்த நாட்டின் முதற்பிரச்சினை. இதனைத் தீர்த்த பின்பே இலங்கை வளநாடு ஒற்றுமைப்பட்ட சுதந்திரத் திருநாடாக, பொருளாதார கலாச்சார முன்னேற்றம்நிறைந்து திகழும். இந்தப் பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்க்க **“ஈழநாடு”** பணி செய்யும் என்பதற்குச் சந்தேகமில்லை.

**சி. கதிரவேற்பிள்ளை**
(தலைவர்; இலங்கைத்தமிழரசுக்கட்சி வாலிப முன்னணி)

சுபிட்சமான வாழ்வுக்குப் பொருளாதார விருத்தி அடிப்படையானது என்ற உண்மையை இப்போது தமிழ் பேசும் மக்கள் நன்கு உணர்ந்து வருகின்றனர். இந்த வகையில் மக்களின் ஆர்வம் எவ்வாறு தொழிற்படுகிறதென்பதை இக் கட்டுரை ஓரளவுக்கு எடுத்துக் காட்டுகின்றது.

# பொருளாதார விருத்தியில்

## மக்கள் காட்டும் தீவிர ஊக்கம்

அரசியல் விவகாரங்கள் என்னதான் மாறுபாடுகளை விளைவித்தாலும் யாழ்ப்பாணம் அதுபற்றிய சிந்தனையிற் சதா மனதைப் பறிகொடுத்திருக்காமல் வழக்கம்போலத் தன் அபிவிருத்தி விவகாரங்களிற் சுறுசுறுப்புடன் கவனம் செலுத்திக் கொண்டே இருக்கிறது. முக்கியமாக இன்று மக்கள் மத்தியில் இருந்து ஏகோபித்த முறையில் எழுந்து கொண்டிருக்கும் குரல் எதுவெனில் பொருளாதார விருத்தியில் தீவிர ஊக்கம் செலுத்த வேண்டும் என்பதேயாகும்.

பொருளாதாரம்பற்றி இன்று பேசாத பொதுமேடைகளே இல்லை. பொதுத் தாபனங்கள் ஏற்படுத்தும் கூட்டங்கள் எதிலும் சரி வழக்கமாகப் பாடப்படும் ஒரு இராகமாக அது இடம்பெற்றுவிட்டது.

வெறும் பேச்சுடன் மட்டும் இந்தப் பொருளாதாரவளர்ச்சி நின்றுவிடுகிறதா என்ற கேள்விக்கு "இல்லை" யென்று பதிலளிக்கும் தன்மையில் எத்தனையோ காரியங்கள் நடந்து வருகின்றன. நமது நாடு, நமது முன்னேற்றம் என்ற உணர்ச்சியால் உள்ளூர உந்தப்பட்ட மக்கள் இன்று எதையும் பொருளாதாரக் கண்கொண்டு சிந்திக்கத் தொடங்கியிருக்கின்றனர். அந்தச் சிந்தனை, செயலில் தீவிரமாகக் கையாளப்பட்டு வருகிறது.

### நிலைமை மாறிவிட்டது

விவசாயத் துறையில் யாழ்ப்பாணக் கமக்காரன் காட்டும் ஆர்வத்துக்குச் சான்றுபகரும் தன்மையில் இன்று புதிய குடியேற்றத் திட்டங்கள் மிளிர்ந்து கொண்டிருக்கின்றன. 'யாழ்ப்பாணக் குடாநாட்டை விட்டுத் தெற்கே குடியேறுங்கள்!' என்ற அழைப்புக்குரல் சிறிது காலத்துக்குமுன் அலட்சியக் குரலாக இருந்து வந்தது உண்மைதான். இன்று நிலைமை முற்றிலும் மாறி விட்டது. எங்கே ஒரு துண்டுக்காணி கிடைக்குமென்று யாழ்ப்பாணக் கமக்காரன் ஆவலோடு தேடிக் கொண்டிருக்கிறான்.

### தீவிர ஆர்வம்

கைத்தொழில்துறையைப்பொறுத்தவரை பெரிய பெரிய திட்டங்கள் சிந்தனை உருவில் இருப்பினும் இப்போது குடிசைக் கைத்தொழில்கள் ஆங்காங்கு சிறப்புடன் வளர்ந்து வருகின்றன. இதன் பொருட்டுக் கிராமாவிருத்திச் சங்கங்கள் காட்டும் தீவிர ஆர்வம் பாராட்டத்தக்கது. ஆனால் அவை அரசாங்கத்தின் கை எப்போது விரியும் என்று காத்திருக்கும் நிலையிலேதான் இருக்கின்றன. தன் கையே தனக்குதவி என்ற எண்ணம் வலுப்பட வேண்டுமென்று அரசாங்க உயர்தரஅதிகாரிகள் கூடச் சொல்லிக்கொள்கிறார்கள். வெறுங்கை முழமிடுமா என்ற கேள்வியும் நியாயமானதாகத்தான் படுகிறது.

பொதுப்படையாகக் கவனிக்குமிடத்துச் சென்ற ஒரு வருடத்துக்கு முன் இருந்ததைவிட இன்று யாழ்ப்பாணம் எவ்வளவுதூரம் தன் சிந்தனையைச் செயலுருவில் மாற்றியிருக்கிறது. அதற்கான தூண்டுகோல்களாக அமைந்தவை பல. அவை பற்றியெல்லாம் ஆராய்வது அவசியமானது.

இன்னும் சில ஆண்டுகளின் பின் நாம் காணப்போகும் வட பகுதி இன்றிருப்பதிலிருந்து பல வகையிலும் வேறுபட்டதாகவே இருக்கக்கூடும். அதற்கான அத்திவாரத்தைஇப்பொழுதே நாம் காண்கிறோம். அந்த அத்திவாரத்தின்மேல் எழுப்பப்படவிருக்கும் கட்டடம் கற்பனைக் கண்முன் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றது.

# தாதிகள் பயிற்சிக் கல்லூரி திறப்பு விழா எப்போது?

நமது நிருபர்

யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணத்திலுள்ள அரசாங்க மருத்துவத் தாதிகள் பயிற்சிக்கல்லூரி எப்போது திறக்கப்படும் என்ற கேள்விக்கு இன்றுமே விடைகண்டு பிடிக்கப்படவில்லை. இங்குள்ள சுகாதாரப்பகுதி மேலதிகாரிகளுக்குக் கூட அது வெளிச்சமாகாத ஒரு புதிராகவே இருந்து வருகிறது. கல்லூரி ஆரம்பமாகும் திகதி பற்றிய சுகாதார அமைச்சரின் அறிக்கையை அவர்கள் அரசாங்க வர்த்தமானி மூலம் தினமும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

இப்பயிற்சிக் கல்லூரியைத் திறப்பதா இல்லையா என்ற இரண்டுபட்ட கருத்துக்குப் பொதுசனங்களினதும் சனப்பிரதிநிதிகளதும் வற்புறுத்தல் காரணமாக முடிவுகாண முன்வந்த சுகாதார அமைச்சர் திருமதி விமலா விஜயவர்த்தன எப்படியும் தை மாதம் ஆரம்பிப்பது என மூன்றுமாதங்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தார். தையும் போய் மாசியும் பிறந்துவிட்டது. ஆனால் தாதிகள் பயிற்சிக் கல்லூரியின் வெளிக்கதவு இன்றும் பூட்டியபடியே காட்சியளிக்கிறது.

இருப்பினும் அங்கு சேர்ந்து பயிற்சி பெற விரும்பும் மாணவிகள் அரசாங்கத்தின் அறிக்கையை எதிர்பார்த்து மேலும் பொறுமையோடு காத்திருக்க விரும்பவில்லைப் போலத் தெரிகிறது. உரிய அதிகாரிகளால் விண்ணப்பங்கள் கோரப்படுவதற்கு முன்னரே — இதுவரை ஏறத்தாழ 300 விண்ணப்பங்கள் யாழ்ப்பாணம் சுகாதார அதிபரின் காரியாலயத்துக்குப் போய்ச் சேர்ந்துவிட்டன. மேற்கொண்டும் தினசரி மனுக்கள் வந்த வண்ணமே இருப்பதாக அக்காரியாலயத்தைச் சேர்ந்த பொறுப்பு வாய்ந்த ஊழியர் ஒருவர் தெரிவித்தார்.

இக்கல்லூரி சம்பந்தமாக ஸ்தல மேலதிகாரி சுகாதார அமைச்சருக்கு அண்மையில் ஒரு அறிக்கையை அனுப்பி வைத்திருப்பதாக அறியப்படுகிறது. அங்கு தற்போது 40 மாணவிகள் ஏககாலத்திற் பயிற்சி பெறுவதற்குரிய பல்வேறு வசதிகளும் இருப்பதாயும் மற்றும் சில அபிவிருத்தி வேலைகளைச் செய்யும் பட்சத்தில் அத்தொகையை 120 ஆக உயர்த்த இடமுண்டெனவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறதாம்.

சுகாதார அமைச்சு இனி எவ்விதமான சாட்டைச் சொல்லிப் பின்போடப் போகிறது என்ற கேள்வி சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் இப்போது எழுந்திருக்கிறது.

* * * *

தமிழ்மூலம் தாதிகளுக்குப் பயிற்சி அளிக்கக்கூடிய திறமைவாய்ந்தவர்கள் இங்கு இல்லையென இலங்கை அரசினர் தெரிவித்தபோது, ஊர்காவற்றுறைப் பிரதிநிதியான திரு. வி. ஏ. கந்தையா அவர்கள் சென்னை சென்று இத்துறையில் அங்கு பணியாற்றுபவர்களின் சேவையை இங்கு பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்தமை இச் சந்தர்ப்பத்திற் குறிப்பிடற்குரியது.

# கமக்காரர் மனமாற்றம்

## மலையாளப் புகையிலை மீது நாட்டம்

எஸ். எஸ். ரி.

சிகரெட் புகையிலை உற்பத்தியிற் சமீப காலமாகத் தம் கவனத்தைத் திருப்பியிருந்த யாழ்ப்பாணக் கமக்காரர் இப்போது மீண்டும் மனமாற்றமடைந்துள்ளனர். மலையாளப் புகையிலை ஏற்றுமதிக்கு ஓரளவு வாய்ப்புக் கிடைத்திருப்பதே இந்த மனமாற்றத்துக்குக் காரணமாகும்.

யாழ்ப்பாணத்தின் ஒரேயொரு வெளிநாட்டு வருமானப் பொருளான மலையாளப் புகையிலை வர்த்தகத்தில் ஒன்றன்பின் ஒன்றாக ஏற்பட்ட தடைகள் புதிய முயற்சி ஒன்றுக்கு அடிகோலி வைத்தன. சிகரெட் புகையிலைச் சாகுபடி செய்வதான அந்த முயற்சியில் அவர்கள் வெறுப்படையத் தொடங்கியிருப்பது விவசாயப் பகுதியாரின் ஆச்சரியத்துக்கு இடமளித்திருக்கிறது.

இந்த ஆண்டு யாழ்ப்பாணத்தில் 800 ஏக்கரில் சிகரெட் புகையிலை பயிரிட விவசாய அமைச்சு அனுமதியளித்திருந்தது. அதற்கு வேண்டிய சகல வசதிகளையும் சிகரெட் புகையிலைச் சங்கங்கள் கமக்காரருக்குச் செய்து கொடுத்திருந்தன. ஆயினும் இப்போது 500 ஏக்கரில் மட்டுமே அது பயிரிடப்பட்டிருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

சென்ற ஆண்டு 600 ஏக்கர் நிலத்தில் சிகரெட் புகையிலை பயிரிடப்பட்டிருந்தது. அத்தொகையை இந்த ஆண்டு 900 ஏக்கராக உயர்த்த வேண்டுமென விவசாய அமைச்சருடன் வாதாடியதன் பயனாக அவர் 800 ஏக்கருக்கு அனுமதியளித்திருந்தார். தற்போதைய நிலவரத்தின்படி அமைச்சர் ஒதுக்கிய தொகைக்குத்தானும் பயிரிட முடியாமற் போய்விட்டதெனவடபகுதிவிவசாயப்பகுதி அதிகாரி யொருவர் தெரிவித்தார்.

கமக்காரரின் மனம் மாறுபட்டமைக்குப் பின்வருவன காரணங்களாக இருக்கலாம் எனச் சம்பந்தப்பட்ட மேலதிகாரி ஊகிக்கின்றார்.

1. மலையாளப் புகையிலையை மீண்டும் ஏற்றுமதிசெய்யச் சந்தர்ப்பம் கிடைத்தது.

2. வடமராட்சித் தீன் புகையிலையைக் கடந்த வருடம் இலாபகரமான முறையில் விற்பனை செய்ய வாய்ப்புக் கிடைத்தது.

3. சிகரெட் புகையிலையின் உத்தரவாத விலை மிகவும் குறைவானதாக இருப்பது.

சிகரெட் புகையிலையின் தற்போதைய விலை கடந்த ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் நிர்ணயிக்கப்பட்டதாகும். அதனைக் கணிசமான அளவு கூட்டுமாறு கேட்டு வாதாடிவருகிறார்களாயினும் இன்னுமே பலன் கிடைக்கவில்லை. ஆகக் குறைந்தது தற்போதைய விலையில் 10 வீதமாவது அதிகரிக்கப்பட வேண்டுமென இப்போது கோரப்பட்டிருக்கிறது. இந்தக் கோரிக்கைக்கு இதுவரை திருப்திகரமான பதில் எதுவும் கிடைக்கவில்லை.

யாழ்ப்பாணம் — மலையாளம் புகையிலை ஐக்கிய வியாபாரச் சங்கம் கடந்த நிதிவருடத்தில் ரூபா 390845 சதம் 72 நட்டமடைந்துள்ளதென்று சமீபத்தில் நடைபெற்ற அச்சங்க வருடாந்தப் பொதுக்கூட்டத்திலே தெரிவிக்கப்பட்டதாம். 1954 ஆம் வருட மலையாளப் புகையிலை வர்த்தகத்தால் நிகழ்ந்த இந்த நஷ்டத்தை ஈடு செய்வதற்காகச் சங்கத்தின் பல்வேறு நிதிகளிலிருந்தும் ரூபா 384042 சதம் 45 ஒதுக்கப்பட்டதென அறியப்படுகிறது. மீதி நட்டத்தை எதிர்காலத்தில் கிடைக்கும் வருமானத்தில் இருந்து நிவிர்த்திசெய்வதென முடிவுசெய்தனர்.





உங்கள் குழந்தையின் சிரிப்பைக் கண்டு பூரிக்க வேண்டுமா?

★ புதுத்தம்பதிகள் ஒன்று சேர்ந்து புகைப்படம் எடுக்க வேண்டுமா?

★ பாஸ்போட் புகைப்படம் அவசியம் எடுக்க வேண்டுமா?

அப்படியானால்

நீங்கள் போகவேண்டிய இடம்

பாரத் ஸ்ருடியோ

யாழ்ப்பாணம்

சிறுகதை

# மனிதன்

·சம்பந்தன்

கிழவன் தெருவில் நின்றபடியே பிரமாண்டமாக வளர்ந்திருந்த அந்தப் புளியமரத்தைப் பார்த்துக்கொண்டு நின்றான். பொழுது மேற்கே சரிந்து வெகு நேரமாகிவிட்டது. பிள்ளைகள் அந்த மரத்தினடியில் உட்கார்ந்தும் ஆடியும் பாடியும் விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

நேரம் மெல்ல நகர்ந்து சென்றது. ஆனால் கிழவன் மட்டும் அப்படியே நின்றான். அந்த மரத்தையும் கிழே விளையாடும் பிள்ளைகளையும் பார்ப்பதில் அவனுக்குத் திருப்தியிருந்தது. அதனால் மேலும் கீழுமாக மாறி மாறிப் பார்த்தபடியே நின்றான். ஐம்பது அறுபது வருடங்களுக்கு முன் அவனும் அந்த மரத்தடியில் இவர்களைப்போல ஒரு சிறுவனாக நின்று விளையாடியிருக்கிறான். அப்போது இந்த மரம் இவ்வளவு பெரியதாக இல்லை. இன்று கொஞ்சம் பருத்து அகன்று வளர்ந்திருக்கிறது. ஆனால் வடகிழக்குப் புறத்தில் வளர்ந்திருந்த பெரிய ஒரு கிளை அப்போது பட்டுப் போயிருக்கவில்லை. பக்கத்தில் உள்ள நிலப்பரப்பு ஒவென்ற ஒரே வெளியாகவே கிடந்தது. வீடுகள் என்ற கறை அதையடுத்த பிரதேசங்களில் அன்று காணப்பட்டதில்லை. இன்றோ இருபது முப்பது யாருக்குள் வீடுகள் சுற்றவர முளைத்திருந்தன.

கிழவன் நீண்ட ஒரு பெருமூச்சுடன் இரண்டடி வைத்துத் தெருக்கானில் இறங்கி நின்று மறுபடியும் அந்த மரத்தையும் சிறுவர்களையும் மாறிமாறி உற்றுப் பார்த்தான். அப்பொழுது தான் அங்கே நின்ற பிள்ளைகளின் கண்கள் அவன் பக்கம் திரும்பின.

முதலில் ஒரு சிறுவன் கிழவனுக்குக் கிட்டப் போய், "என்ன வேண்டும்?" என்று கேட்டான். மற்றவர்களும் ஒருவர் பின் ஒருவராக அங்கே வந்து சேர்ந்து விட்டார்கள். ஆனால் அந்தக் கிழவனைப் பார்த்துக் கேலி செய்யவோ தொந்தரவு கொடுக்கவோ யாருமே விரும்பவில்லை. சும்மா நின்றபடியே கிழவனைப் பார்த்தார்கள்.

சுருக்கங்கள் விழுந்த க்ஷவரஞ் செய்யாத முகம். கிழத்தன்மையை மறைப்பது போன்ற கெம்பீரமான மூக்கு, அகன்ற நெற்றி, சோகம் ததும்பும்பெரியகண்கள். அழுக்கேறிய உடையின் நடுவிலும் வசீகரமான ஒருவித கெம்பீரமான—அலக்ஷியம் செய்ய முடியாத தோற்றம். எல்லாமாகச் சேர்ந்து அங்கே நின்ற பிள்ளைகளை ஆகர்ஷித்து விட்டன.

கிழவன் முதலில் அந்தக் குழந்தைகளைப் பார்த்து ஒரு மாதிரிச் சிரித்தான். பிறகு மெல்ல நடந்துவந்து அந்த மரத்தடியில் உட்கார்ந்தான். சுற்றிக்கொண்டு நின்ற பிள்ளைகளில் ஒருவன் கேட்டான்.

"தாத்தா, எங்கே யிருந்து வருகிறீர்கள் ?"

கிழவன் அந்தப் பையனை ஒருமுறை பார்த்து விட்டுத் தலையைத் தொங்கப் போட்டபடி மௌனமாகவே உட்கார்ந்திருந்தான். அதற்குள் மற்றொரு பிஞ்சுக் குரல் எழுந்தது:

"மிகவும் களைத்திருக்கிறீர்களே, சாப்பிடவில்லையா ?"

கிழவன் தலையைத் தூக்கி, "எனக்குப் பசியில்லை" என்று சுருக்கமாகச் சொன்னான்.

"அப்படியானால் சாப்பிடுகிறதே இல்லையா தாத்தா?" என்று ஒருவன் ஆச்சரியத்தோடு கேட்டான்.

"சாப்பிடாமல் யாராவது இருக்க முடியுமா தம்பி?" என்று பதிலுக்குக் கிழவனது வரண்ட தொண்டையிலிருந்து ஒரு கேள்வி பிறந்தது.

மற்றொரு குரல் இதைக் கேட்டது :

"அப்படியானால் எப்போது சாப்பிட்டீர்கள் ?"

"ஞாபகமில்லை."

கிழவனை எல்லோரும் ஒரு வித பயங்கலந்த ஆச்சரியத்தோடு பார்த்தார்கள். ஒருவன் மட்டும் கொஞ்சம் உரத்த குரலில், "பொய், பொய்" என்று கத்தினான்.

கிழவன் இப்பொழுது யாரையுமே கவனிக்க விரும்பாதவன்போல மெல்ல மரத்தோடு சரிந்து உட்கார்ந்தான். அந்த நிலையிலும் மரத்தின் ஸ்பரிசம் அவனுக்கு ஏதோ ஒருவித இன்பத்தைக் கொடுத்தது போலும். அவனது வாடிய முகம் கொஞ்சம் மலர்ந்து விளங்கியது.

சிறுவர்கள் ஒவ்வொருவராக உட்கார்ந்துவிட்டார்கள். கிழவனுடைய தோற்றமும் வார்த்தைகளும் அந்தக் குழந்தைகளுக்கு ஏதோ ஒருவித வேதனையை உண்டுபண்ணிவிட்டன.

க்ஷணத்துள் ஒரு சிறுவன் எழுந்துநின்று, "தாத்தா, சாப்பாடு கொண்டு வருகிறேன் சாப்பிடுகிறீர்களா?" என்று கேட்டான்.

"வேண்டாம்" என்பதுபோலக் கிழவன் வெறுமனே தலையை மட்டும் அசைத்துவிட்டு மௌனமாகவே இருந்தான்.

"ஏன், சாகப் போகிறீர்களா?"

யாரோ ஒருவன் இப்படி ஒரு கேள்வியைப் போட்டான்.

அதற்குப் பதில் வரவில்லை. கிழவனுடைய அந்த மௌன நிலை பிள்ளைகளைக்கூடக் கொஞ்சம் அசந்துபோகும்படி செய்துவிட்டது. அதனால் அவர்கள் ஒருவரையொருவர் பார்த்தபடி நின்றார்கள். ஆனாலும் அவர்களுடைய உள்ளங்கள் கிழவனோடு நெருங்கி ஒட்ட ஆரம்பித்துவிட்டன. அதனால் அவர்கள் கிழவனுக்கு மிகச் சமீபமாக வந்து தொட்டுக் கதைக்கவும் தொடங்கி விட்டார்கள்.

அந்த நிலையைக் கிழவனும் உணர்ந்து கொண்டு முதலிற் பெரிய ஆறுதல் அடைந்தான். ஆனால்—? சிறிது நேரத்துள் அவன் எதையோ நினைத்துக் கொண்டவன்போல நிமிர்ந்து உட்கார்ந்துகொண்டு நீண்ட பல மூச்சுக்கள் விட்டான். அந்த மூச்சுக்களைத் தொடர்ந்து அவனது அகன்ற கண்களில் நீர் ததும்பியது.

திடீரென்று ஒரு சிறுவன் கேட்டான்:

"தாத்தா, ஏன் அழுகிறீர்கள்?"

கிழவனுக்கு ஒன்றுஞ் சொல்லத் தோன்றவில்லை. ஒருவாறு சமாளித்துக்கொண்டு, "ஏன், நான் அழுதேன்?" என்று அந்தப் பையனையே திருப்பிக் கேட்டான்.

சிறிது நேரம்வரை எல்லோரும் மௌனமாகியிருந்தார்கள்.

ஒரு சிறுவனுடைய குரல் அந்த மௌனத்தைக் கலைத்தது.

"தாத்தா, உங்களுக்கு எந்த ஊர்?"

இதற்குப் பதில் கிடைத்தது.

"அது வெகு தொலைவில் இருக்கிறது. ஒரு நாள் பயணம் பண்ண வேண்டும்."

"அப்படியானால் இராவுக்கு எங்கே படுப்பீர்கள் ?" அந்தச் சிறுவனே தொடர்ந்து சொன்னான்:

"எங்கள் வீட்டுக்கு வாருங்களேன். வருகிறீர்களா?"

கிழவன் உடனே வாயைத் திறந்து அந்தப் பையனிடம் ஒரு கேள்வி கேட்டான்:

"இந்தக் கிழவனை ஏனடா அழைத்து வந்தாய்?" என்று அப்பா அம்மா கோபிக்க மாட்டார்களா?

"அப்படியும் யாராவது கோபிப்பார்களா?" என்று உடனே சிறுவன் கிழவனிடமே கேட்டான்.

அப்போது பிரகாசித்த கிழவனுடைய கண்களை அந்தப் பிள்ளைகள் கவனிக்கவேயில்லை. அவர்கள் போட்டி போட்டுக் கொண்டு, "எங்கள் வீட்டுக்கே வரவேண்டும்" என்று தனித் தனி கேட்டுக்கொண்டார்கள்.

மௌன நிலையில் அவர்களது குழந்தை முகங்களையே பார்த்துக் கொண்டிருந்த கிழவன் திடீரென்று எழுந்துநின்று தன் சட்டைப் பையினுள்ளே கையை வைத்து ஒரு ரூபாய் நோட்டுக்களை எடுத்தான். ஒவ்வொரு சிறுவனையும் கூப்பிட்டு, "குழந்தாய், உனக்குப் பிரியமானதை வாங்கிக்கொள்" என்று தலைக்கு ஐந்து ரூபாய் வீதம் கொடுத்தான். சிலர் முதலில் பெற்றுக் கொள்ள மறுத்தார்கள். பிறகு எப்படியோ கட்டுண்டவர்கள் போல் கையை நீட்டி வாங்கி விட்டார்கள்.

சிறுவர்களுக்கு அது புதிய அநுபவமாகவே இருந்தது. 'யார் இவர்? ஏன் இது நடக்கிறது?' என்ற எதையுமே சிந்திக்காமல் அவர்களுடைய மலர் மனங்கள் கிழவனோடு ஒன்றிக் கலந்து குழைந்துவிட்டன. அதற்குள் ஒரு சிறுவன் எழுந்து பக்கத்திலுள்ள தன் வீட்டை நோக்கி ஓடினான். உள்ளே போனவன் யாரிடம் எதைத்தான் சொன்னானோ, ஒரு கிழவியும் அவள் மகளும் உள்ளேயிருந்துவந்து அந்தக் கிழவனை உற்றுப் பார்த்து விட்டுப் போனார்கள். கிழவனும் அவர்களை அப்படியே பார்த்தான். உடனே அவனுடைய முகத்தில் ஆயிரம் சிந்தனைகளின் ரேகைகள் படர்ந்து மறைந்தன. அவன் மறு பக்கமாக முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

பிறகு, தனக்குள்ளே சொன்னான்.

"ஒரு ரத்தத்தில், ஒரு வயிற்றில் பிறந்த உயிர்கள். கால வெள்ளம், ஞாபகப்படுத்த முடியாத அளவுக்கு உருவையும் மாற்றியமைத்து நினைவுகளையும் கழுவி விட்டது".

கிழவன் தன் மனத்தை மேலும் கடினமாக்க விரும்பியவன் போலக் கஷ்டப் பட்டான். அவனுடைய முகத்தில் திடீர் திடீரென்று தோன்றிய மாற்றங்களைக் குழந்தைகளால் விளங்கிக்கொள்ள முடியவில்லை. ஆசையோடு பார்த்துக் கொண்டே இருந்தார்கள். பிறகு, "தாத்தா, நீங்கள் எங்கள் வீட்டுக்கு வரவேண்டும்" என்று ஒவ்வொருவரும் கேட்க ஆரம்பித்து விட்டார்கள்.

கிழவன் எழுந்து நின்று சொன்னான்:

(13-ம் பக்கம் பார்க்க)

**ஈழநாட்டின் இலக்கு**

— க. வை. ஆ. சர்மா —

" ஈழநாட் டின்குரலே எல்லோரு மிங்கிதமா
வாழ வகுக்கும் வழி ".

'ஹென்ற்லி'
உடை அலங்காரத்தின்
உன்னத அடையாளமாகும்

# ஹென்ற்லி

★ சேட்
★ காற்சட்டை
★ ஷோட்ஸ்

ஹென்ற்லி சேட், காற்சட்டை, ஷோட்ஸ் ஆகியவற்றை அணியும் ஆடவரும், இளைஞரும் சௌகரியத்தை அனுபவிப்பதுடன் வசீகரமான தோற்றத்தையும் பெற்று அழகுடன் விளங்குகின்றனர்.

ஹென்ற்லி உடைவகையில் நீங்கள் எதைத் தெரிந்தெடுத்து வாங்கினாலும், அது கொடுத்த பணத்திற்கு நிறைந்த பெறுமதியாகும்.

**ஹென்ற்லி (காமென்ட்ஸ்) லிமிடெட்,**
பழைய விமான நிலைய வீதி,
(Old Air Port Road)
இரத்மலானை.

பொறுமையுடன் குணம் குற்றங்களை ஆய்ந்து தன் வெறுப்பு விருப்புக்களைப் பொருட்படுத்தாமல் நடுநிலை நின்று சீர்தூக்கிக் கூறுவதே இலக்கிய ஆராய்ச்சியாகுமென்பதை, டக்டர் மு. வரதராசனார் அவர்கள் இக்கட்டுரையில் விளக்கியுள்ளார்கள்.

# ஆராய்ச்சித் தகுதியும் திறனும்

பேராசிரியர் மு. வரதராசனார்

ஒரு நூலைப் பற்றி அறிஞர் இருவர் கருத்துரை வழங்குவார்களானால், அந்த இரு கருத்துரைகளுக்கும் இடையே வேறுபாடு காணப்படும். அந்த வேறுபாட்டை, ஆராய்ச்சிகளின் வேறுபாடு என்று கூறுதலைவிட, ஆராய்வோரின் வேறுபாடு என்று கூறுதல் பொருந்தும்.

அனடோல் பிரான்ஸ் என்னும் அறிஞர் இதனை வேடிக்கையான முறையில் விளக்குகிறார். ஒருவர் கம்பரைப் பற்றிச் சொற்பொழிவு செய்வதானால், அவர், "யான் இன்று கம்பரின் புலமைத்திறனைப் பற்றிப் பேசமுன் வந்துள்ளேன்" என்று தொடங்குவது வழக்கம். அதைவிட, "யான் இன்று என்னைப் பற்றி — கம்பரைப் படித்த என்னைப் பற்றிப் — பேச முன்வந்துள்ளேன்" என்று தொடங்குவது பொருந்தும். அவ்வாறு கூறுவது மரபுக்கு மாறாக இருந்தாலும், அதுதான் உண்மையும் நேர்மையும் ஆகும் என்கிறார்.

உலகத்து அறிவிலும் கருத்திலும் சிறந்தவற்றைத் தேர்ந்தறிவதற்கும் பரப்புவதற்கும் உரிய பற்றற்ற முயற்சியே ஆராய்ச்சி என்பது இங்குக் கருதத் தக்கது.

ஆயினும், பெரும்பாலோர்க்கு அத்தகைய பற்றற்ற நடுநிலையான ஆராய்ச்சி மனப்பான்மை வாய்ப்பதில்லை. மில்டன் எழுதிய 'இழந்த துறக்கம்' என்னும் நூலை வால்டேர் என்பவர் அளவுகடந்து தூற்றினார்; ஆனால் மெக்காலே என்பவரோ அளவுகடந்து போற்றினார். தூற்றியவரும் அறிஞரே; போற்றியவரும் அறிஞரே. தமிழ் இலக்கியத்துறையிலும், சிலர் மிகத் தூற்றும் நூல்களையே வேறு சிலர் மிகப் போற்றுதல் காணலாம். இரு சாராரும் ஆராய்ச்சியில் ஆர்வம் உடையவர்களே. இந்நிலைக்குக் காரணம் என்ன? பற்றற்ற நடுநிலைமை என்பது எய்தற்கு அரியநிலை. அனடோல் பிரான்ஸ் கூறுமாறு ஆராய்ச்சி என்பது ஒருவரின் மிகத் தனிப்பட்ட சொந்தச் செய்தியாக உள்ளது; அவருடைய சொந்த வாழ்வும் நம்பிக்கைகளும் அவருடைய ஆராய்ச்சியில் தெற்றென விளங்குகின்றன.

## விருப்பு வெறுப்பு

ஒரு நூலைக் கற்கும்போதும, அதனுடைய பலவகைச் சிறப்புக்களையும் உணர்ந்தபோதும், அதனிடையே உள்ள ஒரு கருத்து அல்லது ஆசிரியரின் ஒரு கொள்கை நமக்கு மாறானதாக இருக்கும் காரணத்தால், அந்த வெறுப்பையே கொண்டு நூலை மதிப்பிடுதல் உண்டு. விருப்பைவிட வெறுப்பு ஆற்றல் மிக்க உணர்ச்சி ஆகையால், அது நம் ஆய்வுத்திறனையே மங்கச் செய்துவிடும்; நம்மை அறியாமலே நம் நடுநிலைமை மாறிவிடும். அதனால், "இந்நூல் உயர்ந்ததுதான்; என் கொள்கைக்கு மாறான கருத்து ஒன்று இந்நூலில் உள்ளபோதிலும், இது உயர்ந்த அமைப்பும், உணர்வும் கற்பனையும் உடைய நூல்தான்" என்று கூறும் திறனை இழந்துவிடுவோம்.

அல்லாமலும், நம் உள்ளம் தானாக ஆய்ந்தறியும் முயற்சியை மேற்கொள்ளாமல், பலர் கூடிப் போற்றிப் புகழ்ந்த நூலைக் கண்மூடிப் புகழ்தலும், பலர் கூடித் தூற்றி இகழ்ந்த நூலைக் கண்மூடி இகழ்தலும் நேரலாம். அந்நிலையில், அப்போற்றலையும் தூற்றலையும் நம் போற்றல் தூற்றலாக வெளியிடுவோம். உண்மையாக நோக்கின், அது நம் திறனாய்வு அன்று என்பதும், முயற்சியைக் குறைத்துப் பிறருடைய கருத்தை நாம் அவ்வாறே நம்பி வெளியிடுதலே என்பதும் விளங்கும். "எனக்கு இது பற்றிக் கருத்து ஒன்றும் இல்லை; கருத்துக் கூறுமளவு இன்னும் ஆயவில்லை. ஆனால் பிறர்போற்றக் கேட்டிருக்கிறேன், அல்லது தூற்றக் கேட்டிருக்கிறேன்" என்று கூறத்தக்க அளவிற்கு அஞ்சாமையோ உண்மையோ இல்லை என்பதே அதற்குக் காரணம் ஆகும்.

ஆயின், முழுதும் பற்றற்ற நடுநிலையான ஆராய்ச்சி கலைஞனுக்குத் தேவை இல்லை. ஒவ்வொரு மனிதனுக்கும் புதியன படைக்கும் திறனும் உண்டு; ஆயும் திறனும் உண்டு. சிலர் ஒருதுறையில் பயின்று விளங்க, மற்றும் சிலர் மற்றத் துறையில் பயிற்சி பெற்றுச் சிறக்கின்றனர். படைக்கும் திறனே முந்தி அமைவது; ஆராய்ச்சி காலப்போக்கில் வளர்ந்து அமைவது. ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொன்று சிறந்து நிற்பதும் உண்டு.

## படைக்கும் திறன்

படைக்கும் திறன் சிலர்க்கு இயல்பாகவே மிக்கு விளங்குகிறது. அவர்கள் தக்க வாய்ப்புக் கிடைத்ததும் அத்திறனைப் புலப்படுத்திக் கலைஞராக வளர்கின்றனர். அத்தகைய கலைஞரிடம் ஆராய்ச்சித் திறனை எதிர்பார்த்தல் கூடாது. ஆராய்ச்சித் திறனுக்குப் பரந்த அறிவும் விருப்பு வெறுப்பற்ற நோக்கும் வேண்டும். படைக்கும் திறனுக்குப் பரந்த அறிவு தேவை இல்லை; ஆழ்ந்த உணர்ச்சியனுபவமே தேவை. நடுநிலைமை தேவை இல்லை; ஆற்றல் மிக்க விருப்பும் வெறுப்புமே தேவை. ஆதலின், படைக்கும் திறன் உடையவரிடத்தில் ஆயும் திறனையும் எதிர் பார்த்தல் கூடாது.

ஆராய்ச்சியாளன் கூரிய அறிவு வாய்ந்து பிறர் பிறர் மன நிலையை அறிய வல்லவனாக இருத்தல் வேண்டும். தான் கொண்டதே கொள்கை என்று விடாப்பிடியாக இராமல் நெகிழ்ந்து, பிறர் கொள்கைகளையும் அவற்றின் காரணங்களையும் ஆராயவல்ல நுண்புலன் உடையவனாக இருத்தல் வேண்டும். பிறர் கூற்றில் உள்ள அடிப்படைக் கருத்துக்களை எளிதில் உணரும் திறனும், அவற்றைத் தெளிவாக எண்ணிப் பாகுபாடு செய்யும் ஆற்றலும் பெற்றிருத்தல் வேண்டும். தன் விருப்பு வெறுப்புக்களுக்கு முதலிடம் கொடுக்காமல், பொறுமையுடன் பிறர்-பிறர் விருப்பு வெறுப்புக்களை ஆராய்ந்தறிய வல்லவனாக இருத்தல் வேண்டும். ஆகவே, ஆராயும் துறையில் நடுநிலையில் நின்று உண்மை காணும் ஆர்வம் வேண்டும். தான் கற்ற கல்வியினாலோ, பிறந்து வளர்ந்த சூழ்நிலை அமைப்பினாலோ, தழுவிய சமயக்கொள்கையினாலோ சாதி வகுப்பு கட்சி நாடு முதலான வேறுபாடுகளினாலோ ஒருதலைச் சார்பாக நிற்காமல், பொதுவான மனிதத் தன்மையோடு எதையும் நோக்கவல்ல பெருந்தன்மை வேண்டும்.

## வள்ளுவர் கருத்து

திருவள்ளுவர் நடுவுநிலைமை என்ற அதிகாரத்தில் கூறியுள்ள ஒரு கருத்து ஆராய்ச்சியாளர்க்கு மிகப் பொருந்துவ்தாக உள்ளது.

**சமன்செய்து சீர்தூக்கும்**
**கோல்போல் அமைந்தொருபால்**
**கோடாமை சான்றோர்க்கு அணி.***

துலாக்கோல்போல் பற்றற்ற (சம) நிலையில் நின்று மதிப்பை அளந்து கூறல் வேண்டும்; ஆராய்ச்சிக்கு உரிய தகுதி அமைந்து ஒரு சார்பாகக் கோணமல் இருத்தல் வேண்டும். ஆராய்ச்சிக்கு உரிய தகுதி, பற்றற்ற நிலை, ஒரு சார்பாகக்

* திருக்குறள், 118.

[ 12ஆம் பக்கம் பார்க்க ]

சென்னை முதலமைச்சர்

### திரு. காமராஜ் வாழ்த்துரை

ஈழநாடு என்னும் சுதந்திர வார இதழ் வெளியாகியிருப்பதைக் கண்டு மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

இவ்வார இதழ் இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்களிடையே நல்ல கருத்துக்களைப் பரப்பி, ஒற்றுமையுடனும், சகோதர மனப்பான்மையுடனும் வாழ உதவும் என்று நம்புகிறேன்.

நல்ல முறையில் வெளிவரும் இப்பத்திரிகைக்கு எனது இதயங்கனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.


எங்களிடம்

பவுண் மார்க் ஓடுகள்
மான்தலை மார்க் ஒற்றைப்பீலி இரட்டைப் பீலி ஓடுகளும்

★

நெல்லு, எள்ளு, அரிசி

முதலியனவும்



சகாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம்

R. சிவகுமாரன்

76, ஆஸ்பத்திரி வீதி - யாழ்ப்பாணம்

"ஈழமண்டல நாடு எங்கள் நாடே" (2)

# 'வாசலிடைக் கொன்றை மரம்'

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

"ஈழமண்டல நாடெங்கள் நாடே" என்ற கட்டுரையில் வந்ததும், "பொன் பூச் சொரியும்" என்று தொடங்குவதுமான பாடலின் இறுதியடி "வாசலிடைக் கொன்றைமரம்". இந்தக் கொன்றைமரம் இயற்கைப் புலமை வாய்க்கப்பெற்றவரும், மிகமிக இளைஞருமான சின்னத்தம்பிப் புலவரின் நாவில் முளைகொண்டு, பாலர்களின் இருதயங்களைக் கொள்ளைசெய்து, கவிதைத் தெய்வத்தைப் பூசிக்கின்றவர்களான கவிஞர்களின் கற்பனை உலகில் கிளைகள் பரப்பி, அன்றுபோலவே என்றும் பொன்பூச் சொரிவதாய் அமரத்துவம் எய்திப் பொலிந்து விளங்குகின்றது.

சங்கத்துப் புலவருள் ஒருவரான ஈழத்துப் பூதந்தேவனார் என்கின்ற புலவர் தோன்றிய பழம்பெருமை படைத்தது ஈழநாடு. இப்படிப்பட்ட ஈழநாட்டிலே மரபு பிறழாத தமிழ்ப் புலமை என்கின்றதொரு மாளிகை நிலவுமானால், அந்த மாளிகையின் வாசலிடைக் கொன்றைமரமாய் அமையத் தக்கது இந்தக் கொன்றை மரம்.

இது தோன்றி வளர்ந்து மிளிர்கின்ற வரலாறு பின்வருமாறு :-

இற்றைக்கு இருநூறு வருடங்களுக்கு முன்னே யாழ்ப்பாணத்து நல்லூரிலே வில்லவராய முதலியார் என்கின்ற வேளாண் பிரபு ஒருவர் இருந்தார். அவரைப் பரராசசேகர மன்னனின் வமிசத்தில் வந்தவர் என்று கூறுவதும் உண்டு. அவர் கல்வி அறிவுடன் கவி பாடும் ஆற்றலும் படைத்தவர். இதனாலே கல்விமான்களும் பிரபுக்களும் பிறரும் அவரைப் போற்றினார்கள். அக்காலத்து அரசினராகிய ஒல்லாந்தர்களிடமும் அவருக்குப் பெருங் கண்ணியம் இருந்தது.

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் வடக்கு நோக்கிச் செல்லுகின்ற மேற்கு வீதியை, சட்டைநாதர் கோயிலின் மேற்கு நோக்கிச் செல்லுகின்ற தெற்கு வீதி சந்திக்கின்றது. அந்த வீதியில் வில்லவராய முதலியாரின் வீடு இருந்தது. பழமையானதும் அமரத்துவம் எய்தியதுமான அந்தக் கொன்றை மரத்தை ஞாபகப் படுத்திக் கொண்டு, அதன் சந்ததிகள்போலப் பல கொன்றை மரங்கள் அந்த வீதியில் இன்றும் நின்று நிலவுகின்றன.

வில்லவராய முதலியாருக்கு ஒரேயொருவர் புதல்வர். அவர்தாம் எங்கள் சின்னத்தம்பிப் புலவர். புலவருக்குத் தந்தை தாயரே ஆசிரியராயும் இருந்தார். கடும் அன்பு, மிக்க கோபதாபத்திலே முடிவதும் உண்டு. சின்னத்தம்பிப் புலவருக்கு எக்காரணத்தினாலோ இளம் பருவத்திலேதானே படிப்பிலே கசப்பு உண்டானது. விளையாட்டுப் பிள்ளைகளுடன் கூடி விளையாட்டிலே காலங் கழிப்பாராயினார் சின்னத்தம்பிப் புலவர். இது வில்லவராய முதலியாருக்குப் பெருங்கவலையைத் தந்தது. சின்னத்தம்பிப் புலவரைத் தங் கண்ணெதிரிற் காண்பதே முதலியாருக்கு அருமையாய் விட்டது. இதனைச் சகியாமல் தமது மனைவியாரைக் கடிவாராயினார் முதலியார். சில சமயங்களில் தமது மகனை அங்கே அடுக்கக் கூடாது என்று மனைவியாருக்கு முதலியார் சட்டம் செய்வதும் உண்டு. ஒல்லாந்த அரசாங்கத்துக்குத் தேசவளமைச் சட்டம் வகுத்துக் கொடுத்தவர்களில் முதலியாரும் ஒருவர். சட்டப் பயிற்சி உள்ளவர் முதலியார். மகன் விஷயத்தில் கடுஞ் சட்டம் விதிப்பதும் முதலியாருக்குப் பழக்கமாய் விட்டது. உணவு முதலியவைகள் கொடுக்கக்கூடாது என்று ஒரு சமயம் விதிசெய்தார். முதலியார். பதிபத்தியையும் புத்திர வாற்சல்லியத்தையும் ஒரே சமயத்தில் ஒருங்கு வளாக்க வேண்டியவராயினர் முதலியாரின் அருமை மனைவியார்.

சின்னத்தம்பிப் புலவர் முதலியார் இல்லாத சமயம் பார்த்து, முதலியாரின் கண்ணிற் படாமல் இடையிடையே அடுக்களைப் பக்கமாகத்

[ 12ஆம் பக்கம் பார்க்க ]

## மாதர் பகுதி

# ★ பேச்சுக்கலை ★

செல்லம்மாள் என்ற பெண்மணி தனது அத்தைமகனை மணஞ் செய்தாள். கணவனின் தம்பியாருக்கும் செல்லம்மாளுக்கு மிடையே உள்ள மனத்தாங்கல் காரணமாகச் சண்டை ஏற்பட்டது. தமையன் செல்லம்மாளை அழைத்துத் தம்பியின் குற்றச்சாட்டுக்களை ஒவ்வொன்ருக எடுத்துரைத்தான். செல்லம்மாள் அவற்றை எல்லாம் ஏற்றுக் கொண்டாள். இவற்றை எல்லாம் சென்ற வார இதழிற் படித்தோம். மிகுதி இவ்வாரம் வெளியாகியுள்ளது.

செல்லம்மாள் கோபித்து வீட்டையே ஒரு கலக்குக் கலக்கி விடுவாள் என்று எதிர்பார்த்தான் தமையன். தம்பி வீடு வந்து சில நிமிஷங்களாயின. வரும் சமயம் என்று நினைத்த அவள் மிகவும் பணிவான குரலில் "நான் உங்கள் மனைவி என்பது ஒருபுறம் இருக்கட்டும். மாமன் மகள் தவறுசெய்கிருள் என்று கண்டிக்கும் உரிமை உங்களுக்கும் உண்டு, அவருக்கும் உண்டு. அப்படியிருக்க அவர் சொல்லிவிட்டார் என்று ரோஷப்படுவதற்கு என்ன இருக்கிறது" என்று கூறினுள். இதைக் கேட்டுக்

— * குகப்ரியை * ......

கொண்டே வந்த மைத்துனன் வெட்கிப்போனுன். செல்லம்! உன் பெரிய மனது எனக்கு விளங்கவில்லை. மன்னித்துக் கொள் என்று விழுந்து நமஸ்காரம் செய்துவிட்டான் தம்பி. மிகப் பெரியதாக உருவெடுக்க வந்த குடும்பக்கலகமும், பாகப் பிரிவினையும் இந்தச் சிறு சொல்லாற் சிதறி ஓடிவிட்டது. இந்தக் குடும்பத்தார் மனம் ஒத்து வாழ்கிருர்கள்.

சமயோசிதமாகப் பேசுவதிலே மிகச் சிறந்தவர் நமது மாபெருந் தலைவர் பாலகங்காதர திலகர். ஒருசமயம் ஜெனரல் நீல் என்பவர் இந்தியாவுக்கு நன்மை செய்தார் என்று ஒரு சில இராஜபக்தர்கள், அவ்வளவோடு விடவில்லை. சதுர்வேதிகள், திருவேதிகள், ஜோஷிகள் முதலியோர்களை அழைத்து அஷ்டோத்ர, நாமாவளி இயற்றி வழிபடும்படி செய்துவிட்டார்களாம்! இதைப்பற்றிப் பெருமையாக ஒரு கூட்டத்திலே ஒரு ஆங்கிலேயர் எங்கள் மகா வீரனுன ஜெனறல் நீல் துரை மகனுரை இந்துக்கள் தெய்வமாக மதித்து வழிபடுகின்ருர்கள் என்ருராம். உடனே நமது தலைவர் "அடடா! இந்துக்கள் பாம்பையும் வழிபடுவார்கள் அரசடியிலே வைத்து, ஏன் தெரியுமா? அது நம்மைக் கடிக்காமல் விட்டால் போதுமென்று. அது போலத்தான் நீல் சிலையையும் வழிபடுகிருர்கள்" என்ருராம். கூட்டத்தில் ஒரே கலகலப்பு கேட்க வேணுமா?

இதேபோலத்தான் கர்ஸன் பிரபு என்பவர் மகா தேசாதிபதியாக இருந்தசமயம் மிதவாதிகளிலே சிறந்தவரான கோபாலகிருஷ்ண கோகலே பேசிக்கொண்டிருந்தார். அவருக்கு முன் பேசிய ஒரு பெரியார் கர்ஸன் பெருமகனுரை வானளாவப் புகழ்ந்திருந்தார். அதை ஒட்டியே பேசலானுர் கோகலே. தேவர்கள் எல்லாரும் தம்மிடமுள்ள முழு ஆற்றலையும் கொண்டு எல்லாவிதமான நற்குணங்களையும், நமது கர்ஸன் பிரபுவின்மீது பொழிந்துவிட்டார்கள். பிறகு ஒருமுறை ஏறிட்டுப்பார்த்தார்கள். இவ்வளவு சிறந்தவகை எல்லாநலன்களும் பொருந்தி ஒரு மனிதன் இருந்தால் திருஷ்டி வந்துவிடுமென்று கண்களை மூடிக்கொண்டு ஏதாவதொரு குணத்தை எடுத்து விடுவோமென்று எடுத்துவிட்டார்கள். அது என்ன தெரியுமோ? "அதுதான் கருணை" என்ருர். முதலில் பேசியவர் முகம் எப்படியிருக்குமென்று சொல்ல வேண்டியதில்லை.

இதேபோல ஒருசமயம் ஒரு ஆங்கிலேயரும் ஒரு யேர்மனியரும் சந்தித்தார்கள். ஆங்கிலேயர் மிகவும் பெருமையாக எங்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற் சூரியன் அஸ்தமிப்பதில்லை என்ருர். அதற்கு ஜேர்மனியர் "கடவுளுக்குப் புத்தியுண்டு. உங்களை நம்பி இருட்டில் எப்படி விட்டுவைப்பார்', என்ருராம்.

இப்படி, சமயோசிதமான பேச்சுக்கள் பெரும்பாலும் தீமைகளை விளைவிக்காமலிருக்கும் பொருட்டும் பரிகசித்துப் பிறரைத் தலைகுனியச் செய்வதன்பொருட்டுமே வழங்குகின்றன. ஆனுல் எதிர்பார்த்ததிற்கு மாருக முதலிற் கூறிய உவமைகள்போல் விபரீதத்தை விளைவிப்பவைகளும் உள. ஆகவே, ஒரு பெண் சமயோசிதமாகப் பேசப்பயில்வதனுல், தீமைகளும், மனத்தாங்கல்களும் நேராமல் வாழ்க்கைப்பாதையை ஒழுங்காக்குகிருள். அதோடு தான் தன் சொல்வன்மையாலும், சாமர்த்தியத்தினுலும், தீங்கு நேராமற் காத்துக் கொண்டோம் எனற மனத் திருப்தியும் அடைகிருள். கூடவே பலர் கூடிப் பேசுவதினுல் இன்பமும் பரிகசிப்பதினுல் கிளர்ச்சியும் நகைச்சுவையும், உண்டாகிறது. சமயோசித பேச்சுக்கு இராஜாபீர்பால், தெனுலிராமன், முதலியவர்கள் மிகச்சிறந்த உதாரணங்கள். முடிமன்னர்களையே பரிகசித்து, தமது தவறைத் தாமே உணர்ந்து திருந்த வகை செய்தார்கள் என்ருல் நாம் நமது குடும்பங்களிலுள்ள சின்னஞ்சிறு மாசுகளையும், பூசல்களையும் சமயோசிதமான பேச்சுக்களினுலே திருத்தியமைக்க முடியாதா? நீங்களே சொல்லுங்கள்.

## மலாயாவில் தமிழ் வளர்ச்சி

### செல்வி உமா சங்கர் கருத்து

சிங்கப்பூரிலே தமிழ் மொழியைப் பற்றி யாருமே பயப்பட வேண்டியதில்லை. தமிழ் அங்கு சிறப்புற்று வாழத்தான் போகின்றதென சமீபத்தில் அங்கிருந்து கொழும்பு வந்துள்ள செல்வி உமா சங்கர் கருதுகின்ருர். இவர் இலங்கையில் உள்ள இந்திய தூதுவர் காரியாலயத்துச் செய்திப் பகுதி அதிகாரி திரு ஸ்ரீநிவாசன் அவர்களின் சகோதரரின் மகளாவார். சிங்கப்பூரில் வைத்தியக் கல்வியிற் பயிற்சிபெற்றுவரும் உமா சங்கர் பரதநாட்டியத்திற் பக்குவம் பெற்றவர். இவரது பரதநாட்டியக் கச்சேரி சென்ற வெள்ளிக்கிழமை றேயல் கல்லூரியில் நடைபெற்றது. மலாயாவைப் பற்றிச் செல்வி உமா சங்கர் தெரிவித்துள்ள கருத்துக்கள் வருமாறு:

மலாயாவிற் சீன மக்களே தொகையிற் கூடியவர்கள். சீன மக்கள்கூடத் தமிழை விரும்பிப் படித்து வருகின்றனர். தொழில்முறை சம்பந்தமாகத் தமிழருடன் கலந்து பேசிக் கொள்ளுவதற்கு வேண்டிய தமிழ் அறிவு அவர்களுக்கு இருக்கின்றது. தேவையான அளவுக்கு ஒருவரது மொழி இன்னொருவர் கற்றுக்கொள்ள முயற்சிப்பது இருசாரரிடையேயும் நல்லெண்ணத்தை வளர்க்க உதவுகின்றது.

சீனமக்கள் கல்வி பயில்வதில் மிகுந்த ஊக்கம் உள்ளவர்கள். தினமும் பதினெட்டு மணி நேரம்வரை படிக்கின்ருர்கள். ஏச். எஸ். ஸி. வகுப்பிலேதான் ஆங்கிலத்தை முதன்முறையாகப் படிக்கின்றனர். எனினும் மிக விரைவில் ஆங்கிலத்திற் பேசக் கற்றுவிடுகின்றனர்.

## கல்வித்துறையிற் பெண்கள் பெரும்பங்கு கொள்ளவேண்டும்.

கல்வித்துறையிற் பெண்கள் பெரும் பங்கு கொள்ள வேண்டுமென்பது இந்திய சமூக நலக் குழுத்தலைவி திருமதி துர்க்காபாய் தேசுமுக் அவர்களின் கருத்து. சமீபத்தில் மதுரையில் நடைபெற்ற தியாகராச ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி விழாவுக்கு அம்மையார் தலைமை தாங்கிப் பேசியதாவது:

பெண்கள் பெருமளவில் கற்க வேண்டியிருப்பதை அனைவரும் உணரவேண்டும். 2, 3ஆவது ஐந்தாண்டுத் திட்டங்கள் வெற்றிபெற 20 இலட்சம் பெண்கள் தேவைப்படுகின்றனர். அவ்வாறு தேவைப்படும் பெண்களை நினைத்த உடனேயே பல துறைகளுக்கும் அனுப்ப இயலாது. அவர்கள் போதிய கல்வியறிவு பெற்ருகவேண்டும். சமுதாய நலத் திட்டத்தின் கீழ் கட்டப்படும் மருத்துவமனைகளுக்குப் போதிய பெண்கள் கிடைக்கவில்லை. தாய்-சேய் நல விடுதிகளிலாவது பெண் தாதிகள் இருக்கவேண்டியது இன்றியமையாததாகும். அதற்கு அவர்கள் கற்றவர்களாக இருக்கவேண்டும்.

ஆண், பெண் சேர்ந்து படிக்கும்முறை உயர்நிலைப் பள்ளிக்கூடங்களில் வெற்றி தரவில்லை என்றுகூறப்படுகிறது. போதிய பெண் ஆசிரியர்கள் பள்ளிக்கூடங்களிற் பணிபுரிந்தால் ஆண், பெண் இருபாலாரும் சேர்ந்து படிப்பதை வரவேற்கின்றனர். அதற்குப் பெண்கள் கல்வி கற்று முன்னேற வேண்டும்.

கிராமங்களுக்குச் சென்று கல்விப்பணி புரிவதைப் பெண்கள் அதிகம் வரவேற்பதில்லை. கிராமங்களில் உள்ள பள்ளிக்கூடங்களுக்கு எண்ணற்ற பெண் ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர். எனவே, பெண்கள் நாட்டு முன்னேற்றத்தில் அக்கறை காட்டி ஓரளவு தியாகம் புரிந்து நகரங்களைவிட, கிராமங்களுக்குச் செல்வதையே விரும்ப வேண்டும்.

### தனியாரின் உதவி

கடந்த இருநூற்ருண்டுகளில் தனிப்பட்டவர்கள் கல்வி வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டுள்ளனர். ஆனுல் அவர்கள் கல்வித்துறையில் ஆர்வங்குன்ருது பணி புரிய அரசு ஊக்கமளிக்கவில்லை. இதனுல் அவர்கள் மேலும் இத்திருப்பணியில் ஈடுபடமுடியாமல் சோர்ந்துவிடுகின்றனர். யாவரும் கல்வியின் முன்னேற்றத்திற்கு ஒத்துழைக்க முன்வருகின்றனர். ஆனுல் அரசினர் ஒத்துழைக்க முன்வர மறுக்கின்றனர். அரசினர்க்கும் தனிப்பட்டோருக்கும் கல்விப் பணியைப் பொறுத்த சட்ட திட்டங்களில் எவ்வித மாறுதலும் இருக்கக்கூடாது.


### அமைச்சரவையில் இடம்

பல்கலைக் கழகக் கல்வி மானியக்குழு கல்லூரிகளின் வளர்ச்சியிலேயே அதிகம் அக்கறை காட்டுகிறது. அடிப்படையான உயர்நிலைக் கல்வி நல்ல முறையில் அமைந்தால்தான் கல்லூரிக்கல்வி சிறப்புற முடியும். பெண்களுக்கும் ஆசிரியைகளுக்கும் தங்குவதற்குவேண்டிய விடுதிகள் இல்லாதது பெருங் குறையாகும். ஆண் கல்விக்கு அளிக்கும் மதிப்பைப் பெண் கல்விக்கும் சமஅளவில் அளிக்க வேண்டும். அரசியற் சட்டத்தின் 45-ஆவது பிரிவில் தொடக்கக் கல்விக்கு அளிக்கப்படவேண்டிய முக்கியத்துவம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கல்விக்குச் செலவிடும் பணம் வீணுகச் செலவிடப்பட்டதாகக் கொள்ளமுடியாது. அதனுல் பெரும் பலன் உண்டு.

பள்ளிக்கூடங்களில் ஆசிரியர் வேலை பார்க்கப் பெண்களே ஏற்றவர்கள் ஆவர். இதைவிடப் பொறுப்புமிக்க வேலைகள் பல உள்ளன. அவற்றை ஆண்கள் பார்த்துக்கொள்ளலாம். கல்லூரிகளில் வேண்டுமானுல் ஆண்களின் பணியை வரவேற்கலாம். ஆனுல் பள்ளிக்கூடங்களிற் பெண் ஆசிரியர்களே கல்வி கற்றுக்கொடுப்பது நல்லது.


★ நகைகளுக்கும்
★ வைரங்களுக்கும்



நகைமாளிகை

ஏ. கே. எஸ். அன் சன்ஸ்
65, கன்னுதிட்டி - யாழ்ப்பாணம்



★ பெண்களுக்குத் தேவையான நவநாகரிகமான பொருள்களுக்கும்

★ மற்றும் குழந்தைகளின் 'விளையாட்டுச் சாமான்களுக்கும்

★ "றேயல்" தலைமுடிகளுக்கும்

சிறந்த இடமெனப் பெண்கள் கூறுவது

★

பென்ஸி பலெஸ்

ஒன்றே!

மெயின் வீதி : : யாழ்ப்பாணம்

# சைப்பிரஸ் தீவும் அதன் அரசியற் சிக்கலும்..

சைப்பிரஸ் 3,752 சதுர மைல் நிலப்பரப்புள்ளது. இத்தீவு மத்திய தரைக்கடலின் கிழக்குப் பாகத்தில் துருக்கிக்கு 40 மைல் தெற்கேயும், சிரியாவுக்கு 60 மைல் மேற்கேயும், எகிப்துக்கு 240 மைல் வடக்கேயும், கிரேக்க தீவாகிய ரோட்சிலிருந்து 250 மைல் தூரத்திலும் கிரீசிலிருந்து 480 மைல் தூரத்திலும் ஒரு கேந்திரத்தானமாக அமைந்துருக்கிறது.

1956 இல் இராணுவத்தினர் நீங்கலாகச் சனத்தொகை 5,31,000 ஆக இருந்தது. இவர்களுள் ஏறக்குறைய 80 வீதத்தினர் கிரேக்க சைப்பிரியர்களாகவும், ஏறக்குறைய 18 வீதத்தினர் துருக்கிய சைப்பிரியர்களாகவும் இருந்தனர். சைப்பிரஸின் தலைநகரம் நிக்கொசியா (Nicosia). பிரதான துறைமுகங்கள் பாமகுஸ்ரா (Famagusra), லிமாசொல் (Limassol) லானக்கா(Larnaca) என்பனவாம்.

மக்களின் பிரதான தொழில் விவசாயம். தீவின் மத்தியிற் பரந்துள்ள மெசௌரிய (Mesaoria) சமவெளியே முக்கியமான விளைநிலப் பிரதேசமாகும். ஏற்றுமதியில் விவசாயப் பொருள்கள் 25 அல்லது 35 வீதம் வரை இருக்கும். செம்புச் சுரங்கவேலையும் உள்நாட்டுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காகச் சில கைத்தொழில்களும் நடைபெறுகின்றன.

1878 இல் பிரித்தானியரின் ஆட்சி சைப்பிரசில் ஆரம்பமாகியது. உயர் கொமிஷனர் சட்ட நிர்வாகசபை சட்ட நிருபண சபை ஆகியவை அடங்கிய ஒரு அரசியல் அமைப்பு 1882 இல் தாபிக்கப்பட்டது.

1925 இல் சைப்பிரஸ் முடிக்குரிய குடியேற்றநாடு ஆகியது, உயர் கொமிஷனருக்குப் பதிலாக ஒரு தேசாதிபதி நியமிக்கப்பட்டார். 1931 இல் தீவில் நிகழ்ந்த கலவரங்கள் காரணமாகச் சட்ட நிருபண சபை கலைக்கப்பட்டு அதன் அதிகாரங்கள் தேசாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டன.

இரண்டாவது உலக மகாயுத்தம் முடிவடைந்ததும் பிரித்தானிய அரசாங்கத்தின் கட்டளைப்படி தேசாதிபதி ஓர் அரசியல் நிர்ணய சபையைக் கூட்டினார். கிரீசுடன் சைப்பிரசை இணைப்பதற்கு உழைக்கும் "இனேசிஸ்" (Enosis—union with Greece) எனப்படும் வலதுசாரி இயக்கத்தினர் இச்சபையைப் பகிஷ்கரித்தனர்.

1948 மே மாதத்திற் புதிய அரசியல் திட்டம் ஒன்றின் விபரங்களை பிரித்தானிய அரசாங்கம் வெளியிட்டது. அரசியல் நிர்ணய சபையிலிருந்த இடதுசாரி அங்கத்தவர் இச்சிபார்சுகளை எதிர்த்து வாக்களித்துவிட்டு விலகினமையால் இச்சிபார்சுகள் கைவிடப்பட்டன.

1953 இல் கிறீஸ் அரசாங்கம் "இனேசிஸ்" இயக்கத்தை ஆதரிக்கத் தொடங்கியது. "எயோக்கா" எனப்படும் சைப்பிரஸ் தேசீய வீரர்களின் இயக்கமும் (Eoka-National organisation of Cypriot Combatants) தீவில் ஆரம்பிக்கப்பட்டது.

1954 ஜூன் மாதத்திற் பிரித்தானிய அரசாங்கம் வெளியிட்ட புதிய அரசியல் திட்டச் சிபார்சுகளை கிறீஸ் அரசாங்கம் நிராகரித்து சைப்பிரஸ் சிக்கலை ஐக்கிய நாடுகள் தாபனத்தின் கவனத்திற்கும் கொண்டுவந்தது. நவம்பர் மாதத்தில் "எயோக்கா" இயக்கம் திருத்தியமைக்கப்பட்டது. ஐக்கிய நாடுகள் தாபனம் சிக்கலை விவாதிக்க மறுத்ததும் டிசம்பர் மாதத்தில் தீவிர கலவரங்களும் பயங்கர நடவடிக்கைகளும் ஆரம்பமாயின.

1955 ஜூன் மாதத்தில் தேசாதிபதி, குடியேற்றநாட்டு மந்திரி, கிறீஸ், துருக்கி வெளிநாட்டு மந்திரிகள் ஆகியோரிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளினுல் ஒருபலனும் ஏற்படவில்லை.

புதிய தேசாதிபதியான சேர் ஜோன் ஹார்டிங் (Sir John Harding) கிரேக்க சைப்பிரியரின் தலைவரான அதி மேற்றிராணியார் மாக்காரியோஸ் (Archbishop Makarios) அவர்களுடன் 3-10-55 இல் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தார். குடியேற்ற நாட்டு மந்திரியும் வந்து கலந்து கொண்ட இப்பேச்சுவார்த்தைகள் ஒரு பயனுமின்றி 1956 பெப்ரவரியில் முடிவடைந்தன.

அதி மேற்றிராணியார் மக்காரியோசும் மூன்று மத குருமாரும் இந்து சமுத்திரத்திலுள்ள சேச்சில்ஸ் (Scychelles) தீவுகளுக்கு 9-3-56 இல் நாடு கடத்தப்பட்டனர். இவர்களின் சிறைவாசம் 28-3-57 இல் முடிவடைந்தது. மக்காரியோஸ் சைப்பிரசுக்குத் திரும்புவதற்கு அனுமதி அளிக்கப் படாதமையால் அவர் கிறீசுக்குச் சென்று வசிக்க வேண்டியதாயிற்று.

1956 ஜூன் மாதத்தில் சைப்பிரசுக்கு வந்த பிரபு ரட்கிளிப் டிசம்பரில் தமது அரசியற் சிபார்சுகளை வெளியிட்டார். இச் சிபார்சுகளை அடிப்படையாகக்கொண்டு பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்குத் துருக்கி இணங்கியது; கிறீஸ் இணங்கவில்லை.

1857 மார்ச் மாசத்தில் இச்சிக்கலைத் தீர்க்க பிரபு இஸ்மே முன்வந்த போது கிரேக்க அரசாங்கம் விரும்பவில்லை. 3-12-57ல் சேர் ஹியூஜ்வுற் புதிப தேசாதிபதியாக கடமையேற்ருர்.

சைப்பிரசில் 265 பேர் 1-4-58 க்கும் 15-4-58க்கும் இடையிற் பயங்கர வாதிகளுக்குப் பலியாயினர்.

19-2-58 ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் தேசாதிபதி வுற்றும் பிரித்தானிய வெளிநாட்டு மந்திரி திரு. செல்வின் லோயிட்டும் அங்காரா, ஏதென்ஸ் நகரங்களிற் பேச்சுவார்த்தைகள் நடத்தினர்.

பிரித்தானியா பிரதம மந்திரி புதிய கொள்கையையும் பங்காட்சித் திட்டத்தையும் (Partnership Plan) 19-6-58 இல் வெளியிட்டார். இத்திட்டப்படி பிரித்தானியாவும், கிறீசும், துருக்கியும் சைப்பிரசை ஏழு வருடகாலத்திற்குப் பின் பங்காக நிர்வகிக்கவேண்டும். அப்பொழுது தீவில் ஒரு சமூகச் சுயாட்சி அதிகாரமுள்ள பிரதிநிதித்துவ அரசாங்கம் நிறுவப்படும் என்றும் அதன் கட்டாய அம்சங்களும் வெளியிடப்பட்டன.

இத்திட்டத்தைக் கிறீசும் துருக்கியும் வரவேற்கவில்லை. 1958 கிறிஸ்மஸ் விழாக் காலத்திற் சில நெருக்கடி நிலைமைக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன.

1959 பெப்ரவரி மாதத்திற் கிறீசும், துருக்கி ஆகிய நாடுகளின் பிரதம மந்திரிகளும் வெளிநாட்டு மந்திரிகளும் சூரிச்சிற் கூடி ஒரு உடன்பாட்டுக்கு வந்துள்ளனர். இத் திட்டத்தைப்பிரித்தானியா அங்கீகரிக்க வேண்டுமாதலால் 17-2-59 இல் லண்டன் மாநகரில் ஒரு வட்ட மேசை மாநாடு நடைபெறும். இதிற் பிரித்தானிய பிரதம மத்திரி, குடியேற்ற நாட்டு மந்திரி, வெளிநாட்டு மந்திரி, கீறீஸ் துருக்கி ஆகிய நாடுகளின் பிரதம மந்திரிகள் வெளிநாட்டு மந்திரிகள், அதிமேற்றிராணியார் மக்காரியாஸ், சைப்பிரசின் தேசாதிபதி, சைப்பிரியத் தலைவர்கள் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். 21-2-59க்கு முன் இச்சிக்கலைத் தீர்த்து வைக்கும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இச்சிக்கல் தீர்க்கப்படுவதற்கு முட்டுக் கட்டையாக இருந்து வந்தவை பின்வருமாறு:

1. பிரித்தானியாவும் நேச நாடுகள் தீவில் தளங்களை வைத்திருக்க விரும்புகின்றனர்.
2. சுயஸ்பிராந்தியத்தைஇழந்த பின்பு பிரித்தானியா சைப்பிரசைக் கைவிட விரும்பவில்லை.
3. தீவுக்குச் சுயாட்சி வழங்கப்படுவதை சிறுபான்மை துருக்கிய சைப்பிரியர் விரும்பவில்லை.
4. தீவை இரு கூறுகளாக்குவதை கிரேக்க சைப்பிரியர் விரும்பவில்லை.
5. 1959பெப்ரவரிவரைகிரேக்க அரசாங்கத்துக்கும், துருக்கி அரசாங்கத்துக்கும் இடையே நிலவிவந்த கருத்து வேற்றுமை. இவ் வேற்றுமை நிலவும் போது சிக்கலுக்கு ஒரு முடிவு கண்டு பிரிந்தானியா கிறீஸ் அல்லது துருக்கியின் நேச உறவை இழக்க விரும்பவில்லை.


★ யன்னல் பூக்கண்ணுடிகள்

★ வாழ்த்துப் பத்திரங்கள்

★ திறமான முகம் பார்க்கும் கண்ணுடிகள்

மற்றும் படங்கள் பிறேம்போடுவதற்கும் தகுந்த இடம்

ஜெஸிமா பிக்ஸர் பலெஸ்

கே. கே. எஸ். வீதி :: யாழ்ப்பாணம்.


உலக நிலை

## மாக்மில்லனின் மொஸ்கோ யாத்திரை

பிரிட்டனின் முதலமைச்சர் மாக்மில்லன் மொஸ்கோவுக்கு விரைவிற் சென்று சோவியத்து முதலமைச்சர் குருஷேவுடன் பேச்சு வார்த்தைகள் நடாத்த விருக்கின்ருர். திரு. மாக்மில்லனின் மொஸ்கோ யாத்திரை பற்றி லண்டன்மாநகரிலுள்ள இராசதந்திர வட்டாரங்களிற் பல்வேறு கருத்துக்கள் நிலவி வருகின்றன. இரு முதலமைச்சர்களினதும் பேச்சுவார்த்தைகளின் விளைவாக இருநாடுகளுக்குமிடையே அனுக்கிரமிப்பு ஒப்பந்தம் ஏற்படக்கூடுமெனக் கருதப்படுகின்றது. இந்த யோசனையை ருசியாவின் முதலமைச்சர் குருஷேவ் அவர்களே கூறுவார் என நம்பப்படுகின்றது.

பிரிட்டனின் முதலமைச்சர் மாக்மில்லன் இம்மாதம் 21-ந் திகதி வெளிநாட்டு அமைச்சர் செல்வின் லொயிட் அவர்களுடன் ருஷியாவுக்குச் சென்று அங்கு 10 நாட்கள் தங்குவார்.

### இலங்கை நீலக் கற்கள்

மொனக்கோ ராணி கிறேஸ் அவர்களுடைய உருவச் சிலை தங்கத்தால் செய்யப்படுகிறது; கண்களுக்கு இரண்டு இலங்கை நீலக் கற்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றன. ராணியின் நீலக்கண்களை நிறத்தில் இவை ஒத்தவை. இச்சிலையை, முன்பு ராணி எலிஸபெத் சிலையைச் செய்த இத்தாலிய சிற்பி றெனட்டோ சீனேரினி செய்வார்.

### சனநாயகம் பரவுகிறது

சென்ற புதன்கிழமை நேபாளத்தில் முதலாவது தேர்தல் நடைபெற்றது. மன்னர் மகேந்திரன் ஜனநாயக முறையையும் பாராளுமன்றத்தையும் புகுத்தும் பிரகடனம் ஒன்றில் பிரதிநிதி சபை 109 அங்கத்தவர்களைக் கொண்டதாயும் மகா சபை 36 அங்கத்தவர்களைக் கொண்டதாயும் இருக்குமெனக் குறிப்பிட்டார்.

## டல்லஸின் வாரிசு யார்?

அமெரிக்காவின் வெளிநாட்டு அமைச்சர் டல்லஸ் நிரந்தரமாக ஓய்வு பெறுவாரா, அல்லது தொடர்ந்து பதவி வகித்து வருவாரா என்பது மிக விரைவில் நிச்சயமாகிவிடும். இந்த இடைக்காலத்தில் அவரது வியாதி விரைவிற் குணப்படக்கூடியதா என்பதை டக்டர்கள் கூறிவிடுவார்கள். டல்லசுக்கு ஏற்பட்டுள்ள புற்றுநோயைக் குணப்படுத்துவது சுலபமானதன்று எனப் பத்திரிகைகள் கூறுகின்றன.

### வாரிசு யார் ?

டல்லசுக்குப் பின்னர் யார் அப்பதவியை வகிக்கக் கூடும்? இந்தக் கேள்வி உலகின் பல பாகங்களிலும் எழுந்துள்ளது. இப்போது பதில் வெளிநாட்டு அமைச்சராகப் பணியாற்றி வரும் கிஸ்டியின் ஹெர்டர் அப்பதவியை நிரந்தரமாகப் பெறக்கூடுமெனக் கருதப்படுகின்றது. ஐஸன்ஹோவர் விரும்பினுல் தாம் அப் பதவியை ஏற்கத் தயார் எனக் கிறிஸ்டியன் கூறினுராம்.

### போகாதே, நில்!

பர்மா முதலமைச்சர் நூவின் என்பவர் தமது பதவியைத் துறந்து விட்டார். அவரைத் தொடர்ந்து கடமையாற்றி தேர்தலை நடத்தும்படி வேண்டிக் கொள்வார்கள் போலிருக்கிறது.

### புதிய தபால் முத்திரை

சார்ல்ஸ் டாவினுடைய 150 வது பிறந்த தினத்தை ஒட்டியும் இவான்ஜெலிஸ்டா ரொறிசில்லியின் 350 வது பிறந்த தினத்தை யொட்டியும் இரு புதிய முத்திரைகள் ருஷியாவில் வெளியாகியிருக்கின்றன.

### வேண்டாத விருந்தாளி

மேற்கு ஜெர்மனி பாதுகாப்பு அதிகாரி டக்டர் ஒட்டோ ஜோன் என்பவர் பிரிட்டனில் இறங்க அனுமதிக்கப்படவில்லை. "முன்பு என்னை துரோகி என்று கூறியவர்கள் இச்சம்பவத்திலிருந்தாவது உண்மையை உணர்ந்து கொள்வார்கள்" என்ருர் அவர், ஏமாற்றமும் விரக்தியும் கொண்ட நிலையில்.

### பௌதிகப் பேராசிரியர் மறைந்தார்

பௌதிகவியலுக்குரிய நோபல் பரிசைப்பெற்றவரான சர் ஓவென் வில்லியம் ரிச்சார்ட்சன் காலமாகிவிட்டார்.

### இராணி மீது வழக்கு

லங்காஸ்டரில் ஈயச்சுரங்கம் சம்பந்தப்பட்ட வரிகள் செலுத்தாத குற்றத்துக்கு ராணி எலிசபெத்மீது தொடரப்பட்ட வழக்கு கைவிடப்பட்டுள்ளது.

ஈராக் அமைச்சர்கள் பதவி துறந்ததைத் தொடர்ந்து அங்கே கலகங்கள் மூண்டுள்ளன. வடக்கே மோசலிலும் தெற்கே பஸ்ராவிலும் கூட ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. முன்னுள் உதவி முதலமைச்சர் ஆரெப்புக்கு மரண தண்டனை விதித்ததன் விளைவே இது.

### தடை நீக்கம்

அநூரின் பெவான் எழுதிய "பயத்துக்குப் பதில்" "ஜனநாயக தேசீயம்" என்ற இரு நூல்களுக்குரிய ஜோர்டானில் விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டுள்ளது.

# ஈழநாடு

யாழ்ப்பாணம், விளம்பி ஆண்டு மாசி மீ 9 உ (21-2-59)



## பொதுமக்கள் விரும்புவார்களா?

பொது வேலை நிறுத்தம் நடத்துவதா, இல்லையா என்பதுபற்றிய தீர்மானத்தைச் செய்யும் போது, தொழிற் சங்கத்தலைவர்கள் ஒரு முக்கியவிஷயத்தைக் கவனத்திற்கொள்ள வேண்டும். இவ்வித நடவடிக்கையாற் பொதுசன நன்மை எவ்வளவு தூரம் பாதிக்கப்படும் என்பதே அது.

பாதுகாப்புத் திருத்த 'மசோதா' வைத் தொழிற் சங்கங்கள் எதுவும் ஆதரிக்கவில்லை. அது அவசர அவசரமாக நிறைவேற்றப்பெற்ற முறையை அனைவருமே கண்டிக்கின்றனர். ஆனாலும் அரசினரின் இந்த விரும்பத்தகாத நடவடிக்கையை எதிர்த்து ஆட்சேபிக்கப் பொது வேலை நிறுத்தம் நடத்துவதா, இல்லையா என்பது பற்றி இலங்கையிலுள்ள பல தொழிற் சங்கங்களுக்கிடையேயும் கருத்து வேற்றுமைகள் இருந்துவருகின்றன.

இவ்வாறு இச்சங்கங்களிடையே கருத்து வேற்றுமைகளும் பிளவுகளும் ஏற்பட்டுள்ள நிலையிற் பொது வேலை நிறுத்தம் நடத்துவது உகந்ததா? அது வெற்றி தருமா? என்பது ஒருபுறமிருக்க இதுபற்றிப் பொதுமக்களின் கருத்து யாதென்பதைக் கவனிக்கவேண்டும்.

இப்போதெல்லாம் நாட்டில் வேலை நிறுத்தங்கள் அடிக்கடி நடைபெற்று வருவதால் விலைவாசிகள் ஏறி, வாழ்க்கைச் செலவுகளும் அதிகரித்து வருகின்றன. இதனாற் பாதிக்கப்படுவோர் சாதாரண வாழ்க்கையை நடாத்திவரும் பொதுமக்களேயாவர். மீண்டும்பொது வேலை நிறுத்தப் போராட்டம் நீடித்து நடப்பதாயின் பொதுமக்களின் சங்கடங்கள் மேலும் அதிகரிக்கலாம்.

எம். ஈ. பி. ஆட்சியின் வகுப்புவாத நடவடிக்கைகள் காரணமாகவே நாட்டில் அமைதியும் ஒற்றுமையும் குலைந்து, கலவரங்களும் அவசர நெருக்கடிகளும் ஏற்படலாயின. இதைச் சமாளிப்பதற்காகப் பாதுகாப்புத் திருத்த மசோதாவை அரசாங்கம் கொண்டு வந்திருக்கிறது. இந்த அவல நிலையும் அடக்குமுறைச் சட்டங்களும் பொதுமக்களின் விருப்பத்திற்கு மாறானவை.

அரசினர் நாட்டு மக்களின் நல் வாழ்வுக்காக ஏதோ எல்லாம் செய்துவருவதாகக் கூறி வருகின்றனர். அபிவிருத்திகள் ஒன்றுமில்லாவிடினும் மக்கள் உயிரை வைத்துக்கொண்டு அமைதியாக வாழ முடிந்தால் அதுவே அவர்களுக்குப் போதுமானது. இவ்வாறு மக்கள் நினைக்கும் அளவுக்கு நிலைமை இன்று நாட்டில் உருவாகியுள்ளது. இவ் வேளையில் பொது வேலை நிறுத்தங்களால் மீண்டும் குழப்பங்கள் மூலைக்குமூலை தலை தூக்குமாயின் அதனை எக்காரணம் பற்றியும் எவரும் விரும்பமாட்டார்கள்.

எம். ஈ. பி. ஆட்சியின் போக்குச் சரியில்லையானல், அதனை மாற்றவோ அல்லது வீழ்த்தவோ வேறு சனநாயக முறைகள் இருக்கின்றன. அதைவிடுத்துத் தொழிற் சங்கங்களிடையே விரும்பத்தக்க ஒற்றுமை இல்லாத நிலையில், அரசியற் காரணங்களுக்காக நீடித்த பொது வேலை நிறுத்தங்களை மேற்கொள்வது சம்பந்தப்பட்ட தொழிலாளர்களுக்கோ பொது மக்களுக்கோ நன்மையாகாது. தவிர, எந்த நோக்கத்துடன் இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறதோ அது நிறைவேறுவதும் சந்தேகத்துக்குரியதே. இவற்றையெல்லாம் நன்கு யோசித்தே தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தம்பற்றி முடிவு செய்யுமென நம்புகின்றோம்.

### தகாத உத்தரவு

தனிப்பட்ட மத தாபனங்களால் நடாத்தப்பெறும் பள்ளிக்கூடங்களிற் பட்டதாரி ஆசிரியர்களை நூற்றுக்கு ஐம்பதுக்கு மேல் நியமிக்கக் கூடாதென்று கல்வி அமைச்சர் தஹநாயக்கா பிறப்பித்துள்ள உத்தரவு, அப்பள்ளிக்கூடங்களையும், பட்டதாரிகளையும் மட்டுமன்றி, மாணவர்களின் படிப்பையும் பாதிப்பதாகும்.

அரசாங்கப் பள்ளிக்கூடங்களின்கல்வித்தரத்தைஉயர்த்த அதிக பட்டதாரிகளை நியமிக்க வேண்டுமென்றுகருதியே கல்வி அமைச்சர் இவ்வுத்தரவு போட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. ஆனல் ஏற்கனவே நூற்றுக்கணக்கான பட்டதாரிகள் வேலையின்றிக் கஷ்டப்படுகிறார்கள். பிரதிவருடமும் இவர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும். ஆகவே, அரசாங்கப் பள்ளிக்கூடங்களில் நியமிக்கப் பட்டதாரிகளுக்குப் பஞ்சமில்லை.

இவ்வித கட்டுப்பாடுகளால் உதவி நன்கொடை பெறும் பள்ளிக்கூடங்களின் கல்வித்தரம் குறைவதுடன் அங்குபடிக்கும் லட்சக்கணக்கான மாணவமாணவிகளின் கல்வியும் பாதிக்கப்படலாம். அவர்களது நன்மையைக் கல்வி அமைச்சர் கருதுவதாயின், இந்தத் தகாத உத்தரவை உடனே நீக்கிவிட வேண்டும். இல்லையேல் உதவி நன்கொடை பெறும் பள்ளிக்கூடங்களையெல்லாம் கைப்பற்றவே இவ்வித கட்டளைகள் பிறப்பிக்கப்படுவதாகக் கருதப்படும்.

### மொஸ்கோ செல்லும் மாக்மில்லன்

இன்று பிரிட்டிஷ் முதலமைச்சர் மாக்மில்லன், மொஸ்கோவுக்குச் செல்லுவது மேற்கு—கிழக்கு நெருக்கடிகளைக் குறைக்கவும், உலக சமாதானத்தைப் பலப்படுத்தவும் உதவ வழி செய்யக் கூடியதாகும். இது காரணமாக வல்லரசுப் போட்டிகள் நீங்கிவிடுமென்று நாம் நம்புவதற்கில்லை. ஆனல் இரு பரம விரோதிகளும் நேரிற் சந்தித்துக் கள்ளங்கபடமற்ற உள்ளத்துடனே கலந்து பேசினல், எவ்வளவு நாட்பட்ட மனத்தாங்கலும் பரிதியைக் கண்ட பனிபோல நீங்குவது சாத்தியம்.

சென்ற யுத்தகாலத்தில் பிரிட்டனும் ருஷியாவும் நட்புடனிருந்து ஒத்துழைத்து மகத்தான தியாகங்கள் செய்து பொதுச் சத்துருவான ஹிட்லரை வீழ்த்தின. யுத்தம் முடிந்ததும் துரதிருஷ்டவசமாக இரு நாடுகளுக்கும் வேற்றுமைகள் அதிகரித்தன. எதிர்எதிராக இரு இராணுவ கோஷ்டிகளாக கச்சைகட்டி நின்று, ஒருவர் மீது ஒருவர் சந்தேகமும் பீதியுங் கொண்டு போட்டா போட்டியுடன் அடுத்த யுத்தத்துக்கு ஆயுத முஸ்தீபுகளைச் செய்கின்றனர். உலக மக்களின் முன்னேற்றத்துக்கு உதவவேண்டிய செல்வம், அணுகுண்டுகளுக்குப் பாழாகின்றன. இதனல் இரு சார்பினருக்கு மட்டுமன்றி உலகிலுள்ள எல்லா மக்களுக்குமே இக்கஷ்டமும் நஷ்டமும்.

அரசியல் பொருளாதார அமைப்புகளில் என்ன வேற்றுமைகளிருப்பினும் நல்லெண்ணம் மட்டும் இருப்பின் எல்லா நாடுகளும் சேர்ந்து வாழ உலகிலே நிச்சயம் இடமுண்டு. அப்படிச் சேர்ந்து வாழவும், பரஸ்பர பீதிகளையும், சந்தேகங்களையும் நீக்கிக் கொள்ளவும் உதவுமென்ற நம்பிக்கையுடனேயே மாக்மில்லன் மாசற்ற மனதுடன் மொஸ்கோ செல்லுவதாயின் இச்சந்தர்ப்பத்தை ருஷிய குருசேவ் அலட்சியப்படுத்த முடியாது.

சமீபத்தில் ருஷியாவின் அபாரமான விஞ்ஞான சாதனையைக் கண்டு பிரமித்துவிட்ட மேற்கு வல்லரசுகள், ருஷியாவுடன் புதிய நட்புக் கொள்ள முன்வருவதில் வியப்பில்லை. இதே சமயம் ருஷியாவும் பஞ்சசீலக் கொள்கையின்படி மற்ற நாடுகளின் சந்தேகங்களையும் பீதிகளையும் நீக்க முன்வருமாயின் மாக்மில்லனின் இந்தயாத்திரை உலகசரித்திரத்தில் நல்லதொரு திருப்பமாக இருக்கமுடியும்

### சைப்பிரஸ்

இதுவரை சைப்பிரஸ் சம்பந்தமாகப் பிடிவாதம் காட்டி வந்த பிரிட்டன் இப்போது மனம்மாறி அத்தீவு மக்களுக்கு அரசியல் உரிமைகள் அளிக்கும் நோக்கத்துடன் மாநாடு கூட்டியுள்ளது. இச்செயல் பிரிட்டிஷ் முதலமைச்சர் மாக்மில்லனின் உயரிய இராச தந்திரத்துக்கு ஓர் அத்தாட்சியாகும்.

சூயஸ் கால்வாய்ப்பகுதியை இழந்தபின் சைப்பிரஸே பிரிட்டனுக்கு மேற்கு ஆசியப் பகுதிகளில் முக்கிய அரணாகும். இந்தியா, இலங்கை முதலிய நாடுகளுக்குச் சுதந்திரம் அளித்த பிரிட்டன், இச் சிறிய தீவுக்கு இக்காரணம்பற்றியே விடுதலை அளிக்க முடியவில்லை. இக் கருத்தையே இங்கு முன்னர் வந்திருந்த திரு. மாக்மில்லன் தெரிவித்திருந்தார்.

ஆனல் அத்தீவிலுள்ள பொதுமக்களின் நட்பையும் அபிமானத்தையும் பெறுதவரை அந்த அரண் பயனற்றதென்ற உண்மையையுணர்ந்தே இந்த மனமாற்றம் பிரிட்டனுக்கு இப்போது ஏற்பட்டிருக்க வேண்டும்.

இதுவரை காலம் அங்குள்ள கிரேக்கரும் துருக்கியரும் விரோதிகளாகிப் பிளவுபட்டிருந்தனர். பிரிட்டனின் பிரித்தாளும் தந்திரம் இதற்குக் காரணமாகவும் இருந்திருக்கலாம். இது எப்படியாயினும் கிரேக்க, துருக்கி, அரசாங்கப் பிரதிநிதிகள் ஒன்றுகூடி சைப்பிரஸ் அரசியல் விடுதலைபற்றித் தங்களுக்குள் ஓர் உடன்பாட்டிற்கு வர முடிந்தமை பெரியகாரியமேயாகும். பிரிந்திருந்த இரு சமூகங்களும் ஒன்றுபட்டுவிட்ட பின்னர் பிரிட்டன் அவர்களின் அரசியல் உரிமையை எப்படி மறுக்க முடியும்?

சைப்பிரஸ் சம்பந்தமாக லண்டனில் மாநாடு நடைபெறும் வேளையில் துருக்கி முதலமைச்சருக்கு விபத்து ஏற்பட்டது துரதிர்ஷ்டமேயாகும். தெய்வாதீனமாக அவர் உயிர்தப்பிவிட்டார். மாநாடும் வெற்றிகரமாக முடியுமென எதிர்பார்க்கிறோம். சைப்பிரஸ்மக்கள் பூரண திரத்துடன் அமைதியாக வாழக்கூடிய காலம் நெருங்கி வருவது உண்மையாகவே மகிழ்ச்சிக்குரிய தொன்றுகும்.

### உதவி அமைச்சர் கண்ட உண்மை!

சிங்களமே இலங்கையின் ஆட்சிமொழி யென்பது முடிந்த முடிபாகிவிட்டது. இந் நிலையில் போக்குவரத்து உதவி அமைச்சர் ஹென்றி அபயவிக்கிரம அவர்கள் யாழ்ப்பாணத்திற் கூறிய கருத்து மிக வேடிக்கையாக விருக்கின்றது. தமிழர் சிங்களத்தையும், சிங்களர் தமிழையும் படித்துவருவார்களாயின் நாட்டிலே நல்லெண்ணமும் நல்லுறவும் உரம்பெறுமென அவர் கூறியிருக்கின்றார். இது உதவி அமைச்சரின் சொந்தக் கருத்தாக இருந்தாலும் இதனல் இனி எவ்வித நன்மையும் ஏற்படப்போவதில்லை. சிங்களம் மாத்திரம் சட்டம் பிரதிநிதிகள் சபையில் நிறைவேறமுன்னர் திரு. அபயவிக்கிரம போன்றவர்கள் அதனல் ஏற்படக்கூடிய தீமைகளை எடுத்துக்காட்டித் தமிழும் அரசாங்கமொழியாகஆமையவேண்டுமென அமைச்சரவைக்கு வற்புறுத்தி யிருப்பார்களாயின் நாட்டின் ஒற்றுமை வாழ்வு இவ்வளவு தூரம் சீர்கெட்டிருக்க முடியாது. சிங்களம் மட்டும் சட்டம் நாட்டுக்கு விளைத்துள்ள அநர்த்தங்களோ அளப்பில. இதற்குப்பின்னரும் உதவி அமைச்சர், தமிழர் சிங்களத்தையும், சிங்களர் தமிழையும் படிப்பது ஒற்றுமை வாழ்விற்கு உறுதுணைபுரியுமெனக் கூறுவது உண்மைநிலையை உணராதவர்களின் பேச்சாகவே எமக்குத் தோன்றுகிறது.

தென்னிலங்கையிலும் பார்க்க யாழ்ப்பாணத்திலேதான் அமைதியாக வாழமுடிகின்றதென்பதை நேரிற் கண்டபின்னர்தான் உதவி அமைச்சருக்கு இந்த யோசனை உதயமாயிற்றுப்போலும்! யாழ்ப்பாணத்திலே தெரிவித்த இக் கருத்தைத் திரு. அபயவிக்கிரம அவர்கள் தமது சகாக்களுக்கும் சிங்களமக்களுக்குங் கூறி அவர்களிடையே மனமாற்றத்தை உண்டுபண்ணுவாராயின் ஒருவேளை ஏதும் நன்மை ஏற்படக்கூடும். அதனைத்தானும் நாம் இனி எதிர்பார்க்கவே முடியாது. இதனை உதவி அமைச்சர் அவர்களேதெரிவிக்கவும் தவறவில்லை.

## பூவலம்

சூத்திரப்பாவை

சர்வதேச வானிலே சென்ற கிழமை செய்திக் கடுங்காற்று ஒன்றும் வீசவில்லையென்றுல் அது ஒரு புது அமைதிக்கு அறிகுறி என்பது அர்த்தமல்ல. உலகச் செய்திகளுக்கும் ஏற்றத்தாழ்வுண்டு. மேனுடுகளில் முக்கியமாக லண்டன் நகரில் பல தொழிலாளர்களுக்கும் ஓய்வு கிடைக்கும்காலம் ஓகஸ்ட் மாதமாகும். அம்மாதத்தில் அரசியற் செய்திகளும் மிகக் குறைவது வழக்கம். பத்திரிகைகளுக்குத் தாயகமாகவுள்ள "பிளீற்" வீதியில் அம்மாதங்களிற் பத்திரிகைகளை நிரப்பும் பொறுப்பை வாசற் காவலாட்களுக்குக் கொடுப்பார்கள் என்பது ஒரு விகடக்கதை. மற்றவர்கள் ஓய்வெடுத்து இருப்பார்கள் என்பது கருத்து ஆகவே, இக்காலங்களிற்தான் மாபெரும் உலக யுத்தங்களும் ஏற்பட்டன. ஆழமற்ற அமைதியை நம்பியிருத்தல் ஆகாது. இருந்தும், சிறுநாடுகள் தங்கள் தொல்லைகளைத் தீர்ப்பதற்குக் கையாளும் நடவடிக்கைகள் அம்பலமாகியுள்ளன.

மேற்கு ஆபிரிக்காவில் அண்மையிற் சுதந்திரம்பெற்ற 'கானு' என்னும் தேசத்து முதலமைச்சர் "இன்குறுமா" என்பவர் ஆபிரிக்கக் கண்டத்தில் உள்ள பிரமுகர்களை அழைத்து ஓர் ஆபிரிக்க மாநாடு நடத்துவதாகப் பிரசாரம் செய்துள்ளார். தென் ஆபிரிக்கா வெள்ளையர்க்கே உரியது என்னும் கொள்கையை நிலைநாட்டிய டாக்டர் மலான் இறந்த மாதத்திலே இப்படி இயக்கம் ஒன்று தொடங்குவது கால மாற்றத்திற்கு நற்சகுனமாகிறது. "இன்குறுமா" தொடங்கிய நன்முயற்சி பிரித்தானிய சாம்ராச்சிய வெள்ளையர் நாடுகளில் விரும்பப்படுவதல்ல. ஆயினும் சாம்ராச்சியத் தொடர்பை நிலைநாட்டும் நோக்கமாக இக்கசப்பு மருந்தை உட்கொள்ள வேண்டியிருக்கிறதே! இந்த இயக்கம் புதியதோர் ஒப்பந்தத்தை உலகுக்குக் கொண்டு வர முடியும்.

ஒப்பந்தப் பேச்சு என்றதும் "பாக்தாத் ஒப்பந்தம்" ஞாபகத்துக்கு வருகிறது. ஈராக் எனப்படும் சிறு நாட்டில், சில மாதங்களுக்கு முன் புரட்சி நடைபெற்றபோது அந்த ஒப்பந்தமே பறந்து போயிற்று எனக் கருதப்பட்டதும் எகிப்து தேச "நாசர்" அப்புரட்சிக்குக் காலாயிருந்தும் ஒப்பந்தம் ஒரு மாதிரித் தப்பிப் பிழைத்தது. இதைக் கொலைசெய்ய வேறு சூழ்ச்சி ருஷியாவிலிருந்து அனுக்கிரம ஒப்பந்தமென்ற பெயருடன் அவதாரஞ் செய்தது. இதையும் பிரித்தானிய தூதுவர் தடுத்துவிட்டதாகச் செய்திகள் கூறுகின்றன. மேற்கு ஆசியாவில் இப்படிப்பட்ட "செஸ்" என்று சொல்லப்படும் சதுரங்க விளையாட்டுப்போல் கடும் சூது அடிக்கடி கிளம்புவது வழக்கம். ஆடுபவர்கள் மறைந்திருந்து வெடி

(9ஆம் பக்கம் பார்க்க்)

# பண்ணைப்பாலம் ஓராண்டிற் பூர்த்தியாகும்

## உதவி அமைச்சரின் உறுதிமொழி

யாழ்ப்பாணம்

"தமிழரும் சிங்களரும் நண்பர்களாக வாழவேண்டுமென்பதே எனது விருப்பம். தமிழர் சிங்களத்தையும், சிங்களர் தமிழ் மொழியையும் கற்று வருவார்களானால் இருசாராரிடையேயும் நல்லுறவும் நல்லெண்ணமும் உண்டாகும்."

இப்படி எந்த அரசியல்வாதி கூறினார் என வாசகர்கள் ஆச்சரியப்படக்கூடும். இவ்வாறு கூறியவர் சென்ற செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் வந்து திரும்பிய போக்குவரத்து உதவி அமைச்சர் ஹென்றி அபயவிக்கிரம அவர்களே. நல்லெண்ணச் சுற்றுப்பிரயாணம் ஒன்றினை முடித்துக் கொண்டு சென்ற வியாழக்கிழமை கொழும்பு திரும்பிய உதவி அமைச்சர் மூன்று தினங்கள் யாழ்ப்பாணத்திலே தங்கியிருந்தார். யாழ்ப்பாண மக்களிடையே நல்லெண்ணத்தை உண்டுபண்ண வேண்டுமென்ற ஆசை முதலமைச்சர் பண்டாரநாயக்காவுக்குஇருப்பதாகவும் அவர் கூறினார்.

"தாங்கள் எதைத்தான் கூறினாலும் இன்றைய அரசாங்கத்தின் மொழிக்கொள்கையானது தமிழ் பேசும் மக்களிடையே மிகுந்த கசப்பை உண்டுபண்ணிவிட்டதே" என்று பத்திரிகை நிருபர்கள் ஒருமுகமாக அவரிடம் தெரிவித்தபோது, "சிங்களம் அரசாங்கமொழியாகிவிட்டது. தமிழையும் நியாயமான அளவுக்கு உபயோகிக்க அரசாங்கம்தீர்மானித்துள்ளது. ஆகவே, நாம் பழையகுரோதங்களை மறந்து சகோதரர்களாக வாழ்வோம்" எனஅவர் தெரிவித்தார்.

இது இனி ஒருபோதும் முடியாத காரியமெனவும் சிங்களம் மாத்திரம் சட்டம் தமிழர் சிங்களரின் ஒற்றுமைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டதெனவும் பத்திரிகைக்காரர்கள் ஒருமுகமாகக் கண்டித்தனர். உதவி அமைச்சரால் நிலைமையைச் சமாளிக்க முடியவில்லை. யாழ்ப்பாணத்தில் அமைதி நிலவுகின்றதே யெனக்கூறிக் கதையை வேறுவிதமாக மாற்றிவிட்டார்.

யாழ்ப்பாணத்தின் நிலைமையை நேரிற் கண்டறிய வந்த உதவி அமைச்சரிடம் யாழ்ப்பாணம் பண்ணைப் பால வேலைகள் எப்போது பூர்த்தியாகும் என்று பத்திரிகையாளர்கள் அவரைக் கேட்டபோது, அவர் சிறிதுநேரம் யோசித்தார். அவ்வேளையிற் போக்குவரத்துப் பகுதி அதிகாரி ஒருவர் பண்ணைப்பாலம் விரைவில் இணைக்கப்படும் எனவும் பெரிய தோணிகள் போய்வருவதற்கான முறையிற் பாலம் உருவாகிவருகின்றதெனவும் தெரிவித்தார். பண்ணைக்குரிய பாலம் கொழும்புத் தொழிற்சாலையில் அமைக்கப்பட்டு வருவதாகவும் போதியளவு தொழிலாளர் கிடையாதபடியால் வேலைகளைத் துரிதப்படுத்த இயலாதநிலையில் அரசாங்கம் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். ஒருவருட காலத்திற் பண்ணைப்பாலம் பூர்த்தியாகவிடுமென்பது உதவியமைச்சரின் நம்பிக்கை.

யாழ்ப்பாணத்து வீதிகள் வானுலகத்துக்குப் போகும் பாதைகளைப்போலஅற்புதமாக விளங்குகின்றனவென்று அமைச்சர் மரைக்கார் குறிப்பிட்டதை உதவி அமைச்சருக்கு நினைவூட்டி அவரின் சொந்தக் கருத்தை அறிய விரும்பியபோது, அமைச்சர் மரைக்கார் எண்ணுவது போல வடபகுதியில் உள்ள பாதைகள் சீராக இல்லையெனவும் பகிரங்க வேலைப்பகுதியினரின் மேற்பார்வையிலுள்ள தெருக்கள் அவ்வளவு மோசமில்லை யெனவும் அவர் கூறினார்.

யாழ்ப்பாணத்துக்குக் குழாய் மூலம் குடிதண்ணீர் விநியோகம்செய்வதற்கான திட்டம் பற்றியோ, யாழ்ப்பாணப் புகையிரத நிலையத்தைச் சீராக்கி இக்காலத்துக்கேற்ற வசதிகளைச் செய்வதுபற்றியோ உதவி அமைச்சரிடம் திருப்தியான மறுமொழி பெற முடியவில்லை. புகையிரதப்பகுதியில் வேலை செய்யும் தொழிலாளர் தங்குவதற்கான வீடுகளைத் திருத்திப் பெரிதாக அமைப்பதிலேயே இப்போது தாம் கவனம் செலுத்தி வருவதாக அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாண வீதிகளை அகட்டுவது சம்பந்தமாக அதற்குரிய அதிகாரிகள் யோசித்துவருகின்றனர் என்பது அவரது பேச்சிலிருந்து அறியமுடிந்தது. சுன்னாகம் மத்திய மின்சார விநியோக நிலையத்தைப்பற்றி உதவி அமைச்சர் திட்டவட்டமாக எதுவும் சொல்லவில்லை.

பூநகரிப் பாலம் இன்று யாழ்ப்பாணத்து மக்களின் கவனத்தைப் பெரிதும் கவர்ந்து வருகின்றது. அங்கு ஆரம்பிக்கப்பெற்ற வேலையில் அரசினர் சிரத்தை காட்டுவதாயில்லை என்ற குற்றச்சாட்டைச் சுட்டிக் காட்டியபோது தாம்கொழும்பு திரும்பியதும்அதுபற்றிஉடனே விசாரித்து ஆகவேண்டிய நடவடிக்கைகளை விரைவிற் கையாளப்போவதாகவும் உறுதியளித்தார்.

காங்கேசன்துறை, திருக்கோணமலைத் துறைமுகங்களையும் திருத்தி அமைப்பதில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

சமூகநலத் திட்டங்களும் கல்வித் திட்டமும் அதிக தொகையான பணத்தை விழுங்கி விடுவதாற் போக்குவரத்துப் பகுதிக்குப் போதியளவு பணம் ஒதுக்கப் படுவதில்லை என அவர் கவலையுடன் கூறினார்.

எம். ஈ. பி. அரசாங்கத்தின் மீது நாட்டு மக்களுக்கு வெறுப்பு ஏற்பட்டு வருகின்றதே என்று அவரிடம் தெரிவித்தபோது அவர் இலேசாகச் சிரித்துவிட்டு, "அடுத்த பொதுத் தேர்தலின்போது வாக்காளர்கள் தாம் விரும்பியதைச் செய்து கொள்ளலாமே!" என்று கூறிவிட்டுச் சுருட்டைப் பற்றவைத்தார்!

# தமிழரும் மொழிச்சிக்கலும்

## சாஸ்திரியார் மீது வீண் புகார்!

— நமது நிருபர் —

கொழும்பு

மூன்று வாரங்களுக்கு முன் இலங்கைக்கு வந்த பேராசிரியர் துரைசாமி சாஸ்திரியார், ஏறத்தாழ 40 பிரசங்கங்கள் செய்துவிட்டுச் சென்ற வியாழனன்று இந்தியா திரும்பினார்.

இந்து சமய ஆலோசனைச் சபையார், பேராசிரியரின் விஜயத்தைப் பயன்படுத்திக் கொண்டு கொழும்பு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருக்கோணமலை, கண்டி, நாவலப்பிட்டி, பதுளை முதலிய இடங்களிலே இந்துசமய சம்பந்தமான பிரசங்கங்களுக்கு ஒழுங்கு செய்திருந்தார்கள்.

ஆங்கிலம், தமிழ் இவ்விரு மொழிகளிலும் பேராசிரியர் ஆங்காங்கே செய்த பல பிரசங்கங்களுக்கும் ஏராளமான மக்கள் சென்று கேட்டுப் பயனடைந்தனர். இந்து சபையாரின் இந்தப் புதிய ஏற்பாடு பாராட்டப்படுகிறது.

வியாழனன்று மாலை வெள்ளவத்தை சைவமங்கையர் கழக மண்டபத்தில் தியானத்தின் அவசியத்தையும் பயனையும் பற்றி அவர் பேசினார். பௌத்தர்களும், கிறிஸ்தவர்களும் தியானப்பயிற்சிக்கான வகுப்புகளை நடத்தி வருகின்றார்கள். அதுபோல இந்துக்களுக்கும் இருக்கவேண்டுமென்று சிலர் யோசனைசெய்து, அவ்வகுப்புகளை ராமகிருஷ்ண மடத்தில் நடத்த உத்தேசித்திருப்பதாகத்தெரிகிறது. இவ்விஷயமாக ஸ்ரீமதி சிவானந்தம் தம்பையா விசேஷ முயற்சி எடுத்துள்ளாராம்.

முதல் கூட்டத்துக்கு சுவாமி வரானந்தாஜி தலைமைவகித்தார். யோகி ராஜ் சச்சிதானந்தாவும் தியானத்தின் பயனைப் பற்றிப் பேசினார்கள்.

### பத்திரிகைச் செய்தி

தமிழர் சிங்களமும் படிக்கவேண்டுமென்றும் அது அவர்களுக்கு நன்மையாகுமென்றும் சாஸ்திரியார் சொன்னதாக ஒரு பத்திரிகையிற் செய்தி வெளியாயிற்று. மொழிச்சிக்கல் விஷயமாக இங்கு தமிழ் பேசும் மக்கள் ஒரு போராட்டம் நடத்திவருகையில், சாஸ்திரியார் இங்கு வந்து ஏன் இப்படிக் கூறவேண்டுமென்றும் கலாசார அமைச்சர்தான் அவரை இங்கு வரவழைத்து, இப்படியும் பிரசாரம் செய்யும்படி பணித்தாரோ என்றும் சில தமிழ் வீட்டாரங்கள் வேதனையும் வருத்தமும் தெரிவித்தன.

( 16ஆம் பக்கம் பார்க்க )

# இலங்கையில் நடப்பது ஜனநாயகமா!

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சீனத்தில் நடப்பதைப் பற்றிய ஒரு விஷயத்தை அவரிடம் நேருஜி தெரிவித்தாராம். இந்தியாவில் 12 மாதங்களில் நடைபெறும் ஒருவேலை, சீனத்தில் ஒருசில மாதங்களில், குறித்த திகதிக்குள் நடந்து முடிந்துவிடுகிறதாம். அரசாங்கம் தன் அதிகாரத்தைச் செலுத்தி வேலை வாங்குவதாக அங்கு சென்றிருந்த இந்திய இஞ்சினீயர் மூலம் தெரிந்ததாயும், ஆனால் இலங்கையிலே தாமும் தன் அதிகாரத்தைக் காட்டினால் "எனது நல்ல நண்பர் டாக்டர் பெரேரா தன் ஆட்களை வேலைநிறுத்தம் செய்யும்படி கூவி அழைப்பார்" என்றும் பலத்த சிரிப்புக்கிடையே கூறினார் முதலமைச்சர்.

இந்தியாவை விட இங்கு வேலைகள் நடப்பது மிகவும் மந்தம். ஆனால் இங்கு வேலைகள் மெதுவாக நடந்ததாலும், நாம் ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டுமென்றும் பல அரசியல் கட்சிகள் இருந்து வேலைசெய்ய சனநாயகமே அனுமதிப்பதாயும் பெருமையுடன் முதலமைச்சர் கூறினார்.

ஆனால் இலங்கையிலே உண்மையில் சனநாயகம் நடைபெறுகிறதா? இங்கு வாழ்க்கைச் செலவுகள் குறைந்தனவா? பல சமூகத்தினரும் அமைதியாக, மனத் திருப்தியுடன் வாழமுடிகின்றதா? பாதுகாப்புச் சட்டத்தைத் திருத்தவும், விசேஷ அதிகாரங்களைப் பெறவும் முதலமைச்சர் முன்வந்ததின் காரணம் என்ன? இக்கேள்விகளைப்பற்றிப் பாரபட்சமற்றவர்கள் யாரும் ஆராய்ந்து பார்த்தால் இங்கு நடைபெறும் "ஜனநாயகத்"தைப்பற்றிப் பெருமைகொள்ள முடியாது. ஜனநாயகத்தின் போர்வையால், வகுப்புவாத நடவடிக்கைகள் பல துறைகளிலும் எடுக்கப்படுவதைப் பார்க்கிறோம்.

அரசியற் திட்டப் பாதுகாப்பு விதிகளையும் மீறி இந்திய வம்சாவளி தமிழரின் வாக்குரிமை,பெரும்பான்மைப் பலத்தினால் பாதிக்கப்பட்டுவிட்டது. ஒரு சமூகத்தவரைப் பாதிக்கும் சட்டத்தை ஆக்கக்கூடாதென்று இலங்கை அரசியல் சட்டம் திட்டமாகக் கூறியும், இத்தீவில் இரு முக்கிய சமூகத்தினருள் ஒருவரான தமிழரின் மொழி உரிமையும், மேலதிகமான வாக்கினால் பறிக்கப்பட்டுவிட்டது. கேட்டால் 'நாங்கள் தேர்தற் காலத்தில் அளித்த வாக்குறுதியைத்தான் நிறைவேற்றினோம்' என்று முதலமைச்சர், பன்முறையும் கூறுகின்றார், தமிழ்பேசும் மக்களின் உணர்ச்சியைச் சற்றும் மதிக்காமல். மற்ற சமூகங்களைப் பாதிக்கும்படியான வாக்குறுதிகளைத் தேர்தற்காலத்தில் அளிக்கலாமா? தமது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆரம்ப அமைப்புத்திட்டத்தில், சிங்களம், தமிழ் இவ்விரண்டும் அரசாங்க மொழிகளாக இருக்குமென்று கூறப்பட்டிருந்த அடிப்படைக் கொள்கைகளையும், தேர்தலில் வாக்குகள் பெறுவதற்காக, காற்றில் விட்டது ஜனநாயகமா? தமது கட்சி ஆட்சிக்கு எதிர்பாராத முறையில் வந்தபின், தமிழ்பேசும் மக்களைப் பாதிக்கக்கூடிய பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதும் ஜனநாயகமா? இதைப்பற்றியெல்லாம் அரசியல் அறிவும் அனுபவமும் வாய்ந்த முதல் அமைச்சர் சற்றே நிதானமாக ஆராய்ந்தால், நிச்சயம் இங்கு நடைபெறும் 'ஜனநாயகத்'தைப் பற்றிப் பெருமைகொள்ள முடியாது.

பல அரசியற்கட்சிகள் இங்கு சேர்ந்து இருப்பதைப் பற்றிப் பெருமையுடன் கூறுகிறார் முதலமைச்சர். இவ்வித அரசியற் சுதந்திரம் இருப்பது நல்லதே. ஆனால், சுயநலமிகள் போட்டிக்கட்சிகளை ஆரம்பித்து வகுப்பு வெறிகளைத் தூண்டிவிடுவதைப் பார்க்கிறோம். உருப்படியான நிர்மாணத்திட்டம் வகுத்து, சமூகசேவையைச் செய்யாமல், வகுப்புத் துவேசங்களையும், இனவெறியையும் மூட்டிவிடச் சுதந்திரம் இருப்பின், அதுபற்றிப் பொதுமக்கள் மகிழ்ச்சியடைய முடியாது.

தேர்தல் வருகிறதென்றால், சிறப்பாகச் சிறுபான்மைச் சமூகங்களுக்குக் கதிகலக்கமாக இருக்கிறது. போட்டா போட்டியுடன் துவேஷப் பிரசாரத்தை நடத்தப் பலர்

# பூவலம்

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

வைப்பார்கள். இதுவும் ஒரு நவீன ராமாயணந்தான்!

* * *

"சைப்பிறஸ்" என்னும் தீவில் பத்து வருட காலமாக நடந்த சுதந்திரப் போராட்டத்தை நிறுத்தும் நோக்கமாக கிறீஸ் - துருக்கி - பிரிட்டன் ஒப்பந்தம் ஒன்று உருவாக்கப் பட்டுவிட்டதாகச்செய்தி எட்டியுள்ளது. ஒப்பந்தத்தைச் சீராக்க லண்டன் நகரிற் கூடிய துருக்கி — கிரேக்க பிரமுகர்களுக்கிடையே தகராறு கிளம்பியிருக்கிறது. குரங்கு தயிர்க் கட்டியை இரு பூனைகளுக்கு பங்குபோட்டதுபோற் பெரும் பங்கு ஆங்கிலேயருக்கே கிடைத்து விட்டாலும் விடும். அவர்களுக்கு அந்தத் தீவு யுத்தப் பாவிப்புக்குத் தேவை. அதற்குத் தடையாக உள்ளவர் "மக்காறியோஸ்" என்னும் அதி நிபுணத்துவம் வாய்ந்த அரசியல் வாதியாகிய மேற்றிராணியார். இந்த ஒப்பந்த அடிப்படை அவருக்குச் சம்மதமுடையதென்பதில்தான் சைப்பிறசின் பிற்கால அமைதி தங்கிநிற்கிறது. அமைதியை எல்லோரும் விரும்புவது.

எனினும் 'ஏயோக்கா' என்னும் துப்பாக்கிப் படை நடத்தும் பயங்கரச் செயல்களுமுள. சில இடங்களில் அகிம்சாதத்துவம் பலிக்காதுபோலும்!

## 'திருவள்ளுவர் காலம்'

### திரு. நடேசபிள்ளை விரிவுரை

சென்னைப் பல்கலைக் கழகத்தின் அழைப்பை யேற்று முன்னாள் அமைச்சர் சு. நடேசபிள்ளை அவர்கள் சென்னைப் பல்கலைக் கழக மண்டபத்தில் இம்மாதம் 25, 26, 27-ம் திகதிகளில் "திருவள்ளுவர் காலம்" என்னும் பொருள்பற்றி விரிவுரைகள் ஆற்றுவார்.

# யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

### 125 ஆவது ஆண்டு விழா

யாழ்ப்பாணத்தின் கல்வி விருத்திக்குக் காரணமாகவுள்ள கல்லூரிகளில் யாழ்ப்பாண மத்திய கல்லூரியும் குறிப்பிடத்தக்கது. இக்கல்லூரியின் 125 ஆவது ஆண்டு நிறைவு விழா 27-2-59 வெள்ளிக்கிழமை மிகச் சிறப்பாக நடைபெறும். அதி வணக்கத்திற்குரிய ஜே. எமலியானுஸ்பிள்ளை ஓ. எம். ஐ. அவர்கள் விரிவுரை ஆற்றுவார்கள். 1917 ஆம் ஆண்டு தொடக்கம் 1921 ஆம் ஆண்டு வரை இக்கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றிய எச். புல்லோ அவர்கள் அன்றைய நிகழ்ச்சிகளுக்குத் தலைமை தாங்குவார்கள். இவ்விழாவை முன்னிட்டு விஞ்ஞானப் பொருட்காட்சி ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

# மாவீரர் மௌலானா அபுல்கலாம் ஆஸாத் முதலாண்டு நினைவு நாள்

கோ. இராஜகோபால்

சுதந்திரச் சிற்பிகள் என்று விரல் விட்டு எண்ணக்கூடிய முன்னணித் தலைவர்களில் மௌலானா ஆஸாத் ஒரு பெரிய புள்ளி. இந்திய விடுதலை இயக்கத்திற் காந்தி அடிகளுக்கு உறுதுணையாக நின்று அவர் அளித்த ஆதரவு மகத்தானது. 1920-ஆம் ஆண்டு முதல் முதலாக டில்லியிற் காந்திஜீயைச் சந்தித்தார். அவ்வாண்டிலே தான் மௌலானா ஆஸாத்தின் தலைமையிற்கல்கத்தாவில் நடைபெற்ற கிலாபத் மகாநாட்டிற் காந்திஜியின் ஒத்துழையாமைத் திட்டத்தை முஸ்லீம்கள் ஏற்றுக் கொண்டனர். 1930-ஆம் ஆண்டு உப்புச் சத்தியாக்கிரகம் நடைபெற்ற காலத்தில் காந்திஜி ஓர் இடத்திலே தமது கருத்துக்களைத் தெரிவித்தார். "ஆங்கிலேயர் ஆட்சியால் இந்தத் தேசம் நாசமாய்ப் போய் விட்டது. பணத்துக்குப்பணம் போயிற்று; கலைக்குக் கலை போயிற்று; ஆத்ம சக்தியே அழிந்து போய்விட்டது. எனவே, இந்த ஆட்சியை நான் ஒரு பெருத்த சாபமாகக் கொள்கிறேன். இதனை அழிக்க நான் முற்பட்டுவிட்டேன். "மன்னர் வாழ்கவே" என்ற பாட்டை நான் எத்தனையோ தடவை இராகத்துடன் அழகாகப் பாடியிருக்கிறேன்; என்னுடைய நண்பர்களிற் பலரையும் பாடச் செய்திருக்கிறேன். மனுப்போடுவதிலும் பேட்டி கண்டு பேசுவதிலும் அப்பொழுது எனக்கு நம்பிக்கை இருந்தது. ஆனல், இன்றோ அவையெல்லாம் பறந்துவிட்டன. அந்த வழிகளில் இந்த அரசாங்கம் ஒரு நாளும் இணங்கி வராது. இப்பொழுது இராஜத்துவேஷத்தையே எனது மதமாகக் கொண்டிருக்கிறேன். நமக்குச் சாபமாகவிருக்கும் இந்த அரசாங்கத்தை அழித்துப் போடுவதே நமது தர்மமாகும்." இவ்விதம் காந்திஜி தம்மை ஏகாதிபத்ய எதிர்ப்பாளர் என்று பிரகடனம் செய்வதற்கு 15 ஆண்டுகளுக்கு முன்னரே மௌலானா ஆஸாத் அவர்கள் அசல் ஏகாதிபத்ய எதிர்ப்பாளராகிவிட்டார். இந்துக்கள் முஸ்லிம்கள் என்ற பிரிவினைச் சூழ்ச்சிகளிற் சிக்கிக்கொண்டு வெள்ளையர்களுக்குத் துதிபாடும் முஸ்லிம்களைக் கண்டு ஆஸாத் அவர்கள் வருந்தினர்கள். அஞ்சா நெஞ்சத்தோடு அதை எதிர்த்துப் பேச்சு வன்மையினாலும், எழுத்து வன்மையினாலும், செயலாலும் பிரசாரம் செய்தார். அதற்காகப் பஞ்சாலம், ஐக்கியமாகாணம் சென்னை போன்ற மாகாணங்களுக்குள் காலெடுத்து வைக்கக்கூடாததை தடை உத்தரவு போட்டதுமன்றி வங்காள மாகாணத்தைவிட்டு வெளியேற்றி றஞ்சி என்ற இடத்திற் கைதியாக்கினர்.

இவ்வாறு பல சிறைகளை ஆஸாத் அவர்கள் பார்த்திருக்கிறர்கள். கடைசியாக 1942 ஆம் ஆண்டு "வெள்ளையனே வெளியேறு" என்ற போராட்டகாலத்தில் ஆஸாத் அவர்கள் சிறையிடப்பட்டார்கள். அப்பொழுது அன்னரின் மனைவியார் காலமானர்.

நாட்டுப் பற்றும் இறைபணியுந்தான் ஆஸாத்தின் இரு கண்கள். மெக்காவிற் பிறந்தவர். திருக்குர்ஆனை நன்ருகக் கற்றிருந்தவர். கெய்ரோவில் உயர்தரக் கல்வி பயின்று மனம் விரிவடைந்தவர். இஸ்லாமிய சம்பிரதாயங்களிற் சிறந்த ஈடுபாடு உள்ளவர். அரபு, பாரசீகம், வங்காளி, உருது, ஆங்கிலம் ஆகிய பல மொழிகளில் மௌலானவுக்கு நல்ல புலமை உண்டு. பல வேறு இலக்கியங்களின் நல்லறிவால் பண்பட்ட அவரது மனம் குறுகிய அபிமானங்களை வெறுத்தது. ஆகையினற்ருன் மகாத்மா காந்தி, நேருஜி போன்ற பேரறிஞர்களின் மதிப்பையும் அவர் பெற்றிருந்தார். முஸ்லீம் பெரும்பான்மைத் தலைவர்களுடன் அரசியற் கருத்து வேற்றுமை கண்ட போதும், முஸ்லீம் பெருமக்களின் கடுங்கோபத்துக்கு இலக்கான போதும் மலை போன்ற எதிர்ப்பை அவர் சமாளித்தார். அப்போதெல்லாம் பொறுமையின் சிகரமாக விளங்கினரே அன்றி விரோதிகளைப்பற்றி ஒரு வார்த்தையேனும் கடுமையாகப் பேசியதில்லை.

பாரத மக்களிடையே அன்பையும், நேசத்தையும் தேசபக்தியையும், ஆண்டவனிடம் பக்தியையும், ஒருங்கேவளர்த்து விடுதலைக்கு எல்லோரும் சேர்ந்து உழைக்கச் செய்வதற்கு அவர் தம்மைப் பணித்துக்கொண்டார். அந்த அறப் பாதையின் நின்றும் மயிரளவேனும் விலகியதில்லை. அறப் பாதையில் மக்களை வழி நடத்திச் சென்ற கல்விக் களஞ்சியம், நந்தாவிளக்கு, மாவீரர் மௌலானா அபுல்கலாம் ஆஸாத்தின் வாழ்க்கை முடிவெய்தி இற்றைக்கு ஒரு வருடமாகிறது. தான் கண்டதைவிட சிறந்த நிலைக்கு சமுதாயம் உயரச்செய்வதற்குத் துணைபுரிபவர்கள் மகா புருஷர்கள். அம் மகா புருஷர் இறப்பதற்கு சற்று முன்னர் தமக்கு ஊசி போட்ட டாக்டரைப் பார்த்து இனி "அல்லாவிடம்விட்டு விடுங்கள்" என்ருர்கள். ஆஸாத் அவர்களின் உயிர் பிரிந்த பின்னர் சவ அடக்கத் தொழுகையைச் செய்து வைத்து ஜமியத் உல்—உலேமாத் தலைவர் மௌலானா ஆமத் சயத் கடைசியாகக் கூறிய வார்த்தைகள் "அஸ்—ஸலாம்—ஆலே—கும்" (போய் வாருங்கள்). நாமும் அவ்வாறே இன்றும் அம்மாவீரை நினைத்துக் கூறுகின்ரோம். போய் வாருங்கள்" என்று.

பழைய யுகம், புதிய யுகம் இரண்டின் நற்பண்புகளும் கலந்த ஒரு மகா புருஷராய் மௌலானா விளங்கினர்கள். அவரது உயர்ந்த கருத்துக்கள் எக்காலத்துக்கும் உரியன.

இந்தியச் செய்திகள்

# சனத்தொகைப் பெருக்கம்

## பிரீட்டிஷ் விஞ்ஞானி எச்சரிக்கை

பாடுபட்டுத் தேடிய சுதந்திரத்தைப் பாதுகாப்பதுடன் உலக வரலாற்றில் உன்னத நிலையைப்பெறுவதற்கும் தேசிய ஒற்றுமை மிக மிக அவசியமென்பதை மத்திய அரசினரின் பாதுகாப்புப்பகுதி அமைச்சர் திரு. வி. கே. கிருஷ்ண மேனன் சென்னையில் நடைபெற்ற இளைஞர் காங்கிரஸ் கூட்டமொன்றிற் பேசும்போது குறிப்பிட்டார். இந்தியாவின் ஒரு சிறு பகுதியாயினும் சரி, அதனைத் துண்டாடத் துணிபவர் மற்றையோரின் மதிப்புக்குரியவரல்லரெனக் கூறிய திரு மேனன் அவர்கள், நாட்டின் ஒற்றுமைக்கு ஊறு செய்ய யோசனை கூறுபவர்களின் பேச்சுக்களுக்கு இளைஞர்கள் செவி சாய்க்கக் கூடாதெனவும் வலியுறுத்தினர்.

### ஸ்ரீ வையாபுரிப்பிள்ளை நினைவு

காலஞ் சென்ற பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்களின் நினைவுநாள் சென்ற ஞாயிற்றுக்கிழமை சென்னையிற் கொண்டாடப்பெற்றது. பேராசிரியர் திரு. கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியார் பேசுகையில் திரு. வையாபுரிப்பிள்ளை அவர்கள் பரந்த கல்வியறிவும் நுணுகிய ஆராய்ச்சி வன்மையும் படைத்தவரெனவும், விஞ்ஞான முறைகளைக் கையாண்டு தமிழ் ஆராய்ச்சிகளை நடாத்திவந்தாரெனவும் குறிப்பிட்டார்.

### இந்தியாவின் சனப் பெருக்கம்

இந்தியாவின் சனப் பெருக்கம் இப்போதுள்ள விகிதத்தின் படி பெருகிச் செல்லுமானல் இன்னும் 45 ஆண்டுகளில் இப்போதுள்ள சனத் தொகையைப்போல் இரு மடங்காகி, இந்த நூற்றுண்டின் இறுதியில் 75 கோடியாகப் பெருகிவிடுமெனப் பிரபல பிரிட்டிஷ் விஞ்ஞானி சேர் ஜூலியன் ஹக்ஸ்லி புது டில்லியில் நடைபெற்ற குடும்பக் கட்டுப்பாடு மாநாட்டிற் பேசும்போது குறிப்பிட்டார். முதலமைச்சர் நேரு இம் மாநாட்டை ஆரம்பித்து வைத்தார். இந்தியா சனப் பெருக்கத்துக்கு ஏதோ ஒரு முடிவு காணத் தவறினல் நாட்டில் அரசியல் சமுதாய விபரீதங்கள் ஏற்படுமெனவும், சேர். ஜூலியன் எச்சரிக்கை செய்துள்ளார்.

### மொழியைத் திணிக்காதீர்!

இந்திய இராச்சிய சபையில் திரு. ரி. எஸ். பட்டாபிராமனும். திரு. ரி. எஸ். அவிநாசிலிங்கமும் இந்தியை அவசரப்பட்டுத் திணிக்கக்கூடாதென அரசினருக்கு எச்சரிக்கை செய்துள்ளனர். தென்னட்டவர் மீது விருப்பமற்ற வேற்று மொழியைப் புகுத்தினல் ஒற்றுமைக் குறையையும் குரோதத்தையும் அனவசியமாக வளர்ப்பதாகுமென அவர்கள் கூறியிருக்கின்றனர்.

### தூங்கும் மடமா?

சென்னையிலிருந்து வெளிவரும் தமிழ் வார இதழ் ஒன்று 'இவர்தான் எங்கள் எம். எல். ஏ.' என்ற கட்டுரைப் போட்டியை நடாத்தியது. இப்போட்டியிற் பரிசு பெற்ற கட்டுரையொன்றில் சென்னை சட்ட சபை தூங்குமடம் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. இதனை ஆட்சேபித்துச் சபையில் ஒரு கேள்வி எழுந்தது. அவ்வாறு எழுதியதற்காகக் குறித்த பத்திரிகை ஆசிரியர் தம்மிடம் வருத்தம் தெரிவித்திருப்பதாகவும் குறித்த கட்டுரை எழுதியவரிடம் விளக்கம்கோரியிருப்பதாகவும் சபாநாயகர் தெரிவித்தார். இது சம்பந்தமாக மேற்கொண்டு நடவடிக்கைகையாள வேண்டியதில்லையெனவும் அவர் தெரிவித்தார்.

### தானறியாச் சிங்களம்

நேருவுக்கு அளிக்கப்பட்ட வரவேற்புரையொன்றில் உபயோகிக்கப்பட்ட 'லாபன்விட்' என்ற இந்தி வார்த்தைக்கு அவருக்கு அர்த்தம் தெரியாமல் போய்விட்டது. 'பலன் தரும் வகையில்' என்பது அவ்வார்த்தையின் பொருளாம்.

### ஈ. வே. ரா.

லக்னேப் பல்கலைக் கழகத்தில் இனப்பிரிவை அடிப்படையாக வைத்து பெரியார் ஈ. வே. ரா. நிகழ்த்திய ஒருசொற்பொழிவின்போது மாணவர்கள் 'கலாட்டா' செய்தனர். அவர்கள் கேட்ட வினக்களுக்கு விடையளிக்கத் தவறியதனல் பெரியார் வெளியேறும்போது ஆர்ப்பாட்டமும் நடந்தது.

### விளம்பரங்கள் கவனம்!

ஆபாச விளம்பரங்கள் செய்பவர்கள்மீது நடவடிக்கை எடுக்கக்கூடியதாக புதியதோர் சட்டமொன்று சென்னை சட்ட சபையில் நிறைவேறியுள்ளது.

### மத்தாய் விவகாரம்

முதலமைச்சர்நேருஜியின் அந்தரங்க உதவியாளராகப் பணியாற்றிய எம்.ஓ. மத்தாய் அவர்கள் பதவி துறந்தமை பற்றி, நிருபர்கள் மாநாட்டில் ஏராளமான கேள்விகள் கேட்கப்பட்டன.

திரு. மத்தாயின் பதவி விலகற் கடிதம் பற்றி நேருஜி தமது கருத்தைக் கூறவேண்டுமென நிருபர்கள் வேண்டினர். அதற்கு நேருஜி கூறியதாவது:

அக் கடிதம் விவேகமற்றது மாத்திரமன்றி தவருன சொற்களையும் கொண்டுள்ளன. மற்றவை எப்படியிருப்பினும் என்னைப் பொறுத்தவரையில் மத்தாய் விசுவாசமாகவும் நேர்மையாகவும் நடந்துகொண்டார். அவருடைய பொறுப்பாட்சி நிலையம் (ட்ரஸ்ட்) பற்றி நான் என்றுமே அதிகம் அக்கறை காட்டியதில்லை.

### புதிய நிர்வாக சபை

இந்திய தேசியக்காங்கிரசின் புதிய தலைவராகப் பதவியேற்றுள்ள திருமதி இந்திராகாந்தி இன்னும் சிலதினங்களில் புதிய காங்கிரஸ் நிர்வாக சபையை அமைக்க உத்தேசித்துள்ளார். பொதுக் காரியதரிசியாக ஒரு பெண்ணை அவர் நியமிக்கக் கூடும். பெரிய இராச்சியங்களுக்குப்பிரதிநிதித்துவம் அளிக்கும் விதத்தில் காரிய நிர்வாக சபை அமைக்கப்படும்.

உலக நிலை

# சைப்பிரஸ் மாநாடு

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

கிரேக்க முதலமைச்சர் கொன்ஸ் டன்டைன் கரமான்லிஸ், துருக்கி முதலமைச்சர் அட்நான் மென்டெரெஸ் ஆகிய இருவரும் சைப்பிறஸ் விஷயமாகச் சூரிச்சில் ஆறு நாட்களாக நடத்திய பேச்சு வார்த்தைகள் சுமுகமாக முடிவுற்றன. இதைத் தொடர்ந்து பிரிட்டிஷாருடன் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகிவிட்டன. சைப்பிறஸ் கட்சிகள் யாவும் பேச்சு வார்த்தையிற் கலந்து கொள்ளும். கிரேக்க சைப்பிரஸ் தலைவர் மக்காரியோசும் இதில் முக்கிய இடம் பெற்றுள்ளார். இதற்கு விமான மூலம் சென்ற துருக்கி முதலமைச்சர் விமான விபத்துக்கு ஆளானர். கூடச் சென்றவர்களில் 12 பேர் காலமாயினர். அவருடைய உடல் நலம் திருந்தும்வரை பேச்சு வார்த்தைகள் பின்போடப்பட்டுள்ளன. சுதந்திர குடியரசாக மலர இருக்கும் சைப்பிறஸ் பேச்சு வார்த்தைகளில் மக்காரியோஸ் சில முட்டுக்கட்டைகளை உண்டு பண்ணக்கூடும் என்று நம்பப்படுகிறது.

### புலமைக் காய்ச்சல்

போரிஸ் பாஸ்டர்நாக் என்னும் ரூஷிய எழுத்தாளர் டக்டர் ஷிவாஹோ என்னும் நூலை எழுதியதற்காக நோபல் பரிசு வழங்கப்பட்டார். அந்த நூல் ரூஷியாவில் வெளியிடப்பட்டதில்லை. அதை வாசிக்காத ரூஷிய எழுத்தாளர்கள் அவரை எழுத்தாளர் சங்கத்திலிருந்து நீக்கி, பிரஜா உரிமையைப் பறிக்கும்படி அரசாங்கத்தை வற்புறுத்தினர்களாம். பாஸ்டர்நாக் நோபல் பரிசை நிராகரித்துவிட்டு ரூஷிய முதலமைச்சருக்குத் தன் நாட்டுப் பற்று என்றுமே குறையாது என்று உறுதி கூறியிருக்கிருர். புலமைக் காய்ச்சலினல் சர்வதேச நட்சத்திரப்பதவி கிட்டியதை மறுத்தும், எழுத்தாளர் சங்கம் மீண்டும் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. வருகிற கடிதங்களுக்கும் விருந்தாளிகளுக்கும் பதில் எழுதுவதே பெரிய வேலையாயிருக்கிறது என்று சலித்துக் கொண்ட பாஸ்டர் நாக்குக்கு இப்போது புதிய சங்கடம் ஒன்று முளைத்தது. வெளியூர் பத்திரிகை நிருபர் ஒருவர் இவர் தன் நண்பர் ஒருவருக்கு நோபல் பரிசு பற்றி எழுதிய கவிதையை அம்பலப்படுத்திவிட்டார். "இனிமேல் பத்திரிகைப் பேட்டியே வேண்டாம், எழுத்தாளர் சங்கத்தில் மீண்டும் இடம்பெற என் தேசபக்தி விளக்கும் வண்ணம் ஒரு புதிய நூலை எழுதப் போகிறேன்" என்று அவர் சொல்லிக் கொண்டிருக்கிருர்.

தூய வெண்மைக்கு
வீனஸ் சோப்
— சிறந்தது —
வீனஸ் சோப் தொழிற்சாலை
269, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

# சிறுவர் பகுதி

செல்வக் குழந்தைகளே!

அனைவருக்கும் வணக்கம். உங்களுடைய கடிதங்களை மகிழ்ச்சியுடன் வாசித்து வருகின்றேன். நீங்கள் அனுப்பியுள்ள கட்டுரைகளையும் கதைகளையும் பார்வையிட்டும் வருகின்றேன். சிலருடைய கதைகள் மிக இனிமையாக இருக்கின்றன. எனது மருமக்களின் திறமையை நினைத்துப் பெருமை அடைகின்றேன்.

உங்களுக்கு ஒரு முக்கியமான விஷயம்பற்றி இங்கு கூறவிரும்புகின்றேன். கட்டுரைகளையும் கதைகளையும் கடதாசியின் ஒருபக்கத்தில் மையினால் எழுத வேண்டும். இரு பக்கங்களிலும் எழுதி அனுப்ப வேண்டாமென்று எனது அருமையான மருமக்களை அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

சின்ன மாமாவை வாழ்த்தி அநேகர் கடிதங்கள் அனுப்பியிருக்கின்றனர். அவர்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

சிறுவர் பகுதியில் சின்னஞ்சிறு கதைகள் வெளிவர வேண்டுமென மருமகள் ஒருவர் எழுதியிருக்கின்றார். அவருடைய விருப்பத்தை நிறைவேற்ற முயல்வேன். வேறு சிலர் படங்கள் சேர்க்க வேண்டுமென எழுதியிருக்கின்றார்கள். இவர்களின் ஆசையையும் மிகவிரைவில் நிறைவேற்றிவைப்பேன்.

சின்ன மாமா



இதோ! ஒரு யானை வேட்டி சால்வை அணிந்து கொண்டு குசாலாக இருக்கின்றது. அதற்குத் தகுந்த வர்ணங்களைத் தீட்டி அழகு பார்ப்பது உங்கள் வேலை.

## புதிய மருமக்கள்

### பெயர்களும் பதிவு இலக்கமும்

7. அருந்தவதேவி, 66, பண்ணை ரோட், யாழ்ப்பாணம்.
8. ந. திருநாவுக்கரசு, 165, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
9. பொ. வைத்தீஸ்வரன், "ஜோதி" அளவெட்டி தெற்கு.
10. ச. மா. பி. தமிழ்நெஞ்சன், 59/1, நகரசபைக் கட்டடம், கொழும்பு 13.
11. த. நவரத்தினம், மணற்காடு, காரைநகர்.
12. அ. இராஜேஸ்வரன், 29, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.
13. சோ. முருகவேள், வேலணை வடக்கு, வேலணை.
14. எஸ். மகேந்திரன், 57, சிவன் கோவில் மேலை வீதி, யாழ்ப்பாணம்.
15. விஷயலட்சுமி கதிரவேலு, உரும்பராய் கிழக்கு, உரும்பராய்.
16. சா. பஞ்சாட்சர ஐயர், 26, பிறவுண் ரோட், யாழ்ப்பாணம்.
17. செ. கருணவதி, புளியடி வளவு (தெற்கு), சுன்னகம்.
18. றுத். இராசதேவி இராசையா, நவாலி தெற்கு, மானிப்பாய்.
19. ச. இராமச்சந்திரன், மானிப்பாய் தெற்கு, மானிப்பாய்.
20. தி. கனகசபாபதி, 38, அம்பாள்வீதி, நாயன்மார்காடு, யாழ்ப்பாணம்.
21. வ. பரமானந்தராசா, இல. 2, உடையார் ரோட், கல்முனை.
22. கா. நடனசபாபதி, சிவானந்த வித்தியாலயம், கல்லடி, உப்போடை, மட்டக்களப்பு.
23. பா. திரியம்பக சர்மா, உடுவில் ரோட், மானிப்பாய்.
24. ஏச். டி. முபரக், 13 A பாபர்ஸ் லேன், சோனகதெரு யாழ்ப்பாணம்,
25. எஸ். வைத்தியநாதன், 56, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

# சேவலும் நரியும்

சு. மகேந்திரன் (பதிவு எண். 14)

ஒரு நாவல் மரத்தில் சேவல் ஒன்று இருந்தது. காலை நேரமானபடியால் அச்சேவல் "கொக்கரக்கோ! கொக்கரக்கோ!!" என்று உற்சாகமாகக் கூவிக்கொண்டிருந்தது. அவ்வழியாலே சென்ற நரி அச் சத்தத்தைக்கேட்டு மரத்தடிக்குச் சென்றது. அதற்கு நல்ல பசி. ஆனல் மரத்தில் இருந்த சேவலை அந்த நரியாற் பிடிக்க முடியவில்லை. ஆனபடியால் அது ஒரு தந்திரம் செய்தது. அது சேவலைப்பார்த்து, "நண்பனே, நீ ஒரு நல்ல செய்தி கேட்டாயா?" என்றது.

அதற்குச் சேவல், "அப்படியா? அந்தச்செய்தி என்ன?" என்று ஆவலுடன் கேட்டது.

"பறவைகளும், மிருகங்களும் இனிமேல்கோபதாபமில்லாமல் ஒற்றுமையாக வாழவேண்டுமாம். ஆனபடியால் நீ பயமின்றிக் கீழே இறங்கிவா" என்றது.

சேவலுக்கு நரியின் தந்திரம் நன்ருக விளங்கியது. ஆனல் அதனை அது வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

சேவல் தூரத்தில் எதையோ பார்த்துக்கொண்டிருந்தது.

"நண்பனே! தூரத்தில் எதைப் பார்க்கின்ருய்? அங்கு என்ன தெரிகிறது?" என்று நரி ஆவலுடன் கேட்டது.

"ஐயோ! அங்கு சில வேட்டை நாய்கள் நிற்கின்றன. அவை இந்தப்பக்கம் வருகின்றனவா என்று பார்க்கிறேன்" என்றது சேவல்.

"அடடா! அப்படியா சங்கதி நான் இதோ போய்வருகின்றேன்" என்றது நரி.

"நண்பனே! நீ ஏன் போக வேண்டும்?" என்று கேட்டது சேவல்.

"சமாதானம் ஏற்பட்டதைப் பற்றிச் சொன்னேன் அல்லவா? அந்தச் சமதானம் எங்களுக்கும் பறவைகளுக்கும் இடையே தான் ஏற்பட்டிருக்கின்றது. மிருகங்களாகிய எங்களுக்கிடையே எவ்வித சமாதான ஒப்பந்தமும் இன்னும் ஏற்படவில்லை" என்று சொல்லி அவ்விடத்தைவிட்டு ஓட்டம் பிடித்தது நரி.

சேவல் சிரித்துக்கொண்டு மரத்தைவிட்டுக் கீழே குதித்தது. மறுகணம் சிறகு தட்டிக் கூவியது.

# சாமியாரின் உபாயம்

மா. குணநாதன் (பதிவு எண் 3)

கண்ணன் பொன்னன் என்னும் இரு சகோதரர்கள் ஒரு சிறிய கிராமத்தில் வசித்துவந்தனர். பொன்னன் சிறுவனுக இருக்கும்போதே அவர்களின் தாயும் தந்தையும் இறந்துவிட்டனர்.

அவர்களுடைய சொத்துக்கள் அனைத்தும் மூத்தவனுகிய கண்ணனின் மேற்பார்வையில் இருந்துவந்தன. பொன்னன் வளர்ந்து பெரியவனுனன். அவனது தமையனுன கண்ணனே பேராசை மிகுந்தவன். தனது தம்பி சிறியவனுக இருக்கும்போதே அவனது சொத்துக்களிற் பெரும்பாலானவற்றைத் தனதாக்கிக்கொண்டான். எனவே, பொன்னனுக்குச் சிறு துண்டுக்காணியை மட்டும் கொடுத்தான்.

அது விதைப்புக்காலம். ஒவ்வொருவரும் வயல்களைக் கொத்தி உழுது விதைக்கத் தொடங்கினர். பொன்னனிடம் விதைநெல் கிடையாது. தமையனிடம் கேட்டாலும் கிடைக்காது. ஆனபடியால் அவன் தமையன் வெளியே கொட்டிய சப்பட்டையை எடுத்து வயலில் விதைத்தான்.

பொன்னனின் நல்லகாலமோ என்னவோ, அவனுடையவயல்கள் நெற்பயிர்களுடன் காட்சி தந்தன. இதனைப் பார்த்தகண்ணன் மனம் பொருதவனுய் வழக்குத் தொடர்ந்தான்.

பொன்னனிடம் வழக்காடப் பணமில்லை. அவன் வேதனையோடு ஒரு காட்டுவழியே சென்றுகொண்டிருந்தான். அப்போது அவ்வழியே வந்த தாடி வளர்த்த சாமியார் ஒருவர் பொன்னனைப் பார்த்து "நீர் ஏன் துக்கமாக இருக்கிறீர்?" என விசாரித்தார். பொன்னன் நடந்ததைக் கூறினன். "சரி, நீர் போம். வழக்கு விசாரணையின் போது பார்ப்போம்" என்ருர் அந்தச் சாமியார்.

வழக்குத் தொடங்கியது. நீதிபதி பொன்னனை நோக்கி, "நீர் உமது அண்ணனின் சப்பட்டை நெல்லைக் களவாடி விதைத்தீரா" என்ருர்.

அப்போது நீதிபதியின் மேடைக்குக் கீழே யாரோ ஏப்பம் விடும் சப்தம் கேட்டது. நீதிபதி, "யாரங்கே ஏப்பம்விடுவது?" என்று கேட்டார். அதனுள்ளிருந்து வந்த பெரியார் "நீதிபதியவர்களே! எருத்து மாட்டுத் தயிரைக் குடித்தேன். அது ஏப்பம் ஏப்பமாக வருகிறது" என்ருர்.

"எருத்துமாட்டுத் தயிர் என ஒன்று உண்டா?" என்ருர் நீதிபதி சிரித்துக் கொண்டே. அப்போது சாமியார் உரத்துச் சிரித்துக் கொண்டே, "நீதிபதியவர்களே சப்பட்டை எப்படி வயலில் விளையும்" என்று திருப்பிக் கேட்டார்.

நீதிபதி அந்த வழக்கை ஒப்புக்கொண்டதன் அறியாமையை நினைத்து வெட்கமும் துக்கமும் அடைந்தார்.

பொன்னன் பெரியாரின் சாமர்த்தியமான செயலையும், சமயோசித புத்தியையும் கண்டு மகிழ்ந்தான்.

## மௌனமாகப் படியுங்கள்

வீட்டிற் பாடம் படிக்கும்போது மௌனமாகப் படித்தால்தான் பாடம் மனதில் நன்ருகப் பதியும். சத்தம்போட்டுப் படித்தாற் பிறருக்குத் தொந்தரவே தவிரப் படிப்பவர்களுக்கு ஒருவித பலனும் ஏற்படாது.

## சின்னப் பாப்பா

குழலைப் போல மழலை பேசிக்
குழையும் சின்னப் பாப்பா!
இளமை கொஞ்சும் எழிலில் உள்ளம்
இழையச் செய்யும் பாப்பா!

சின்னக் கன்னம் குழிய இன்பம்
சேரச் சிரிக்கும் பாப்பா!
இன்னல் ஓட்டி அன்பு ஊட்டி
இனிமை சேர்க்கும் பாப்பா!

தேனைப் பாலைப் பாகைக் கனியைத்
திகட்டச் செய்து வாழ்வின்!
ஏனைத் துன்பம் போக்கி இன்பம்
இணையச் செய்யும் பாப்பா!

பொன்னும் மணியும் *பூவும் மற்றும்
பொலியும் செல்வம் யாவும்!
உன்னைப் பார்க்கின் உயர்வே யல்ல
உணர்ந்து கொள்நி பாப்பா!

உழைத்துக் களைத்து இளைத்துத் தந்தை
ஓய்ந்து வீடு வந்தால்!
அழைத்து அன்பை நுழைத்துத் துன்பம்
அகற்றிக் காக்கும் பாப்பா!

உன்னைப் பார்க்கின் உயர்ந்த உள்ளம்
உலகில் இல்லை பாப்பா!
சின்னச் சிரிப்புக் காட்டி உண்மை
தெரியச் செய்நி பாப்பா!

*பூ—பூமி.

# நமது நூல் நிலையம்

**வானவெளியிலே...!.** ஆசிரியர்: தேவன். யாழ்ப்பாணம்; **விற்பனை உரிமை:** எஸ். எஸ். சண்முகநாதன் அன்ட் சன்ஸ், யாழ்ப்பாணம். இலங்கை; **விலை** ரூ. 1-00. சென்ற ஆண்டு சர்வதேசப் புவிப் பௌதிக ஆண்டாக மிளிர்ந்தது. அவ்வாண்டிலே ருஷியா வானவெளிக்கனுப்பிய செய்மதி ஒரு புதிய சகாப்தத்தைத் தொடக்கி வைத்தது. அதைத் தொடர்ந்து வானவெளிப் பயணம் பற்றிய தகவல்களையும், விபரங்களையும் அறியும் ஆவல் மக்களிடையே தோன்றிற்று. இந்த ஆவலைப் பூர்த்தி செய்யும் வகையிலே போதுமான அளவு தமிழ்நூல்கள் இல்லாதது ஒரு பெரும் குறையாக இருந்தது.

தேவன்—யாழ்ப்பாணம் எழுதிய 'வானவெளியிலே' என்னும் இந்தப் புத்தகத்திலே அவர் படித்த ஆங்கில நூல்களில் உள்ளவற்றின் சாரத்தைப் பழகு தமிழிலே அமைத்துத் தந்திருக்கிறார்.

விஞ்ஞான சம்பந்தமான நூல்களிலே கையாளப்படும் தமிழ் விடயத்தை மயக்கமும் குழப்பமும் இல்லாமல் மிக எளிமையாக ஆசிரியர் அமைத்துத் தந்துள்ளார்.

தமிழின் பலதுறை வளர்ச்சிக்கு 'வானவெளியிலே' போன்ற நூல்கள் துணைசெய்ய வல்லன.

**விகாரி வருஷ திருக்கணித பஞ்சாங்கம்**-1959-60. யாழ்ப்பாணம் மட்டுவில், சி. சுப்பிரமணிய ஐயர் அவர்களாற் கணிக்கப்பெற்றது; "தில்லை வாசம்" மட்டுவில், சாவகச்சேரி; **தனிப் பிரதி:** விலை ரூ. 1-25. திருக்கணித பஞ்சாங்கம் வழக்கம் போல் இவ்வாண்டும் பஞ்சாங்கத்துக்கு வேண்டிய சகல அம்சங்களுடன் வெளியாகியுள்ளது. ஒவ்வொரு மாதத்திலுங் குறிக்கப்பட்டிருக்கும் சமாக மாதிகளைக்கொண்டு கிரகங்களின் சரியான நிலைகளை அறிந்து கொள்ளலாம். இந்திய பஞ்சாங்கச் சீர்திருத்த சபையினரால் இது சுத்தமுடைய கணிதமென அங்கீகரிக்கப்பட்டுள்ளது. புகழுடம்பெய்திய வித்துவ சிரோமணி சி. கணேசையர் அவர்களின் சாதனம் இதிற் சேர்க்கப்பட்டுள்ளது.

மதிப்புரை விரும்புவோர் ஒவ்வொரு நூலிலும் இரு பிரதிகள் அனுப்ப வேண்டும்.

**மாணவர் சரித்திரக் காட்சி:** இலங்கையும் உலகமும்—எட்டாம் வகுப்புக்குரியது; **ஆசிரியர்:** வித்துவான் அ. சந்தியாப்பிள்ளை; **வெளியீடு:** ஸ்ரீ லங்கா அச்சகம், யாழ்ப்பாணம்; **விலை** ரூ. 3-00.

கல்விப் பகுதியினரின் பாடதிட்டத்துக்கு ஏற்ப இந் நூல் எழுதப்பட்டுள்ளது. முதல் மனிதன் உலகில் தோன்றிய காலத்திலிருந்து கி. பி. 1500 வரை மாணவர்கள் அறிய வேண்டிய விஷயங்கள் இதன் கண் உள. சிறப்பாக அரசர்கள், சமய சீலர்கள், இலக்கியக் கருத்துக்கள் என்பன மாணவர் நன்கு விளங்கக் கூடிய வகையில் எழுதப்பட்டுள்ளன. "பிரதானமாக முன்னணியில் நிற்கும் மனிதர்களையும், நிகழ்ச்சிகளையும் ஒரு காட்சிபோன்று சரித்திரத்தை எடுத்துக்கூறுவதற்கு இந்நூல் இயல்கிறது" காலவொழுங்குப்படி சரித்திரக்காட்சியாக இந்நூல் முறையே காணக்கிடைப்பது மாணவர்க்குக் கவர்ச்சியையும் அறிவையும் இலகுவில் அளிப்பதாகும்" படங்களும் இதிற் சேர்க்கப்பட்டுள்ளன. எட்டாம் வகுப்புக்குரிய இந்நூல் வடஇலங்கை ஆசிரியர் சங்கத்தின் பாட திட்டத்தையும் தழுவி எழுதப்பட்டிருக்கின்றது.

Dr. K. S. Krishnan's 60th Birthday Souvenir 1958; Issued by Dr. K. S. Krishnan's 60th Birthday Celebration's Committee, New Delhi.

விஞ்ஞானத்துறையில் இன்று உலகம் புகழ்பெற்றவர்களுள் டக்டர் கே. எஸ். கிருஷ்ணன் அவர்களுங்குறிப்பிடற்குரியவர். உலகம்போற்றும் இத்தமிழனை இந்திய அரசாங்கம் உயர்ந்த விஞ்ஞான நிலையத்தே வைத்துப் போற்றிவருகின்றது. இத்தகைய ஒரு விஞ்ஞானச் செல்வனின் மணிவிழாவின்போது வெளியிடப்பெற்ற இம் மலரில் வாழ்த்துரைகளும், டக்டர் கிருஷ்ணன் அவர்களின் கட்டுரைகள் சிலவும் தமிழிலும் ஆங்கிலத்திலும் உள. இந்தியக் குடியரசுத் தலைவர் இராஜேந்திரபிரசாத், சென்னை முதலமைச்சர் கே. காமராஜ், தருமபுர ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், இலங்கை முன்னாள் அமைச்சர் சு. நடேசபிள்ளை உட்பட அறிஞர்கள் பலர் வாழ்த்துரைகள் நல்கியுள்ளனர். இம் மலரை அழகுற வெளியிட்டுள்ள டக்டர் கிருஷ்ணன் மணிவிழா செயற்குழுவினரைப் பாராட்டுகின்றோம்.

## "வாசலிடைக் கொன்றை மரம்"

[ 5ஆம் பக்கத் தொடர்ச்சி ]

தோன்றுவார். அருமை அன்னையார் அவர் வாயிலுங் கையிலும் வழங்கி ஆளை அனுப்பிவிட்டுத் தாமொன்றும் அறியாதவர்போல இருந்துவிடுவார். சின்னத்தம்பிப் புலவர் தமது விளையாட்டுக் கூட்டத்துட் சென்று மறைந்து விடுவார். தந்தையார் அறியாமல் தலைமறைவாக வாழ்ந்துவருகின்றார் சின்னத்தம்பிப் புலவர்.

சின்னத்தம்பிப் புலவரின் இளமை விளையாட்டு இவ்வாறு நடைபெற்று வருகின்ற காலத்திலே ஒருநாள் வடதேச வித்துவான் ஒருவர், வில்லவராய முதலியாரைக் காணும் பொருட்டு, முதலியாரின் வீடு தேடி வந்தார். வந்தவர் வழியிலே சிறுவர்கள் கூடி விளையாடுகின்ற ஒரு கூட்டத்தைக் கண்டு,

"வில்லவராய முதலியாருடைய வீடு எவ்விடத்தது?" என்று அக்கூட்டத்தினரை வினவினார்.

கற்றோராய் முதியருமாய் அக்கூட்டத்தினர் இருந்தால் "முதலியாரில்லம் யாண்டையது?" என்று அவர்களை வினவியிருப்பார்போலும் வந்த அந்த வித்துவான்.

விளையாட்டை நிறுத்தி வித்துவானைச் சூழநின்று அவருடன் இயற்றமிழிற் சற்றே சல்லாபஞ் செய்ய முயன்றார்கள் அந்தச் சின்னஞ்சிறுவர்கள்.

அவர்களுள் ஒரு சிறுவர் மற்றவர்களைக் கையமைத்து விலக்கிக்கொண்டு, வித்துவான் எதிரில் வந்து, அவரை விழித்து,

'பொன்பூச் சொரியும்'

என்ற அருமந்த வெண்பாவைத் தொடங்கி, 'வில்லவராயன் கனக, வாசலிடைக் கொன்றை மரம்' என்று முடித்து, அந்த மரத்தையுஞ் சுட்டிக் காட்டினார் வித்துவான்.

'மைந்த நின் செந்தமிழ் வாழியர்' என்று வாழ்த்திவிட்டு, அந்தக் கொன்றை மரத்தை நோக்கிச் சென்றார்.

தொடரும்

பலவித சிற்றுண்டி பலகார வகைகளுக்கும்
சுத்த சைவ போசனத்திற்தும்
சிறந்த இடம்

விசேஷ பரிசு
(Special Grade)
1952—1957

மலாயா கபே
உரிமையாளர்: M. K. கதிரவேலு
36, 38, பெரியகடை யாழ்ப்பாணம்

## ஆராய்ச்சித் தகுதியும் திறனும்

[ 5ஆம் பக்கத் தொடர்ச்சி ]

கோணமை, மதிப்பை அளந்து கூறும் நோக்கம் இந்நான்கும் அமையப் பெற்றவரே ஆராய்ச்சியாளர்.

ஆராய்ச்சியாளர்க்கு உரிய தகுதியை மூன்றாகக் கூறுகிறார் ரிச்சர்ட்ஸ்:- (1) தாம் ஆராயும் இலக்கியத்திற்கு ஏற்ற மனநிலை பெற்று, அதன் அனுபவத்தைப் பெறுவதில் தேர்ச்சி மிக்கவராக இருத்தல் வேண்டும்; விருப்பு வெறுப்புக்களின் எல்லைகளில் நின்று மனம் பானே போக்கிற் செல்லும் குறை இருத்தல் கூடாது; (2) தாம் பெறும் அனுபவங்களின் ஏற்றத் தாழ்வை அறிந்து வேறுபடுத்த வல்லவராக இருத்தல் வேண்டும். (3) அவற்றின் மதிப்பை அளந்து கூற வல்லவராக இருத்தல் வேண்டும்.

இத்தகுதிகளில் முதலாவதாகிய, இலக்கிய அனுபவங்களைப் பெறுதல் என்பது, இலக்கியத்தை நுகர வல்லவர்க்கே அமையும். ஆகவே, ஒரு பாட்டை ஆராயப் புகுவோர், அதன் ஆசிரியர் பெற்ற உணர்ச்சியனுபவத்தைத் தாமும் பெற்று மகிழப் பயிற்சி பெறவேண்டும். நுகரும் திறன் பெறாத எவரும் இலக்கிய ஆராய்ச்சியில் தலையிடுவதில் பயன் இல்லை என்பது தெளிவு.

இரண்டாவதாகிய ஏற்றத் தாழ்வுகளை அறிந்து வேறுபடுத்தல் என்பது, நடுநிலையான விருப்பு வெறுப்பற்ற (அல்லது, விருப்பு வெறுப்புக் குறைந்த) மனம் உடையவர்க்கே அமையும். அவர் தம் கொள்கை சமயம் முதலியவற்றையும் நூலாசிரியரின் கொள்கை சமயம் முதலியவற்றையும் மறந்து (பொருட்படுத்தாமல் விட்டு) நூலின் சிறப்பான பகுதிகளையும் சிறப்பற்ற பகுதிகளையும் மட்டும் ஆராய்தல் வேண்டும். தாம் நம்பாத ஒன்றை நூலாசிரியர் நம்பலாம்; அந்த ஒரு காரணம் பற்றி நூல் முழுமையும் சிறப்பற்றது எனக் கொள்ளலாகாது. ஆசிரியர் தம் சமயத்தைச் சார்ந்தவராக, அல்லது, தம் ஊரைச் சார்ந்தவராக இருக்கலாம். அது பற்றி அந்நூலில் குறை காணமல் கண்ணை மூடிக்கொள்ளலாகாது. ஒரு நூலை ஆராயும் போது, அந்நூலாசிரியரிடம் நாம் கொண்டுள்ள விருப்பு வெறுபபுக்களை மறத்தல் எளிதன்று; ஒதுக்கி வைத்தல் இயலும். அவ்வாறு, நம் விருப்பு வெறுப்புக்களை ஒதுக்கி வைத்து ஆராய்தல் வேண்டும். அவ்வாறு அல்லாமல், ஆசிரியரிடம் கொண்டுள்ள விருப்பு வெறுப்புக்களையோ, அவர் உணர்த்தும் சமயம் முதலியன பற்றிக் கொண்டுள்ள விருப்பு வெறுப்புக்களையோ முன் செல்லவிட்டு ஆராய்ந்தால், உண்மை காணல் இயலாது. ஆகவே என்ன சொல்கிறார், யார் சொல்கிறார் என்பன பற்றி விருப்பு வெறுப்புக் கொள்ளாமல், உண்மை நாடும் நாட்டம் கொள்ளல் வேண்டும்.

எப்பொருள் யார்யார்வாய்க்
கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது
அறிவு. *

### சீர்தூக்கிக் கூறுதல்

மூன்றாவதாக, மதிப்பை அளந்து கூறுதல் என்பது, இலக்கியத்தின் பொருள் பற்றியும் வடிவு பற்றியும் தெளிவான அறிவு பெற்றவர்க்கே அமையும். இலக்கியத்தின் கற்பனை எத்தகையது, உணர்ச்சி எத்தகையது, அமைந்த சொற்களும் ஒலிநயமும் எத்தகையன என்பவற்றை ஆய்ந்து மதிப்பிடல் வேண்டும். ஆசிரியர் உணர்த்த விரும்பியதைத் திறம்பட உணர்த்தினரா, அழகுபட அமைத்தாரா என்று ஆய்ந்து காண வேண்டுமே அல்லாமல், தாம் விரும்பியதை உணர்த்தினரா, தாம் விரும்பாததை உணர்த்தினரா என்று காணல் கூடாது. தாம் விரும்பாத ஒன்றையே ஆசிரியர் உணர்த்திய போதிலும், அவர் உணர்த்திய முறையிலும் அமைத்த வடிவிலும் கலைப்பண்பும் திறனும் உள்ளனவா என்பதே ஆய்ந்து காணத் தக்கது. கற்பனை சிறப்புற அமைந்திருக்கலாம், வடிவம் நன்றாக அமைந்திருக்கலாம்; வடிவம் திறம்பட அமைந்திருந்தும், உணர்ச்சியைப் புலப்படுத்தும் முறையில் குறை இருக்கலாம்; உயர்ந்த சொற்கள் அமைந்திருக்கலாம், ஒலிநயம் குறையுடையதாக இருக்கலாம். இவை போன்றவற்றை ஆராய்ந்து குணம் இன்னது, குற்றம் இன்னது என்று தீர்ப்புக் கூறும் திறன் வேண்டும்.

குணம் நாடி குற்றமும் நாடி
அவற்றுள்
மிகைநாடி மிக்க கொள . *

கண்ட குணங்களைப் பாராட்டுவதில் மகிழ்ந்து, குற்றங்களை மறத்தலோ, சில குற்றங்களைக் கண்டதும் வெறுப்புக்கொண்டு குணங்களைப் புறக்கணித்துச் செல்லுதலோ, இலக்கியத்தை மதிப்பிடுவோர்க்கு ஆகா. பொறுமையுடன் குணம் குற்றங்களை ஆய்ந்து தன் வெறுப்பு விருப்புக்களைப் பொருட்படுத்தாமல் நடுநிலை நின்று சீர்தூக்கிக் கூறுவதே இலக்கிய ஆராய்ச்சியாகும்.

* திருக்குறள் 423.

* திருக்குறள் 504.

யாழ்ப்பாணம்
ஜக்கிய இலாப நிதி
— 1918-ஆம் ஆண்டு தாபிதமானது —
வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 616313,00
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை
மாதமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்பட வேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100-00 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு
எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்
க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்
கொழும்பிலுள்ள 'நாஷனல்' வங்கியிலும் 'இம்பீரியல்' வங்கியிலும், இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும்வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்
நகைகள் ஈடு வைத்துத்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.
எஸ். கனகசபை
Std. 14. சிறுப்பர்

# மனிதன்

[4-ஆம் பக்கத் தொடர்ச்சி]

"நான் ஒரேயொரு மனிதன். ஒரே நேரத்தில் எல்லா வீட்டுக்கும் எப்படி வரமுடியும்? நீங்களே சொல்லுங்கள்."

பிள்ளைகள் மௌனமாகி நின்ருர்கள். கிழவன் அவ்வளவில் தெருவை நோக்கி நடந்துகொண்டே, "குழந்தைகளே, சந்தோஷம். நான் போகவேண்டும். நீங்களும் வீடுபோய்ச் சேருங்கள். நேரமாகிறதல்லவா?" என்று சொன்னன்.

'போகவிடக் கூடாது' என்ற எண்ணம் எல்லாரிடமுமிருந்ததேனும், 'வேண்டாம், நில்லுங்கள்' என்று யாருமே தடுத்துச் சொல்லவில்லை. எல்லோரும் எழுந்து அந்தக் கிழவனுக்குப் பின்னல் நடந்தார்கள். தெருவை அடைந்ததும் கிழவன் அந்தப் புளிய மரத்தையும், தன்னைவந்து உற்றுப் பார்த்துவிட்டுப்போன அந்தப் பெண்கள் இருந்த வீட்டையும் மாறிமாறிப் பார்த்துவிட்டுப் பிள்ளைகளிடம் விடைபெற்றுக்கொண்டு நடந்தான்.

குழந்தைகள் கிழவனுடைய உருவம் மறையும்வரையும் அதில் நின்றபடியே பார்த்துவிட்டு எதையோ இழந்தவர்கள் போல வேதனைதோய்ந்த முகங்களோடு திரும்பினுர்கள்.

ஃ ஃ ஃ ஃ

கிழவன் முதலில் வேகமாக நடந்தான். இந்தப் பாசம் தன்னை இழுத்துவிடுமோ என்ற பயமே அப்படி நடக்கும்படி அப்போது அவனைத் தூண்டியது. அந்த நேரத்தில், 'ஏன் இங்கே வந்தோம்' என்று அவன் மனமே சலனப்பட ஆரம்பித்து விட்டது.

பிறகு தன்னேடு தானே பேசிக்கொண்டு நடந்தான்:

"பிறந்த இடம். சிறுவயதில் ஓடியாடி விளையாடித் திரிந்த இடம். அவள்—? ஆம், அருமை பாராட்டி வளர்த்த தங்கை—எப்படியோ அவள் செய்த ஒரு தவறுக்காக விரக்திகொண்டு இங்கே இருக்கப் பிடிக்காமல் வெளியேறினேன். அவள் அண்ணு என்று அழுது வேதனைப்படுவாள் என்பதை அன்று என்னுல் உணர முடியவில்லை. அதற்கு முடிந்திருந்தால் என் கதையே வேறு. அந்த வேதனையின் வடு அவள் இதயத்தையே விட்டகன்று எத்தனையோ வருஷங்கள் கழிந்திருக்கும். மறந்துபோன நினைவுகளைத் தூண்டி விடுவதில் எனக்குத்தான் என்ன ஆறுதல் கிடைக்கப்போகிறது? அவளைக் கண்ட பிறகும் மௌனமாக இருந்துவிட்டது மிக நல்லதாய்ப்போயிற்று."

"மற்றது, எனது சோகக் கதைகளையும் அவள் அறிய நேரிடலாம். எனக்கென்றிருந்தவர்கள்—என்னுடையவர்கள் என்ற எல்லாரும் ஒரே நாளிற் போய்விட்டார்கள். யாரோ ஒரு மூலையில் தூண்டிவிட்ட வெறி மக்களை ஆட்டி இவ்வாறு செய்துவிட்டது. படிப்பில்லாதவர்கள் என்ருலும் நன்றி உள்ளவர்கள் அந்தச் சனங்கள். 'நீங்கள் பயப்பட வேண்டாம். நாங்கள் இருக்கிறோம்' என்றெல்லாம் அடிக்கடி சொன்னுர்கள். எனக்காக உயிரைப் பணயமாக வைத்து நெருப்பில் குதித்தானே அந்தத் தொழிலாளி! அவன் உயிர் அதிலேயே போய்விட்டது. மற்றொருவன் படுகாயமடைந்து இரண்டு நாட்களின்பின் மாண்டான். என் மக்கள்—அவர்கள் பிள்ளைகள் எல்லோரையும் அந்தக் கோர சம்பவம் விழுங்கி விட்டது. சொந்தப் பிள்ளைகளை விட என் பிள்ளைகளுக்காக உயிர் விட்ட அந்த அன்னியப் பிள்ளைகள் மேல் அல்லவா?"

கிழவன் அவர்களுக்காகவும் நடந்துகொண்டே கண்ணீர் சிந்தினன்.

"எல்லாம் முடிந்துவிட்டது. யார் இதற்குக் காரணமாக இருந்தார்களோ அவர்கள் அழுகிற ஒரு காலம் வரத்தான் செய்யும். ஆமாம், அதில் நமக்கென்ன ஆறுதல் வரப்போகிறது? உற்று நோக்கினல் அவர்களுக்காகவும் நாம் வருந்தியேயாக வேண்டும்."

கிழவன் நில்லாமலே நடந்துகொண்டிருந்தான். அவனுடைய உள்ளம் விடாமல் பழைய நிகழ்ச்சிகளையே தொட்டுக் காட்டிக் கொண்டிருந்தது.

"ஒரு புறம் இத்தனை கொடுமையும் நடந்தே விட்டது. ஆனல் அதற்காக என்னடியில் வந்து கிடந்து கண்ணீர் விட்ட அதே ஜாதியைச் சேர்ந்தவர்களின் நன்றி மறவாத உள்ளத்தை இன்று நினைத்தாலும் ஆறுதல் உண்டாகிறது. 'தாத்தா, நீங்கள் போகவே வேண்டாம். உங்களை நாங்கள் விடமாட்டோம். நீங்கள் எங்களைச் சேர்ந்த ஒருவரே' என்று அசையவிடாமற் பிடித்து வைத்துக் கொண்டார்களே—ஒருவருக்கும் தெரியாமலே கிளம்பி இங்கே வந்து சேர்ந்தேன். இந்தப் பாசம் இழுத்துவிட்டது. இங்கே வந்த பிறகுதான் இதைவிட அன்னியர்கள்—வேறு சாதிக்காரர்—என்ற அவர்களுக்கும் எனக்கும் உள்ள பந்தம் பெரியது என்ற உண்மை தெளிவாகத் தெரிகிறது.

நெடுநாட் பழகிய அன்பு நிறைந்த அநேக முகங்கள் அவன் மனக் கண்களிலே தோன்றி மறைந்தன.

கிழவன் தொடர்ந்து நடந்துகொண்டேயிருந்தான். அவனது முன்னேர்கள் குலதெய்வமாக வணங்கும் பிள்ளையார் கோவில் வாசலுக்கு வந்து சேர்ந்தான். உடனே அவன் உள்ளத்தில் ஒருவித குமுறலும் விம்மலும் கலந்த உணர்ச்சி உண்டாயிற்று. கைகளை உயரத்தூக்கி, "பகவானே! உன் சித்தம் எது என்று யார் அறிவார்? மறுபடியும் அந்த மக்களின் நடுவிலே போய் என் சக்திக்கேற்றளவு செய்து சாந்தியடைய அருள்வாயாக" என்று வாய்விட்டுக் கேட்டான்.

திடீரென்று அவனுக்குப் பசி எடுத்தது. பக்கத்திலிருந்த கடையினுள்ளே நுழைந்து எதையோ வாங்கி வயிற்றை நிரப்பினுன். சாப்பிட்டானதும் சிறிதுகூடத் தாமதியாமல் வெளியேறி நடக்க ஆரம்பித்தான்.

கிழவனுடைய நடையில் ஒரு அலாதியான—ஆச்சரியப்படத்தக்க—யௌவனத்தின் சாயைபடிந்த கெம்பீரம் இருந்தது.

---

பௌதிகப் பேராசிரியராக விளங்கி உலகப் புகழ்பெற்றுள்ள டக்டர் கே. எஸ். கிருஷ்ணன் அவர்கள் புது டில்லியிலுள்ள தேசிய ஆராய்ச்சிக் கூடத்தின் தலைவராகப் பணியாற்றி வருகின்ருர்கள். இவ்விஞ்ஞான வித்தகரின் மணிவிழா புது டில்லியிலும் தமிழ்நாட்டிலும் சமீபத்திற் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது.

# பாரதத்தின் விஞ்ஞானச் செல்வர் டக்டர் கே. எஸ். கிருஷ்ணன்

திரு. கரியமாணிக்கம் ஸ்ரீநிவாச கிருஷ்ணன் அவர்கள் தென் இந்தியாவிலே ஸ்ரீ வில்லிபுத்தூருக்கு அருகிலுள்ள வத்திராயிப்பு என்னும் கிராமத்தில் 1898ஆம் ஆண்டு டிசம்பர் 3ஆம் தேதி பிறந்தார். அறிஞர் கிருஷ்ணன் சென்னை பல்கலைக் கழகத்திலே பௌதிகத்திலே பட்டம் பெற்றபின், சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில், இரசாயனச் செய்கை முறைப் பயிற்சி ஆசிரியராகப் பணியாற்றினர்.

## ஆராய்ச்சி மாணவர்

இவர் 1923ஆம் ஆண்டில் கல்கத்தாவிலுள்ள இந்திய விஞ்ஞானவளர்ச்சிக்கழகத்தின் ஆய்கூடங்களிலே ஆராய்ச்சி மாணவராகப் பேராசிரியர் சி. வி. இராமனுடன் சேர்ந்துகொண்டார். அங்கு இளம் விஞ்ஞானிகள் 'ஒளிச்சிதறல்' பற்றி ஆராய்ந்துகொண்டிருந்தனர். அடுத்த ஐந்து ஆண்டுகளிலும் 'ஒளிச்சிதறல்' ஆய்வுச் சங்கத்தில் ஆராய்ச்சி மாணவராகத் தொடர்ந்து பணிபுரிந்தார். இச்சங்கம் செய்த பணியே 1928ல் 'இராமன் விளைவை'க் கண்டுபிடிக்கக் காரணமாயிற்று.

1928 டிசம்பர் டெக்காப் பல்கலைக்கழகத்தில் பௌதிக வாசகராகச் சேர்ந்துகொண்டார். 1933 வரை அங்கிருந்தபொழுது உயர் பௌதிகத்தைப் படிப்பித்ததுடன் சொந்தப் புது ஆராய்ச்சியையும் தொடங்கி வைத்தார். அங்கு, 'காந்தமும் படிக அமைப்பும்' எனப்படும் புதிய பௌதிகத் துறையைத் தனித்தன்மை வாய்ந்ததாக அவர் வளர்த்தார். படிகங்களின் காந்தப் பண்பினைப்பற்றிய ஆராய்ச்சி, வழக்கமாகக் கையாளப்படும் ஊடுருவுகதிர் (எட்சுக்கதிர் Xray) முறையை விட விரிவான அளவிலே படிக அமைப்பைப் பற்றிய விவரங்களை வெளிப்படுத்தியது. அவரும் அவரது மாணவர்களும் முறையாகச் செய்த ஆராய்ச்சிகளெல்லாம் இங்கிலாந்திலுள்ள ரேயல் சங்கத்தின் தத்துவ ஞான ஆய்வறிக்கைகளில் வெளியிடுவதற்கென ஏற்றுக்கொள்ளப்பட்டன.

## ஐரோப்பாவுக்கு

கேம்பிரிட்ஜைச் சேர்ந்த றதபோட் பிரபுவும், லண்டனைச் சேர்ந்த சேர் வில்லியம் பிருக்கும் முறையே கவெண்டிஷ் ஆய்கூடத்திலும், ரேயல் நிலையத்திலும் விரிவுரைகள் ஆற்றுவதற்கென அவரை அழைத்தமையால், அவர் பௌதிகவியலுக்குச் செய்த பணியின் தகுதி துலக்கம்பெற்றது. இதுதான் அவர் இந்தியாவை விட்டு முதன் முதலாக வெளிச்சென்ற சந்தர்ப்பம். அவர் ஐரோப்பாவிலுள்ள பல்கலைக் கழகங்கள் பலவற்றுக்கும் சென்ருர். லீஜ் பல்கலைக்கழகம் அவரது விஞ்ஞான சாதனைகளுக்காகப் 'பல்கலைக் கழக மெடல்' வழங்கியது. 1939இல் ஜேர்மனி நாட்டிலுள்ள ஸ்ட்ராஸ்பேகில் நடைபெற்ற காந்தவியல் பற்றிய சம்வாதத்திலே கலந்துகொண்டார். அவரது சொந்தப் புது விஞ்ஞான ஆராய்ச்சிகளைப் பாராட்டி இங்கிலாந்திலுள்ள ரேயல் சங்கம் 1940இல் எப். ஆர். எஸ்.என்ற பட்டத்தை வழங்கிற்று. 1933 முதல், 1938 வரை அவர் ஒரு புதிய மாணவர் குழாத்தைச் சேர்த்து படிகப்படவியல், காந்தப்படிகத் தாக்கம், நிறமாலைக் காட்சியியல், தாழ்ந்த வெப்பநிலைப் பௌதிகம் என்பன பற்றி ஆராய்ச்சிப் பணிகளைத் தொடக்கிவித்தார்.

## புதிய பொறுப்புக்கள்

சுதந்திரம் வந்ததும் தேசிய விஞ்ஞான—கைத்தொழில் ஆராய்ச்சிகளின் முன்னேற்றத்திற்காகப் புதிய பொறுப்புக்களைத் தாங்கும்படி பேராசிரியர் கே. எஸ். கிருஷ்ணனை அழைத்தார்கள். 1947இல் புதிதாக நிறுவப்பட்ட தேசிய பௌதிக ஆய்கூடத்தின் முதலாவது அதிகாரியாக அவர் நியமிக்கப்பட்டார். சொந்தமான ஆராய்ச்சிகளில் முழுக் கவனத்தையும் செலுத்த முடியாது போனலும், சகல பௌதிகத் துறைகளிலும் ஆராய்ச்சி நடத்த வல்லதும், சர்வதேச தரத்துடன் எல்லா நவீன வசதிகளும் வாய்க்கப் பெற்றதுமான ஒரு தேசிய ஆய் கூடத்தை அமைப்பதில் அவர் ஆற்றி வரும் பணி அளப்பரியது.



டக்டர் கே. எஸ். கிருஷ்ணன்

இந்தியாவிலும், பிறநாடுகளிலும் பல விஞ்ஞானத் தாபனங்கள் அவருக்குப் பட்டங்களும் கௌரவங்களும் தந்து பாராட்டியுள்ளன.

இந்திய அணுசக்தி விசாரணைச்சபை உறுப்பினராக 1948இல் நியமனம் பெற்ருர். ஐக்கிய நாடுகளின் ஆதரவில் நடைபெற்ற மகாநாடுகளுக்கும், பிற சர்வதேச மகா நாடுகளுக்கும் இந்தியாவின் பிரதிநிதியாகச் சென்றிருக்கிருர். இராஷ்ட்ரபதி இராஜேந்திரப் பிரசாத் 'பத்ம பூஷண்' என்ற பட்டத்தை இவருக்கு வழங்கினுர். அவரது பேராசிரியரும் நோபல் பரிசாளரும் ஆகிய டக்டர். சி. வி. இராமன், அவரது நெருங்கிய நண்பர். டக்டர். எஸ். என். போஸ் ஆகியோருடன் திரு. கே. எஸ். கிருஷ்ணனும் ஒரு 'தேசிய பேராசிரியராக' நியமனம் பெற்று இந்திய அரசாங்கத்தின் பாராட்டை மேலும் பெற்ருர்.

## இலக்கியப் பிரியர்

தென் தமிழ் அன்பர்களும் வடமொழி அன்பர்களும் டக்டர். கிருஷ்ணன், இந்திய தத்துவ ஞானம், பண்டைய இந்துப் பண்பாடு என்பவற்றைப்பற்றி இன்பகரமாகப் பேசவல்ல அறிஞர் என்பதை மறக்க மாட்டார்கள். கடினமான விஞ்ஞான, தத்துவஞான உண்மைகளை எளிய தமிழில் விளக்க வல்லவர். வாழ் நாள் முழுவதும் விஞ்ஞான ஆராய்ச்சியில் ஈடுபட்ட போதிலும், தமிழ் இலக்கியத்திலும், வடமொழி இலக்கியத்திலும் சிறப்பான ஈடுபாடு உடையவர். இம்மொழிகளில் உள்ள பக்திப் பாடல்களிலும், ஞான சாத்திரங்களிலும் இவருக்கு மிகுந்த பற்று உண்டு. கல்கத்தாவிலும் புதுடில்லியிலும் உள்ள பல, கலை கலாசாரக் கழகங்களின் தாபகத் தலைவராக அவர் இருக்கிருர். விஞ்ஞானத்திலும், தத்துவ ஞானத்திலும் உள்ள ஈடுபாட்டைத்தவிர, அவர் ஒரு ஆர்வமுள்ள 'பிரிட்ஜ்', 'டெனிஸ்' ஆட்டக்காரரும்கூட. எவர் மத்தியிலும் கலகலப்பாகப் பழகவல்லவர்; குழந்தை உள்ளம் படைத்தவர்.

அவரது அறுபதாண்டு நிறைவேறியுள்ள இந்த நேரத்தில் பல்லாண்டு வாழ்ந்து பணிபுரிய வேண்டுமென்று அவரை அறிந்தவர்கள் அனைவரும் மனப்பூர்வமாக வாழ்த்துகிருர்கள்.


இழந்த இரத்தத்தை விருத்தி செய்ய

ஓர் அரிய யோசனை

டாக்டர் டிஸ்கிஸன்ஸ்

**ஹெப்பற்ரோ - B12**

**(Hepato - B12)**

இழந்த இரத்தத்தை விருத்தி செய்வதுடன்
**பாண்டு, இரத்தமின்மை**
ஆகியவற்றுக்கும் வலிமையூட்டும்.
அற்புதமான மருந்து

கிடைக்குமிடம்:

**புதிய மலாயன் அப்போதிக்கரீஸ் கம்பெனி**

268, ஆஸ்பத்திரி வீதி, : : யாழ்ப்பாணம்

விளையாட்டுப் பகுதி

# மலாயா அளிக்கும் மகத்தான வெள்ளிக்கிண்ணம்

**யா**ழ்ப்பாண விளையாட்டுச் சங்க உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் முன்னணியில் நின்ற கிரூஸ் ஹாப்பர்ஸ் விளையாட்டுக் கழகம் வென்ற ஆட்டத்தைப் பின்னர் தோற்ற புதுமை இவ்வாரம் நடைபெற்றிருக்கிறது. இவர்களிடம் தோல்வியடைந்த யூனியன் ராஜா கோஷ்டியினர் ஒரு ஆட்சேபத்தைக் கிளப்பினர். ஒரு ஆட்டக்காரருடைய பெயரில் முதல் எழுத்து மாருட்டமே காரணம். அவ்வாட்டக்காரர் விண்ணப்பங்கள் அனுப்பிய போது, தாம் இல்லாதமையால் வேறு யாரோ தவறுதலாக முதலெழுத்தைப் பதிந்துவிட்டார்களெனவும் தாம் அப்பிழையைத் தொடர்ந்து செய்தது குற்றமெனவும் ஒப்புக்கொண்டார். அதற்குத் தண்டனையாக அவர் மேற்கொண்டு ஆட்டத்திற் கலந்துகொள்ளாமல் தடுக்கப்பட்டதோடு, முடிவு பெற்ற அந்த ஆட்டத்தில் வெற்றியும் யூனியன் ராஜாவுக்கு வழங்கப்பட்டது. இரசிகர்கள் கிரூஸ் ஹாப்பர்ஸுக்கும் விக்டோரியன்ஸுக்குமிடையே நடைபெறவிருந்த ஆட்டத்தைப்பார்க்கத் திரண்டு வந்து ஏமாந்தனர். கைக்கெட்டியது வாய்க்கெட்டாமல் இழந்த கிரூஸ் ஹொப்பர்ஸ் அந்த ஆட்டத்திற் கலந்து கொள்ளவில்லை.

★ **சென்ற் அந்தோனிஸ் கோஷ்டி** இவ்வாண்டு முதற் பிரிவு வெற்றி வீரராக அடிதடியின் பின் வெற்றியீட்டினர். மூன்று ஆட்டங்களில் வெற்றி தோல்வியின்றிக் கலந்துகொண்டமையால் சம்பியனுகும் வாய்ப்பை இழந்திருந்த சென்ற் அந்தோனியாஸ், சென்ற்மேரீஸ் கோஷ்டியோடு ஆடிய ஆட்டத்தில் கிரூஸ்ஹாப்பர்ஸ் ஒதுக்கப்பட்டதன் காரணமாக எதிர்பாராத உற்சாகம் காணப்பட்டது. ஆட்டம் தொடங்கிய சில நிமிஷங்களில் அவர்கள் ஒரு கோலைப் பெற்றனர். அதைத் தொடர்ந்து சென்ற் மேரீஸ் அடித்த ஒரு பந்து கோல் காப்பவரில் பட்டுத் திரும்பி வந்த பின் ஒருவர் விளையாடும்போது அவர் பக்கத்தைச் சேர்ந்த இருவர் தவறுநிலைக்குச் சென்றுவிட்டமையாற் கோல்பெறும் சந்தர்ப்பத்தை இழந்தனர். இடைவேளையின் பின் துரிதமாக ஆடிய சென்ற் அந்தோனிஸ் கோஷ்டி மிகத்துரிதமாக இரு கோல்களைப் பெற்றது. பின்பு அவர்கள் சற்றுத் தளர்ந்த போது சென்ற் மேரீஸ் இரு கோல்களைப் பெற்றது. ஆட்டத்திற் சுவாரஸ்யம் மிகுந்தது. ஆரவாரம் அதிகமாயிற்று. சென்ற்மேரீஸ் இடது வெளிப்புறவீரர் வீரசிங்கம் கையால் அடிக்கடி தள்ளிய காரணத்துக்காக எச்சரிக்கை செய்யப்பட்டார். அதன்பின் பீரிஸ் என்னும் சென்ற் அந்தோனிஸ் வலது முன் காவல் வீரர் வீரசிங்கத்தின் கால்களைக் கொழுவிப் பிடித்துக் கொண்டார். வீரசிங்கம் குனிந்து பீரிஸைக் கையாற் புரட்டினர். மத்தியஸ்தர் இருவரையும் மைதானத்திலிருந்து வெளியேற்றினர். வெளியே போனவர்களில் ஒருவர் இரசிகர்களால் தாக்கப்பட்டார். எல்லோரும் கைகலந்தனர். ஆட்டம் முடிவடைய ஐந்து நிமிஷங்களிருந்தன. கடுமையான கைகலப்பைப் பொலீஸார் குண்டாந்தடியுடன் பிரவேசித்து அடக்கினர். ஆட்டம் தொடர்ந்து நடைபெற்றது. சென்ற் அந்தோனிஸ் 3-2 கோல்களினுல் வெற்றி பெற்றனர். இக் கைகலப்பும் அடிதடியும் வருத்தத்துக்குரியன. தவிர்க்கப்பட்டிருக்கவேண்டியவை. திரு. எஸ். ஸ்ரீநிவாசன் மத்தியஸ்தம் வகித்தார்.

★ **வலி வடக்கு விளையாட்டுச் சங்கம்** மார்ச் மாதம் முதலாந் திகதி 25 மைல் சைக்கிளோட்டப்போட்டியொன்றை நடத்த ஏற்பாடு செய்திருக்கிறது.

★ **அகில இலங்கைக் கைப் பந்தாட்டப் போட்டியில்** மூன்ருவது தடவையாகக் கம்பஹா கோஷ்டியினர் வெற்றியீட்டியுள்ளனர். அவர்கள் இறுதிப் போட்டியில் மினுவாங்கொட பராக்கிரம கைப்பந்தாட்டக் கோஷ்டியுடன் ஆடினர். கம்பஹாக் கோஷ்டிக்கு 3 ஆட்டங்களிலும் மினுவாங்கொடைக்கு இரு ஆட்டங்களிலும் வெற்றி கிடைத்தன.

★ **இலங்கையைச் சேர்ந்த காமினி குணசேனு** என்னும் கிரிக்கட் ஆட்டக்காரர் 'சுருள்' பந்து வீசுவதுபற்றி ஒரு நூல் எழுதியுள்ளார். பிரசித்திபெற்றவர்கள் எழுதும் கிரிக்கட் ஆட்ட நூல் வரிசையில் இது வெளியாகுமெனத் தெரிகிறது.

★ **ஆசிய கனிஷ்ட வெற்றிக் கிண்ண உதைபந்தாட்டப்போட்டி** ஏப்ரல் 18ந் திகதி மலாயாவில் ஆரம்பமாகிறது. அக்கிண்ணத்தின் விலை 12,000 வெள்ளிகள். முன்னுள் முதலமைச்சர் துங்கு ரஹ்மாஞல் இது வழங்கப்பட்டது. இது வரை இப்போட்டியிற் கலந்துகொள்ள இசைந்துள்ள நாடுகள் தென் கொரியா, சிங்கப்பூர், யப்பான், பர்மா, தாய்லாந்து, இலங்கை ஆகிய ஆறுமாம்.

கோஷ்டியைத் தெரிவு செய்ய மாகாண வாரியாக தெரிவுகள் நடைபெறுகின்றன. யாழ்ப்பாண மாணவர் தெரிவுக்கான பயிற்சி பண்ணை மைதானத்தில் நடைபெறுகிறது.

★ **மேற்கு இந்தியாவுக்கும்,** இந்தியாவுக்குமிடையே நடைபெற்ற ஐந்தாவது கிரிக்கட் போட்டி ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது. 5 போட்டிஆட்டங்களிலும் மேற்கு இந்தியர் 3ஆட்டங்களில்வெற்றி பெற்றனர். 2 ஆட்டங்கள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தன. இந்தியரில் போர்டே மட்டும் ஒரு தடவை 100 ஓட்டங்கள் பெற்ருர். மேற்கு இந்தியர் 9தடவை இச்சாதனையை நிறைவேற்றினர்.

★ **மேற்கு இந்தியருக்கும் பாகிஸ்தானியருக்குமிடையே** நடைபெறும் மூன்ருவது கிரிக்கட் போட்டி ஆட்டம் பெரிய வெள்ளிக்கிழமை(Good Friday) ஆரம்பமாவதை ஜமேக்காவின் பிரதம குரு டாக்டர் பெரிஸிவல் ஜிப்சன் பலமாக ஆட்சேபித்துள்ளார்.

★ **மேற்கு இந்திய கிரிக்கட் வீர**ரில் வேகமாய்ப் பந்து வீசும் கில்கிறிஸ்ட் என்பவர் ஒழுங்கு நடவடிக்கை காரணமாகத் திருப்பி அனுப்பப்பட்டுவிட்டார். பாகிஸ்தானில் மேற்கிந்தியக் கோஷ்டி செய்யும் சுற்றுப் பிரயாணத்தில் அவருக்கு இடமில்லை.

★ **அவுஸ்திரேலியாவுக்கும், இங்கிலாந்துக்குமிடையே** நடந்த ஐந்தாவது கிரிக்கெட் போட்டி ஆட்டத்தில் அவுஸ்திரேலியா 9 விக்கெட்டுகளினுல் வெற்றியடைந்தது. இப்போட்டியிற் கலந்துகொண்ட அவுஸ்திரேலிய பந்துவீச்சு வீரர் லின்ட்வோல் 'டெஸ்ட்' கிரிக்கெட் போட்டிகளில் அதிகப்படியான விக்கட்டுகளைக் கைப்பற்றி ஒரு புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளார். அவுஸ்திரேலிய கோஷ்டித் தலைவர் றிச்சி பெனே மிகவும் பாராட்டுக்குரியவர். போட்டி ஆட்டங்கள் ஐந்திலும் நான்கில் அவுஸ்திரேலியாவெற்றிபெற்றுள்ளது.

சினிமா உலகம்

# திரையில் வாசனை

### 'கூடிவாழ்ந்தால்......'

★ டி. எஸ். ராஜகோபால் டைரக்ட் செய்யும் "கூடி வாழ்ந்தால் கோடி நன்மை" என்ற படம், மொழி வெறியைக் கண்டிக்துப் பல்வேறு மொழிகளினதும் ஒற்றுமையையும் உணர்த்தும் குறிக்கோளைக் கொண்டதாம். நகைச்சுவை நிறைந்த இப்படத்தில் எஸ். எஸ். ராஜேந்திரன், பி. எஸ். சரோஜாதேவி முதலியோர் நடிக்கின்றனர்.

★ தென்னிந்திய நடிகர் சங்கம் 8-2-59 இல் அதனுடைய நிர்வாகக் குழுவினரைத் தேர்ந்தெடுத்தது. நடிகை அஞ்சலி தேவி சங்கத்தின் தலைவராகப் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப் பட்டார். நடிகர் சங்க கட்டட நிதிக்காகப் பல நடிகர்கள் பண உதவி அளிப்பதாக வாக்களித்தனர்.

### பரிசு ரூபா 25,000

★ தீண்டாமை ஒழிப்புக்கு ஆதரவு தரும் வகையில் பம்பாய் அரசினர் தீண்டாமை ஒழிப்புப் பற்றிப் பிடிக்கப்படும் சிறந்த படத்திற்கு 25,000 ரூபாய் பரிசளிக்கத் தீர்மானித்திருக்கிறது. பம்பாயில் தயாரிக்கப் படும் இந்தியப் படங்கள் மட்டுமே இந்தப் பரிசுக்குரியதாகக் கருதப்படும்.

### விஞ்ஞானம்பற்றி

★ கிரகங்களிடையே பிரயாணஞ் செய்யும் விஞ்ஞான ஆராய்ச்சிபற்றியும், ராக்கெட்டுகளைப்பற்றியும் நானூறுக்கு மேற்பட்ட திரைப் படங்களை மூன்று வருட காலத்திற்குள் தயாரிக்கத் திட்ட மிட்டிருக்கிருர்கள் சோவியத் தயாரிப்பாளர். நாற்பது வருடங்களுக்குப் பின் ருஷியாவும் அதைச் சுற்றியுள்ள உலகமும் எவ்விதம் காட்சியளிக்கும் என்ற கண்ணேட்டத்துடன் '1998' என்னும் தலைப்பில் ஒரு படம் தயாரிக்கப்படும்.

### திரையில் வாசனை

★ இதுவரை கண்ணுக்கும் காதுக்கும் விருந்தளிக்கச் சினிமாப் படம் தயாரித்து வந்தவர்கள் இப்பொழுது மூக்குக்கும் விருந்தளிக்கத் தீர்மானித்துள்ளனர். காட்சி, கீதம் நிறைந்த படங்களுடன் இனிமேல் "வாசனை" நிறைந்த படங்களும் வெளிவருமாம்! படமாளிகையில்உங்கள் பக்கத்தில் ஏதாவது துர்நாற்றம் வீசினுல் பக்கத்திலுள்ளவரிடம் சண்டைக்குப்போய்விட வேண்டாம்! அது திரையிலிருந்து வரக்கூடும்! இந்த நூதனத் தயாரிப்பை ஜேம்ஸ் கார்டிப் என்னும் புகழ்பெற்ற ஒளிப் பதிவாளர் தயாரிப்பார்.

### கேலித் திரைப்படங்கள்

குழந்தைகளுக்காகத் திரைப் பட்டக் கேலிப் படங்களைத் (கார்ட்டூன்) தயாரிப்பதுபற்றி இந்திய அரசாங்கச் செய்தித் திரைப்படப் பிரிவினர் திட்டமிட்டிருக்கின்றனர்.

### செசில் பி. டிமில்

சினிமா உலகின் தயாரிப்பாளர்களுள் 'முடி சூடா மன்னன்' ஆக விளங்கிவந்த செஸில் பி. டிமில் என்னும் ஹாலிவுட் தயாரிப்பாளர் ஜனவரி மாதம் 21 ஆம் திகதி மாரடைப்பால் காலமானர். இறக்கும்பொழுது இவருக்கு வயது 77. இம்மேதையின் படங்களுள் "சாம்ஸனும்டிலைலாவும்", "பத்துக் கட்டளைகள்" ஆகிய படங்கள் உலகப் புகழ் பெற்றவை.

# வெள்ளித் திரையில் "சுதந்திரப் போர்"

**இ**ந்தியாவிற் சென்ற ஆண்டில் 293 படங்கள் தயாரிக்கப்பட்டன. ஹோலிவுட் சென்ற ஆண்டிலே தயாரித்த படங்களின் எண்ணிக்கையை விட இது அதிகமானது. ஆண்டு ஒன்றுக்கு 500 க்கு குறையாத படங்களைத் தயாரித்த ஹோலிவுட் இப்போது மூன்ருவது தானத்தை வகிக்கின்றது.

சென்ற ஆண்டில் மட்டும் 480 படங்கள் தயாரித்த யப்பான் உலகிலேயே முதலாவது இடத்தைத் தட்டிக்கொண்டது.

**சுதந்திரப்போர்**

பிரபல தயாரிப்பாளரும் எழுத்தாளருமான கே. ஏ. அப்பாஸ் இந்திய சுதந்திரப் போரை விளக்கும் செய்திப் படம் ஒன்றைத் தயார் செய்கின்ருர். உத்திரப்பிரதேச அரசினரின் ஆதரவில் இம்முயற்சி நடைபெறுகின்றது. இதற்காக அப்பாஸ் எழுதியுள்ள திரைக்கதை வசனங்களை உத்திர பிரதேச அரசினர் பரிசீலனை செய்து அங்கீகரித்துவிட்டனர். சமீபத்தில் டில்லியில் நடைபெற்ற குடியரசுத்தின விழாக் கொண்டாட்டத்தின் சில காட்சிகளையும் அப்பாஸ் இதற்காகப் படமாக்கியிருக்கின்ருர்.

* * *

**ஒரே வழி:** வாசு பிலிம்ஸாரின் இப்படம் ஜெமினியில் தயாராகி வருகிறது. இது ஓர் உணர்ச்சி மயமான சமூகக் கதையைச் சித்திரிக்கிறது. இதன் கதை வசனத்தை ஜாவர் சீதாராமன் எழுதியிருக்கிருர். இதில் எம். என். ராஜம், ஸ்ரீரஞ்சினி, பிரேம்நசீர், டி. எஸ். பாலையா மற்றும் பல பிரபல நடிகர்கள் நடித்து வருகிருர்கள். இப்படத்தை சங்கர் டைரக்ட் செயகிருர்.

# காந்திஜியாக நடிக்கும் ஆங்கிலேயர்

### காந்திஜி வாழ்க்கைப் படம்

சேர் அலெக் கினிஸ் என்னும் ஆங்கிலேய நடிகர், மகாத்மா காந்தியின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் படமொன்றில் காந்தி மகானுகத் தோன்றுவாராம். இவர் ஆங்கிலத்திரையுலகில் அதிக புகழும், பரிசுகளும் பெற்ற திறமை மிக்க நடிகர்.

தென் இந்தியத் திரையின் "வில்லன்" பாலையா '**சுவீகாரம்**' என்னும் கதையைத்தானே எழுதிப் படமும் எடுக்கப் போகின்ருராம். வி. எஸ். நாராயணன் டைரக்ட் செய்யும் இப்படத்தில் முக்கிய பாகங்களை சிவாஜி கணேசனும், ராகினியும் நடிக்கிருர்கள்.

### "கடன் வாங்கி கல்யாணம்"

முதல்தர நடிக நட்சத்திரங்கள் நடித்திருக்கும் '**கடன் வாங்கி கல்யாணம்**' என்னும் விஜயா பிக்ஸர்ஸாரின் படம் வயிறு புடைக்கச் சிரிக்கப் பண்ணும் ஓர் ஆனந்தரசப் படமாம். இது இப்பொழுது தென்னிந்தியாவில் வெற்றிகரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

### பெரிய சர்க்கஸ் :

ஹாலிவுட் படத்தயாரிப்பாளர் சினிமாஸ்கோப்பில் ஒரு பிரமாண்டமான தயாரிப்பை மேற்கொண்டிருக்கிருர்கள். இது ஒரு சர்க்கஸ் படம். இதன் பெயர் "பெரிய சர்க்கஸ்" என்பதாகும்.

கட்டடங்களுக்குத் தேவையான பொருட்களுக்கு



போன் : 697

சண்முகம் ஸ்ரோர்ஸ்

பிரபல இரும்பு வியாபாரிகள்

222, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

2 வது குதூகல மாதம்

## கிங்ஸ்லி பிளாஸா வெலிங்டன்

(கொழும்பு) (வெள்ளவத்தை) (யாழ்ப்பாணம்)

மற்றும் எட்டுத் திரைகளில்

மக்கள் மனதை மகிழ்விக்கும்

சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், சாவித்திரி, பாலையா, தங்கவேலு, சந்திரபாபு, எம். என். ராஜம், நாகையா, விஜயகுமாரி நடித்த

— புத்தா பிக்சர்ஸ் —

# பதி பக்தி

வெகுவிரைவில் உங்கள் எல்லோர் ஆவலையும் பூர்த்தியாக்கும்

# பொம்மை கல்யாணம்




நடிகர்கள் :

- சிவாஜி கணேசன்
- ஜமுனா
- நாகையா
- ரங்கராவ்
- (பிரண்ட்) ராமசாமி
- சாந்தகுமாரி
- மைனவதி
- சுந்தரிபாய்

அன்றும் இன்றும் என்றும் ரசிகர் உள்ளத்தை மகிழ்வித்த

சினிமா ஸ்தாபனத்தார்

இவ்வருடத்தில் திரையிடவிருக்கும் சில

இன்பத் திரைக்காவியங்கள்

- நாடோடி மன்னன் : எம். ஜி. ராமச்சந்திரன், பி. பானுமதி
- காத்தவராயன் : சிவாஜி கணேசன், சாவித்திரி
- கடன்வாங்கிக் கல்யாணம் : ஜெமினி கணேசன், சாவித்திரி
- தேசிங்கு இராஜன் : எம். ஜி. ராமச்சந்திரன், பீ. பானுமதி
- அதிசயத்திருடன் : ஜெமினி கணேசன், ஜமுனா
- பெற்ற மகனை விற்ற அன்னை : எஸ். எஸ். ராஜேந்திரன், விஜயகுமாரி
- மின்னல் வீரன் : ரஞ்சன், சந்தியா
- சம்பூரண ராமாயணம் : சிவாஜி கணேசன், பத்மினி
- ஒரே வழி : சகஸ்ரநாமம், எம். என். ராஜம்
- சிம்போ (கேவா கலர்) : சித்திரா—அசாட்
- மனமுள்ள மறுதாரம் : பாலாஜி, பி. சரோஜாதேவி

கடைசி வாரம்!

## சென்ட்ரல் ஓடியன் ராணி

(கொழும்பு) (கல்கிசை) (யாழ்ப்பாணம்)

தினசரி மாலை 6-00 மணி இரவு 9-30 மணிக்கு

பகல் காட்சி சனி - ஞாயிறு 2 மணி - காலைக்காட்சி ஞாயிற்றுக்கிழமை 10 மணி

★ ஸ்ரீராம் ★ பண்டரிபாய் ★ கே. ஏ. தங்கவேலு

— இன்னும் பலர் நடிக்கும் —

# நீலாவுக்கு நெறஞ்ச மனசு

விரைவில் வெளிவரும்

சென்ட்ரல் — ஓடியன் — ராணி — லாஸா — ஜோதி

(மருதானை) (கல்கிசை) (யாழ்ப்பாணம்) (கண்டி) (திரிகோணமலை)

ஆகிய ஐந்து தியேட்டர்களில் திரையிடப்படவிருக்கும்

— அன்ன பூரண பிக்சர்சாரின் —

# "மஞ்சள் மகிமை"

தமிழ்

நட்சத்திரங்கள் :

- ★ ஏ. நாகேஸ்வரராவ்
- ★ பி. கண்ணம்பா
- ★ ராஜசுலோசனா
- ★ எஸ். வி. ரங்கராவ்
- ★ கே. சாரங்கபாணி
- ★ சாவித்திரி
- ★ சுந்தரிபாய்
- ★ கே. ஏ. தங்கவேலு
- ★ ஜி. வரலட்சுமி
- ★ பாலாஜி

நடனம் : ராஜசுலோசனா — ராகினி — சுகுமாரி.

வசனம் : ஸ்ரீதர்.

**இதுவரை திரையுலகில் கண்டிராத ஓர் அற்புத திரைஓவியம்!**

**ரசிகர்களைக் குதூகலக்கடலில் ஆழ்த்தக்கூடிய ஹாஸ்ய நடிப்பு**

இப்பொழுது திரையிடப்படுகிறது!

சிலோன் தியேட்டேஸாரின் தியேட்டர்களில் மிகத்தொகையான ரசிகர்களை மகிழ்விக்கும் திரைச்சித்திரம்.



நடிகர்கள்:

- ★ சிவாஜி கணேசன்
- ★ பானுமதி
- ★ ராஜசுலோசனா
- ★ எம். என். நம்பியார்

நடனம்:

கமலா லக்ஷ்மணன்

ஈ. வி. சரோஜா

மற்றும் பலர் நடிக்கும்

# சாரங்கதரா

(தமிழ்)

# உருமாறி வரும் யாழ்ப்பாணம்

அடையாளம் கண்டுபிடிக்க முடியாத வகையில் உருமாறி வரும் யாழ்ப்பாண நகரம் இப்போது அழகும் பொலிவும் பெற்று விளங்குகிறதெனக் கடந்த சில வருடங்களாகத் தென்னிலங்கையில் வசித்து விட்டு இங்கு திரும்பியிருக்கும் யாழ்ப்பாணத்து ஆசிரியர் ஒருவர் பெருமிதத்துடன் குறிப்பிட்டார். அவரது அபிப்பிராயம் ஆட்சேபிக்கக் கூடியதல்லவென்பதற்கு நகரிலே சுறுசுறுப்புடன் நடந்துவரும் அபிவிருத்தி வேலைகள் சான்று பகர்கின்றன.

## பெரியகடைச் சந்தை

சீர்திருத்த வேலைகளில் தீவிர ஊக்கம் காட்டிவரும் நகர சபையின் கவனம் பெரிய கடைச் சந்தைமீதும் படிந்திருப்பதில் வியப்பெதுவுமில்லை. அங்கு தற்போது பெட்டிக் கடைகள் வைக்கப்பட்டிருக்கும் ஒழுங்கும் அமைப்பு முறையும் அருவருக்கத்தக்கதென முன்னைநாள் மேயர் ஒருவர் பகிரங்கமாகக் கண்டித்திருந்தார். இக்குறைபாடுகளை நீக்குவதற்குத் தற்போதைய சபை முன் வந்திருக்கிறதென்பதைச் சந்தைக் கட்டிடத்தின் நடுவே வெட்டப்பட்டிருக்கும் அகழி எடுத்தியம்பிக் கொண்டிருக்கிறது. குட்டிச்சுவர் எழுப்புவதற்காகக் கடந்த இரண்டு மாதங்களுக்குமுன் அது வெட்டப்பட்டதாயினும் இன்னும் கவனிக்கப்படாமல் அப்படியே விடப்பட்டிருக்கிறது. சனநடமாட்டம் மிகுந்ததும் மிகக் குறுகலுமான இடத்தில் தோண்டப்பட்டிருப்பதுமான அந்த அகழி இப்போது பொறிக்கிடங்கு போல அபாயம் விளைவித்துக் கொண்டிருக்கிறதென்று பொது மக்கள் அச்சம் தெரிவித்துவருகின்றனர். குட்டிச்சுவர் கட்டும் வேலைக்கு ஒருவர் ஒப்பந்தம் செய்யப்பட்டதும் இடையிலே வேலை கைவிடப்பட்டிருப்பதும் ஏனோ தெரியவில்லை..

மீன் சந்தையைப் பொறுத்தவரையிலும் அருவருக்கத்தக்க புகார் ஒன்று தெரிவிக்கப்பட்டு வருகிறது. அதாவது மீன் சந்தை வாசலில் வைத்து மரக்கறி வகையும் தின் பண்டங்களும் விற்பனை செய்யப்படுவதே அக்குறைபாடாகும். ஏறத்தாழ 10 பேர்வரை அங்கு இவ்வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கின்றனர். நகரசபையின் சுகாதார ஒழுங்கு முறைகள் இச்செயலை எவ்வாறு அனுமதிக்கின்றனவோ தெரியவில்லை.

# தலதாபனங்களும் ஒப்பந்தமும்

தல தாபனங்களின் தலைவர் பதவிக்காக அங்கத்தவர்களிடையே பகிரங்க உடன்படிக்கைகள் நடப்பது இப்போது ஒரு வழக்கமாகிவிட்டது. ஆனால் இந்த உடன்படிக்கைகள் இடை நடுவில் முறிந்து விடுவதும் ஒரு சர்வ சாதாரண சம்பவமாக நிகழ்ந்து வருகிறது. சமீபத்திற் காங்கேசன் துறைப் பட்டினசபைத் தலைவர் தேர்தல் விஷயத்திலும் இந்தமாதிரி ஒரு காரியம் நிகழ்ந்தது. அங்கத்தவர்கள் ஏற்கனவே செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி இந்த ஆண்டுக்குத் தலைவராகத் தெரிவு செய்யப்படவேண்டியவர் திரு. தெட்சணாமூர்த்தியாகும். அவருக்குச் சந்தர்ப்பமளிக்கும் வகையில் 1958 ஆம் வருடத் தலைவர் டொக்டர் எஸ். சீனிவாசகம் தமது பதவியைத் துறக்கத் தயங்கவேயில்லை. கடைசி நேரத்தில் திரு. சீனிவாசகத்தையே மீண்டும் தலைவராக்கி ஒப்பந்தத்தின் முகத்திற் கரியைப் பூசிவிட்டனர். தமக்கு 1959 இல் தலைமைப் பதவி கிடைக்குமென நம்பியவரை அந்த ஒப்பந்தம் ஏமாற்றிவிட்டது. இத்தகைய நிகழ்ச்சிகளுக்கு அத்திவாரமிட்ட பெருமை யாழ்ப்பாணம் நகர சபையைச் சார்ந்தது.

# வேலை நிறுத்தம் பற்றிய ஆலோசனைகள்

பொது வேலை நிறுத்தம் பற்றிய வதந்தி பழைய தகரங்களின் மதிப்பை அதிகம் உயர்த்தி விட்டது. எரிபொருள்களைச் சேகரித்து வைப்பதற்காக அந்தத் தகரங்களை மூலை முடுக்கெல்லாம் தேடி வாங்கி வருகிறார்கள். அதேபோல உணவுப் பொருள்கள் மற்றும் அத்தியாவசியமான சாமான்கள் யாவும் பாதுகாப்பான பதுக்கிடங்களை நாடிக்கொண்டிருக்கின்றன.

வேலை நிறுத்தத்துக்கான பூர்வாங்க ஆலோசனைகள் பற்றி இங்கு பல்வேறு தொழிற்சங்கங்களும் அந்தரங்கக் கூட்டங்களை நடத்தி வருகின்றன. மேலிடத்து உத்தரவுக்குக் கட்டுப்பட்டு நடக்க அவை தம்மைத் தாமே தயார்படுத்திக் கொள்ள வேண்டுமல்லவா? புதன்கிழமை மாலை தொழிற்சங்கப் பிரதிநிதிகளின் மிகமுக்கிய ஆலோசனைக் கூட்டமொன்று நடைபெற்றது.

## பொதுக் கூட்டம்

கெடுபிடி மிக்க இந்த நேரத்தில் கோட்டை எம் பி. திரு. ரொபேட் குணவர்த்தனவும் யாழ்ப்பாணம் வரப்போகிறார். அவரும் திரு. வை. ஜி. ஜயசிங்கா எம். பி யும் யாழ்ப்பாணச் சமசமாசக் கட்சியின் அழைப்பின் மீது இங்கு வருகின்றனர். அவர்கள் சனிக்கிழமை காலை சுன்னாகத்திலும், அன்று மாலை பருத்தித்துறையிலும் கூட்டங்களிற் பேசுவர். ஞாயிற்றுக்கிழமை காலை யாழ்ப்பாணம் துறைமுகத்தொழிலாளர் சங்கக்கூட்டம்நடைபெறும். அன்று மாலை யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திற் பகிரங்கக் கூட்டம் நடைபெறும்.

## முளாயில் விவசாயப்பண்ணை

கூட்டுறவுச் சங்க அமைப்பின் கீழ் விவசாயப் பண்ணையொன்றை முளாயில் அமைப்பதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. கால் நடைகளை விருத்தி செய்வதில் அங்கு முக்கிய கவனம் செலுத்தப்படுமெனத் தெரிகிறது.


★ சேமிப்புக்கும்

★ சீதன சேமிப்புக்கும்

★ நவீன சேமிப்புக்கும்

சிறந்த ஸ்தாபனம்

இலங்கா நிதி லிமிற்றெட்

தலைமைக் கந்தோர்: திருநெல்வேலி

கிளை: வண்ணார்பண்ணை

( அதிகார மூலதனம் ரூபா 50,00,000/- )


# அடுத்த புரட்சியின் போது அவருக்கு.....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெறிகள் ஒழியவும் இந்த சர்வகலாசாலை உண்மையில் உதவுமாயின் அது தேசத்துக்கே நல்ல தொண்டாகும் அல்லவா?

## கேலிச் சித்திரம்

அமைச்சர் தகநாயகா வெளியிட்டுள்ள சவாலைப்பற்றி 'ஒப்சேர்வர்' பத்திரிகையால் கொலட்டும், டைம்ஸில் விஜயசோமாவும் கேலிச் சித்திரம் தீட்டியிருந்தார்கள்.

"பாதுகாப்புத் திருத்த மசோதாவைப் பற்றிப் பொது மக்கள் கருத்து அறிய யாரும் விரும்புகிறார்களா? காலி நகர சபையிலே நான் வகிக்கும் அங்கத்தினர் பதவியைத் துறந்து விடுகிறேன். அந்த ஸ்தானத்திற்கு என்னுடன் போட்டியிட யாரும் முன் வருவார்களா என்று சவால் விடுகிறேன்." எனத் 'தகா' ஓர் அறிக்கை வெளியிட்டார்.

" பாதுகாப்பு மசோதா நகரசபை விஷயமல்ல என்றும் தேசிய விஷயமென்றும்,ஆகவே "தகா" தனது எம். பி. பதவியிலிருந்து விலகி, தேர்தலுக்கு நிற்கட்டும். நாங்கள் அவருடன் அவர் தொகுதியிலேயே போட்டியிடுகிறோம்" என்று டாக்டர் என். எம். பெரேரா பதிற் சவால் விட்டார்.

குஸ்தி மேடையிலே எதிர்க் கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா கம்பீரமாக நிற்கிறார். ஆனால் பொக்குவாய்த் 'தகா' மத்தியஸ்தரின் பின்புறம் ஒளிந்துகொண்டு "எங்கள் வீட்டுக் கொல்லைப் புறம் சென்று, இவரைப் போன்றவருடன் தீர்த்துக் கொள்ளலாமே" என்று கூறுவதாக கொலட் கேலிச் சித்திரம் காட்டி, தகாவின் போலித்தன்மையை அம்பலப்படுத்திக் கேலிசெய்கிறது.

காலி என்ற நாற்காலியில் தகா அமர்ந்திருக்கிறார். அவர் காலடியிலுள்ள 'முனிஸிபல் ஸ்தானம்' எனும் பலகையை அவர் சுட்டிக்காட்டி "வாருங்கள் எல்லோரும்! முடியுமானால் இந்தக் காற்பலகைக்குப்போட்டியிடுங்கள்!" என்று கோபத்துடன் சவால்விடுவதாக டைம்ஸ் கேலிச்சித்திரம் காட்டுகிறது.

## வேலை நிறுத்தம்

பொது வேலை நிறுத்தத்தைப் பற்றி அரசாங்கமும் எதிர்க் கட்சியும் "முஸ்தீப்பு" செய்வதாக சில தினப்பத்திரிகைகள் வெளியிடுகின்றன வெனினும், 'டிரிபியூன்' பத்திரிகை கூறுவதும் பொதுமக்களில் பலரும் வேலைநிறுத்தம் பற்றி உற்சாகம் காட்டவில்லை, சில தொழிற் சங்கங்களும் ஒரு அடையாள வேலை நிறுத்தத்துடன் இதை முடித்துக் கொள்ளலாமென்றே பொதுவாக நம்பப்படுகிறது. வேலை நிறுத்தங்களை அடிக்கடி நடாத்தி, பொதுமக்களை கஷ்டங்களுக்குள்ளாக்க, எதிர்க்கட்சித்தலைவர் டாக்டர் என். எம். பெரேராவுக்குவுக்கு உண்மையில் இஷ்டமில்லையென்றும், ஆனால், அவரது கட்சியிலுள்ள சில தீவிரவாதிகள் வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்தத்துடியாய்த் துடிப்பதாகவும் கூறப்படுகிறது.

## பழைய குருடி

கொழும்புத்துறைமுகத்திற்கு வெளியே இப்போது ஐந்து கப்பல்கள் 'கியூ' வரிசையில்நிற்கின்றன. துறைமுகத்திற் குள் கொண்டு வரப்பட்ட கப்பல்களில் மிக மெதுவாகவே வேலை நடக்கிறதாம். சென்ற ஜனவரி மாதம் இரண்டாம் வாரத்தில் வந்த பதினைந்து கப்பல்களில் வேலையே ஆரம்பிக்கவில்லையாம். வடபகுதித் துறைமுகங்களைத் திறந்தால் இந்த நெருக்கடி ஓரளவு தீரலாம்.

# தமிழரும் மொழிச்சிக்கலும்.........

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

இது குறித்துப்பேராசிரியரை விசாரித்தேன். அவர் சொன்னார்;"இங்கு யாருடைய அழைப்பின் மீதும் நான் வரவில்லை. மலாயா செல்லும் வழியால் இங்கு வந்தேன். ஸ்ரீ ராமகிருஷ்ணமிஷனும் மற்றும் சில அன்பர்களும் முன்வந்து, சில பிரசங்கங்களுக்கு ஒழுங்கு செய்தார்கள். பின்னர் இந்துசமய ஆலோசனை சபையார், இலங்கையிற் பல இடங்களிலும் இந்துசமயத்தைப் பற்றிப்பிரசங்கங்கள் செய்ய வேண்டுமென்று கேட்டனர். அதை ஒத்துக்கொண்டு அவ்விதமே செய்தேன். ஒரு கூட்டத்திலும் நான் மொழிச்சிக்கலைப் பற்றிப் பேசவில்லை.

ஆனால் நான் இங்கு வந்ததும் யாரோ ஒருவர் மொழிச்சிக்கலைப் பற்றிக் கேட்டார். தமிழர் சிங்களம் படிப்பது நல்லதென்றும், ஒருவருக்கு எவ்வளவு மொழிகள் தெரிகிறதோ அவ்வளவும் நல்லதென்றும், உண்மையான சிக்கல் பொருளாதார அமைப்புப் பற்றியதேயன்றி, மொழி விஷயமல்லவென்றும் சொன்னேன். இலங்கையிலுள்ள மொழிச் சிக்கல் விபரங்கள் எனக்குத் தெரியாது. பின்னர் ஒருவர் வந்து கேட்டதற்கு இவ்விஷயம் பற்றிப் பேச நான் மறுத்து விட்டேன்" என்றார்.

## யோகிராஜ்

யோகிராஜ் சச்சிதானந்தர் நாளை ஞாயிறன்று சென்னை, கல்கத்தா, பாங்காக் மார்க்கமாக ஹாங்காங்குக்குப் புறப்பட்டுச் செல்லுகிறார்.

ஹாங்காங்கிலுள்ள திவ்ய ஜீவன சபையார், யோகிராஜை அங்கு சென்று ஆத்மீக பிரசங்கங்களைச் செய்து, யோகாசனப் பயிற்சியை அளிக்க வேண்டுமென்று அழைத்துள்ளனர். பிஜி, பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியா முதலிய நாடுகளிலிருக்கும் திவ்ய ஜீவன சபையாரும் யோகிராஜை வரவேற்க ஆவலுள்ளவராயும், அவரை 6 மாத காலமாவது கீழை நாடுகளில் தங்கியிருக்க வேண்டுமென்றும் கேட்டிருக்கிறார்கள்,

இந்த அழைப்பை ஏற்றுக்கொண்டு அப்பகுதிகளில் ஆத்மீகத் தொண்டு செய்யச் செல்லும் யோகிராஜ் அவர்கள் ஏப்ரல் கடைசிக்குள்ளாக இலங்கை திரும்பலாமென்று தெரிகிறது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இல்லத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கலாநிலையப் பதிப்பகத்தில் ஈழநாட்டுப் பத்திரிகையின் சொந்தக்காரருக்காக பாலசுப்பிரமணியம் சிவானந்தன் அவர்களால் அச்சிடப்பெற்று, எஸ். எம். யோசவ் வில்பிறட் அவர்களால் 1959-ம் ஆண்டு வெளியிடப்பெற்றது.